# மானிடர் தம் மயக்கம்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லா(ஹ்)வின் அனுக்கிரகம் முன்னிற்க. எங்கள் அதிபர், இறையருள் தூதர், சிருஷ்டிகளில் சிரேஷ்டர், முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாலும், அவர்களின் உற்றார், உறவினர், உயர் சகாக்கள்பாலும் ஸலவாத் என்னுங் கருணையும் ஸலாம் என்னும் ஈடேற்றமும் என்றென்றும் நிலவுக!

சிருஷ்டி, சேதனம் அசேதனம் என இரு வகைப்படும். சேதனம் விதிவிலக்குக்கு உட்பட்டுப் பகுத்தறிவு பெற்ற பிராணிகள், விதிவிலக்குக்கு உட்படாத பகுத்தறிவற்றவை என இரு வகைப்படும்.

இறைவன், தன்னை வழிபட்டு வணங்குவதற்குரிய அழைப்பை விதிவிலக்குகள் உட்பட்ட பகுத்தறிவு பெற்ற இனத்தை நோக்கியே விடுத்தான். அவ்வண்ணம் தன் ஆக்ஞைக்குச் செவ்வனே கட்டுப்பட்டு வழிபட்டோருக்குத் தவாப் என்னும் நற்கூலி தருவதாக வாக்களித்தான்; அதற்கு மாறாக நடக்கக் கூடாது எனக் கூறி அவ்வாறு மாறு செய்தோருக்கு அதாப் என்னும் கடுந்தண்டனை உண்டு என்று எச்சரித்தான். விதிவிலக்கில்லாத இரண்டாவது இனத்தை நோக்கி இவ்வாறு அவன் இயம்பவில்லை.

விதிவிலக்குக்கு உரித்தான, முந்திய வகையினரான பகுத்தறிவு பெற்ற இனத்தார் விசுவாசி (மூமின்)கள், அவிசுவாசி (காபிர்)கள் என்று இரு வகைப்படுவர்.

விசுவாசி எனும் பிரிவார் வழிபட்டோர், மாறுசெய்தோர் என இரு வகைப்படுவர். இவ்விரு வகையினரும் அறிந்தார் (ஆலீம்), அறியாதார் (ஜாஹில்) என மேலும் இரு வகைப் படுவர்.

இறைவன் நாடிக் காத்துக் கொண்ட ஒரு சிலரைத் தவிர, மீக் கூறிய விசுவாசி, அவிசுவாசி ஆகிய அனைவரையும் மதி மயக்கம் எனும் வியாதி பீடித்தேயுள்ளது. இன்ஷா அல்லாஹ், அவர்கள் ஒவ்வொருவருடையவும் மதிமயக்கத்தின் இயல்பைத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறோம். தக்க சான்றுகளுடனும், நியாயப் பிரமானங்களுடனும் சுருங்கக் கூறி விளங்கவைப்ப

தோடு, மனத்திற்படும்படியான சயிக்கினைகளுடன் தெளிவாக விளக்கஞ் செய்வோம். அல்லா(ஹ்)வின் புறமிருந்தே யொழிய நல்லுதவிக் கட்டளை கிடையாது. எல்லாம் வல்ல அவன் எமக்கு நல்லுதவி புரிவானாக!

அவிசுவாசிகளை விலக்கிவிட்டால், மதிமயங்கிய விசுவாசிகளை நான்கு வகையினராகப் பிரிக்கலாம். அவர்கள் முறையே, 1. கற்றறிந்தோர் (ஆலிம்)கள். 2. வணக்கஸ்தர் (ஆபிது)கள் 3. பணக்காரர்கள் 4. ஞானி (ஸூபி) கள் எனப்படுவர்.

## காபிர்களின் மயக்கமும் சிகிச்சையும்

விசுவாசி(மூமின்)களான இவர்களை நோட்டமிடுமுன், அவிசுவாசி(காபிர்)களின் மதிமயக்கத்தைச் சிறிது ஆராய்வோம்.

மதிமயங்கிய காபிர்கள் பூலோக வாழ்க்கைப் பற்றால் மதி மயங்கினோர், மதியை மயக்கிக் கலைக்கும் ஷைத்தானைக் கொண்டு இறைவன் விஷயத்தில் மதிமயங்கினோர் என இரு வகைப்படுவர்.

''நாளைக்குக் கிடைப்பதாகக் கூறி எதிர்பார்க்கப்படும் பொருளைவிட, இன்று கைமேலுள்ள பொருள் சிலாக்கிய மானது; எனவே, இதோ கையும் மெய்யுமாய் ஆனந்தத்துடன் நாம் அனுபவிக்கும் இவ்வுலக இன்ப வாழ்வுதான், நாளைக்கோ வேறு எப்போதோ உண்டாகப்போவதாகக் கூறிக் கொண்டிருக்கும் மறுமையின் வாழ்வைவிடச் சாலவும் சிறந் தது. எனெனில், பூலோக இன்பங்களை இதோ பிரத்தியட்ச மாக அனுபவிக்கிறோம்; ஆனால், மறு லோக வாழ்வோ உண்டாகும் காலத்தில் தான் நிஜம்; ஆகவே, அது சந்தேகப் பொருள்தான். சந்தேகப் பொருளைவிடச் சந்தேகமற்ற பொரு ளல்லவா மேன்மையானது!'' என்று பூலோக வாழ்வில் பற்றுக் கொண்டு மதி கலங்கிய முதற் கூட்டத்தினர் கூறுவர்.

இவர்களின் இம்முடிவு முழு மோசமானது. இஃது இப்லீ ஸின் தவறான போக்கைப் பின்பற்றியதாயிருக்கிறது.

வானவர்(மலக்கு)கள் யாவரும் ஆதிபிதா ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குச் சிரஞ்சாய்த்துக் கண்ணிய மளித்த காலையில் இப்லீஸ் என்ன சொன்னான் ?



''அவரைவிட நானே விசேஷமானவன். (அனகைரும் மின்ஹு) நீயே என்னை நெருப்பினின்றும் படைத்தாய்; அவரையோ களிமண்ணினின்றும் படைத்தாய்'' (திரு குர் ஆன் *38:76.*) என்று அவன் கூறிக் கெட்டான். நெருப்பானது ஜோதி மயமான பொருளாயும் களிமண்ணானது இருள் மயமான பொருளாயும் இருப்பதால், தானே விசேஷமானவன் என்று வெளிப் பொருளை மட்டும் நோக்கி அவன் மதி கலங்கினான். அல்லா (ஹ்)வின் ஏற்பாடுகளிலுள்ள தீர்க்கமான மிகச்சிறந்த அந்தரங்க அம்சங்களை அவன் உணரவில்லை. மதி மயங்கிய இவர்களின் போக்கும் இத்தகையதாகவே இருக்கிறது.

இத்தகைய மதிமோசத்துக்கு இரண்டு சாதனங்களைக் கொண்டு சிகிச்சை புரியலாம். அவை, ஈமானுடைய திட நம்பிக்கையும் ஆராய்ச்சிப் பூர்வமாய்க் காணும் உண்மையுமாம்

முதல் வகையான ''ஈமானுடைய திட நம்பிக்கை'' விவர மாவது: அல்லா(ஹ்)வும், ரஸூலும் அருளியவையனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மையென முற்றாய் நம்பி நிர்ணயங் கொண்டு, இம்மை மறுமை பற்றி அல்லாஹ் திருகுர்ஆனில் கூறியுள்ளவற்றை இதயப் பூர்வமாக ஒப்புகொண்டு விசு வாசிக்க வேண்டும். அதற்கு உதவக்கூடிய திரு குர்ஆன் வசனங் கள் சிலவற்றின் கருத்து வருமாறு:

''உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பவைகளெல்லாம் இவ்வுலக வாழ்க்கையிலுள்ள அற்பசுகமும், அதனுடைய அலங்காரமும்தாம். (ஆனால்) அல்லா(ஹ்)விடத்திலிருப்பவை (தவாபு என்னும் நற்கூலி, சுவர்க்கானந்தம், இறைதரிசனம் முதலியவை)களோ மிக்க சிரேஷ்டமானவையும், நிரந்தரமான வையும் ஆகும். இதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டாமா ?'' *(28:60).*

''எனினும், நீங்களோ (மறுமையை விட்டுவிட்டு) இவ் வுலக வாழ்க்கையையே விரும்புகிறீர்கள். மறுமையின் வாழ்க் கைதான் மிகமிகச் சிரேஷ்டமானதும் சாஸ்வதமானதுமாகும். நிச்சயமாக இது முன்னுள்ள வேதங்களிலும், இப்ராஹீம் மூஸா உடைய வேதங்களிலும் (கூறப்பட்டு) இருக்கிறது.'' *(87:16,17,18,19.)*

''நீங்கள் அறிபவர்களாயிருந்தால், அல்லா(ஹ்) வினிடத்தில் இருப்பதுதான் உங்களுக்கு மிகச் சிரேஷ்டமானதாகும் என்பதைக் கண்டுகொள்வீர்கள். உங்களிடமுள்ள (இம்மைப் பொருட்கள்) யாவும் செலவழிந்து போய்விடும்; (அல்லா(ஹ்) விடத்திலுள்ளவை (மறுமைப் பொருட்)களோ சாஸ்வதமாக நிலைபெற்றிருக்கும்.'' *(16:95,96.)*

''பூலோக வாழ்வென்பது மருட்சியுண்டாக்கும் சுகமே தவிர வேறில்லை.'' *(3:185.)*

''நிச்சயமாக (மறுமைபற்றிய) அல்லா(ஹ்)வுடைய வாக்குறுதி உண்மையானதாகும். ஆகவே, இவ்வுலக வாழ்க்கை உங்களை மயக்கிவிட வேண்டாம். (இப்லீஸாகிய) மாயக்காரனும் (அல்லா(ஹ்)வைப்பற்றி உங்களை மயக்கிவிட வேண்டாம்.'' *(31:33.)*

இவ்வசனங்களையும், பெருமானார் நாயகம் (ஸல்) அவர்களின் திருவாக்கியங்களையும் ஏற்று, விசுவாசித்து இம்மை வாழ்க்கையின் பற்றினால் உண்டான மதிமயக்கத்துக்கு அவர்கள் சிகிச்சை புரியவேண்டும்.

இரண்டாவது வகைச் சாதனமான, ஆராய்ச்சிப் பூர்வமாய்க் காணும் உண்மையின் விவரமாவது: ''உலக வாழ்க்கை கைமேல் ரொக்கமாகவும், மறுமை வாழ்க்கை பிற்பட்ட தவணையாகவும் உள்ளது''என்று அவர்கள் கூறுகிறார்கள். அஃது உண்மையேயாயினும், ''தவணையாக உள்ள மறுமையைவிட, ரொக்கமாக உள்ள உலக வாழ்க்கைதான் சாலவும் சிறந்தது'' என்று அவர்கள் கூறுவதுதான் அபத்தமானதும் வழி பிசகிய கூற்றுமாகும்.

ரொக்கத்துக்குக் கிடைக்கும் பொருள், அளவாலோ, ஆதாயத்தாலோ தவணைக்குக் கிடைக்கும் பொருளுக்குச் சமமானதாகவோ, அல்லது அதைவிட உயர்வானதாகவோ, விசேஷமானதாகவோ இருந்தால் அவர்கள் கூறுவது சரிதான். ஆனால், ரொக்கத்துக்குக் கிடைக்கும் பொருள் தவணைக்குக் கிடைப்பதைவிட மிகமிகக் கடையான, அற்பமானதாக வல்லவா இருக்கிறது! அவற்றிடையே காணப்படும் தாரதம்மியம் மலைக்கும் மடுவுக்குமிடையேயுள்ளதாகவல்லவா இருக்கிறது! ரொக்கத்துக்குக் கிடைப்பதைவிடத் தவணைக்குக் கிடைக்கும் பொருள் பல கோடி மடங்கு மதிப்பும், உயர்வும், லாபமும், நிரந்தரமும் பெற்றதாகவல்லவா உள்ளது!ஆகவே அவர்களின் அக்கூற்று எப்படிப் பொருந்தும்?



ரொக்கப் பொருளான இவ்வுலக வாழ்வு அழியக் கூடியது; ஆனால், தவணைப் பொருளான மறுமை வாழ்வோ அழிவில்லாதது. ஆகவே, அற்ப சுகந்தரும் இப்பூவுலக வாழ்வைவிட, நிரந்தர சுகந்தமும் பேரின்ப வீடான மறுமையே சாலவும் சிறந்தது என்ற உண்மையை இவர்கள் உணரவேண்டும்.

''உலக இன்பத்தைப் பிரத்தியக்ஷமாக அனுபவிக்கிறோம். மறுமை இன்பமோ வந்தால்தான் நிஜம். சந்தேகமுள்ள அம் மறுமை இன்பத்தைவிடக் கைக்கெட்டியிருக்கும் உலக இன்பமே போதும்'' என்று அவர்கள் கூறுவதும் அபத்தமானதே. எனெனில், இறைவன் மீது நம்பிக்கை பூண்டுள்ள விசுவாசிக்கு மறுமைபற்றிக் கொஞ்சமும் சந்தேகங் கிடையாது. அசைவற்ற உறுதியுடன் மறுமையில் அவன் நம்பிக்கை கொண்டிருப்பான். இந்த நம்பிக்கை கீழ்க்காணும் இரு துறைகளில் உண்டாகும்:1. நபிமார்களையும், ஆலிம்களையும் பின்தொடர்ந்து பூண்டுள்ள விசுவாச நம்பிக்கை (தக்லீதுடைய ஈமான்). இது நம்பிக்கைக்குரிய நாணயமான ஒரு சரியான வைத்தியரின் சொல், முறைகளை ஏற்று அவர் கூறியபடி மருந்து சாப்பிடுவதற்கும், சிகிச்சை பெறுவதற்கும் ஒப்பாகும். 2. நபிமார்களுக்கு வஹீ மூலமும், அவ்லியாக்களுக்கு இல்ஹாம் மூலமும் உண்டான பிரத்தியக்ஷ ஞானத்தைப் படித்தறிந்து பூணும் நம்பிக்கை.

எம் பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் இம்மை, மறுமை சம்பந்தமான காரியாதிகளில், ஜிப்ரயீல் (அலை) என்ன சொன்னாரோ அதை அப்படியே நம்பும் நம்பிக்கை கொண்டார்கள் என்று எண்ணிவிட வேண்டாம். அவர்கள் நம்பிக்கை அவ்றானதன்று; பிறரைத் தொடர்ந்து அறியும் அறிவு அவர்களுக்கு உகந்ததல்ல. அத்தகைய (மஃரிபத்துத் தக்லீத்) பின் தொடர்ந்தறியுந் தன்மையிற்பெறும் அறிவை விட்டும் அவர்களை அல்லாஹ் பாதுகாத்துக் கொண்டான். நிதரிசனமாகக் காணாத அத்தாட்சி சரியாகாது. புறக் கண்ணால் சடப்பொருட்களைத் தெளிவாகக் காண்பது போல, அகக்கண்ணால் சர்வ இரகசியங்களையும், எல்லா மறைவான

பொருட்களையும் நாயகம் (ஸல்) கண்கண்ட காட்சியாய்த் தரிசித்தார்கள். எல்லாம் அவர்களுக்கு வெளியாயின; யாவற்றையும் அவர்கள் செவ்வனே ஸ்பஷ்டமாக அறிந்தார்கள்.

அல்லா(ஹ்)வையும், ரஸூலையும், மறுமை வாழ்வையும் மறந்து அல்லா(ஹ்)வின் ஏவல்களுக்கு மாற்றம் புரிந்து, உலக இச்சை என்னும் சாக்கடையில் புரண்டுழன்று, வெறும் வேஷத்தளவிலும், பெயரளவிலும் விசுவாசிகளாயுள்ள மூமின்களும் இத்துறையில் அவிசுவாசிகளோடும் சேர்த்தெண்ணப்படுகிறார்கள். பூலோக வாழ்வின் இச்சையானது விசுவாசிகளையும் அவிசுவாசிகளையும் பிணைத்து இவ்வண்ணம் மதிமயக்கி மறுமையை மறக்கச் செய்துவிட்டது!

இதுகாறும் நாம் கூறிவந்தது மதிமயங்கிய அவிசுவாசிகளில் முதல் வகையினரைப்பற்றி. அவர்களிலுள்ள இரண்டாம் வகையினரோ ஷைத்தானின் மாய வலையில் சிக்கி அல்லா(ஹ்)வின் விஷயத்தில் மதி மருட்சியடைந்துள்ளனர். மறுமையில் நம்பிக்கை பூணாத அவர்கள், ''அப்படியே மறுமை என்று ஒன்று வந்து அல்லாஹ் எழுப்புவதானால் தாராளமாக எழுப்பட்டுமே! மற்றவர்களைவிடப் பிரதானமாக எங்களையே இறைவன் எழுப்பட்டுமே'' என்று கூறுகிறார்கள்.

இத்தகைய மருட்சியுடைய ஒருவனின் போக்கு எப்படிப் பட்டதென்று திரு குர்ஆன் 'அல் கஹ்பு' அத்தியாயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சொத்து, சுகம் ஏராளமாகப் பெற்று, சுபிட்சமுடன் உலகில் வாழ்ந்த அவன், அதன்மூலம் மதிமயங்கிக் கர்வங்கொண்டு, தன் நண்பனைநோக்கி,'

''(நான் அனுபவித்து வரும் இந்த ஆஸ்தி, பூஸ்த்தி ஆகிய) இவை ஒரு காலத்திலும் அழிந்து விடுமென நான் நினைக்கவில்லை. மறுமை ஏற்படும் என்றும் நான் நம்பவேயில்லை. அப்படியே ஒருக்கால் (தப்பித் தவறி ஏற்பட்டு) என்னிறைவனிடம் நான் கொண்டு போகப்பட்டாலும், இங்கிருப்பதை விட அங்கு நான் மேலானவனாக இருப்பதையே காண்பேன்'' என்று கூறினான். *(18:35,36)*.

கெட்ட இப்லீஸின் கோணலான யோசனைகளாலும், பித்தலாட்டத்தாலும்தான் இத்தகையவர்கள் இவ்வாறு முழு மோசம் போயினர்.



மேலும், அவர்கள் உலகத்தில் தாங்கள் உல்லாசமாக அனுபவித்துவரும் இன்ப வாழ்வை நோட்டமிட்டுப்பெருமிதங்கொள்கிறார்கள். தாங்கள் ஆண்டவனுக்குகந்த நல்லடியார்களாய் இருப்பதனால்தான் குறைவில்லாச் செல்வத்தையும் சம்பவத்தையும் அவன் தங்களுக்குத் தந்தருளியிருக்கிறான் என்றும், எனவே அத் தன்மையிலேயே மறுமையிலும் அவன் தங்களுக்கு அனுகூலம் புரிவான் என்றும் அவர்கள் மனப்பால் குடிக்கிறார்கள்.

மேலும், அவர்கள் தங்களின் அந்தஸ்துபற்றித் தாங்களே தீர்மானித்துக்கொள்கிறார்கள். பூலோகத்தில் தாங்கள் அக்கிரமக்காரர்களாகவும் இறைவனுக்கு மாறுசெய்வோராகவும் இருக்கும் நிலைமையில் தங்களுக்கு எவ்விதத் தண்டனையையும் இறைவன் அளிக்கவில்லை யாகையால், மறுமையிலும் தங்களுக்கு எத்தகைய வேதனையையோ தண்டனையையோ அவன் தரமாட்டான் என்று எண்ணிக்கொண்டு, ''நாங்கள் கூறுகிற (இறைவனுக்கு மாற்றமான இத்தகைய) மொழிகளைக் கொண்டு அல்லாஹ் எங்களைத் தண்டிக்கட்டுமே (பார்ப்போம்)!'' *(58:8)* என்று நெஞ்சழுத்தத்தோடு பேசுகிறார்கள்.

மேலும் இவர்கள் தங்கள் அந்தஸ்துடன் விசுவாசிகளான மூமின்களின் அந்தஸ்தை ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். தாங்கள் சௌபாக்கிய செல்வத்தில் மூழ்கித் திளைப்பதையும் மூமின்கள் கஷ்டத்திலும் வறுமையிலும் வாடி வதங்குவதையும் காண்கிறார்கள். எனவே, அவர்கள் மூமின்களைப் பரிகசித்து, ''ஓஹோ, அல்லாஹ் (தனது அன்பிற்குதந்த நல்லடியார்களென்று) நமது மத்தியில் (சிறப்பாக்கி வைத்து) உதவிய மாந்தர்கள் இவர்கள்தாமோ?'' *(6:53)* என்று கேட்கிறார்கள். ''மேலும், அவிசுவாசிகள் மூமின்களை நோக்கி, (இவர்களின் மார்க்கம்) உண்மையானதாய் இருந்தால் நாங்கள் அதை அடைவதற்கு முன் இவர்கள் முந்திக்கொண்டு அதை அடைந்திருக்க மாட்டார்கள் என்றும் கூறுகிறார்கள்.'' *(46:11)*

''அந்த மூமின்களே தம்மை நல்லடியார்களாய்க் கருதிக் கொள்கிறார்கள். தாங்கள் ஆண்டவனின் அன்புக்கு உரித்தானவர்கள் என்றும் எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், உலகில் சர்வ சௌபாக்கியங்களும் எங்களுக்கல்லவா கிட்டுகின்றன!

அவர்களுக்கு அவ்வாறு யாதும் இல்லையே! உலக போக பாக்கியங்களனைத்தையும் அல்லாஹ் எங்களுக்கே அள்ளித் தருகிறான். காரணம் என்ன தெரியுமா? நாங்கள் அவன் அன்புக் குப் பாத்திரமானவர்களாயிருக்கிறோம்; ஆகவேதான், அவ் வாறு தருகிறான். அன்பளிப்புக் கொடுப்பதும் அன்பன்தான். எங்கள் மீது அவனுக்கு அன்பு இருக்கிறது; எனவே, இவ்வுலக இன்பங்களையெல்லாம் எங்களுக்கு ஈந்து பேருதவி புரிகிறான்'' என்று இம்மருட்சியாளர்கள் சூளுரைக்கிறார்கள். ஆனால், உண்மை அஃதன்று.

இறைவன் அவர்களுக்குச் சொத்து, சுகம், மனை, மக்கள், ஆஸ்தி முதலிய உலக சுகானுபவங்களனைத்தையும் கொடுத் திருப்பதென்னவோ உண்மைதான். அவற்றை அவன் கொடுத் திருப்பது அவர்கள் எண்ணியது போல் அன்பளிப்பாகவன்று; தன்னுடைய பலப் பரீட்சையைக் காட்டுவதற்காகவேதான். எதை அன்பளிப்பு என்று அவர்கள் இறுமாந்திருக்கிறார்களோ அதுவே அவர்களின் நாசத்துக்குக் காரணமாகிவிடும்.

இதையுணராது இறைவனின் விஷயத்தில் அவர்கள் மதிமருண்டு போயினர்.

இதனால் தான், ''நீங்கள் எவ்வாறு வியாதியஸ்தரை ஆகாரம், பானம் வகைகளில் பத்தியம் பேணிப் பாதுகாத்துத் தடுக்கிறீர்களோ அவ்வாறே, அல்லா(ஹ்)வும் தன் உண்மை விசுவாசியான நல்லடியானை உலக ஆசாபாசங்களிலிருந்தும் பாதுகாத்துத் தடுத்துக் கொள்கிறான்'' என்று நபி நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

இக்காரணம் பற்றியே, அகப்பார்வை பெற்ற பெரியார்கள் தம்மிடம் இம்மையின் செல்வம் வந்தடைந்த காலை கவலை யுற்றனர்; ஏழ்மையான வாழ்வு வாழ்ந்த போது பெருமகிழ் வடைந்து, ''இதுவே நல்லடியாருக்குரியது! இந்நற்பரிசு கொண்டு சோபனம், சோபனம்!'' என்று வாழ்த்தினர்.

இவ்வுண்மையை விளக்கும் திரு குர்ஆன் ஆயத்துகளின் கருத்து வருமாறு:

''ஆகவே, இறைவன் மனிதனைச் சோதித்து (பெரும் ஐஸ்வரியங்கள், சொத்து, சுகங்களை யீந்து உலக வாழ்வில்) அவனுக்கருள் புரிந்து, அவனைக் கண்ணியப்படுத்தினால், என்னுடைய இறைவன் என்னைக் கண்ணியப்படுத்தியுள்ளான் என்று (பெருமையாகக்) கூறுகிறான்.''



''ஆயினும், (இறைவன்) அவனைச் சோதித்து (அவனுக்கு ஏழ்மையான வாழ்வையளித்து) அவனுடைய பொருளைக் குறைத்துவிட்டால் எனதிறைவன் என்னை இழிவுபடுத்திவிட்டான் என்று (குறை) கூறுகிறான்.'' (திரு குர்ஆன். *89:15, 16.*)

''(நபியே) நீர் அவர்களைச் சிலகாலம் வரையில் அவர்களுடைய மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்க விட்டு விடும். நாம் அவர்களுக்குச் சந்ததிகளையும், பொருட்களையும் கொடுத்துவருவதைப் பற்றி அவர்கள் என்ன நினைத்துக் கொண்டனர்? அவ்வாறன்று! (அஃது எதற்காக என்பதை) அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.'' (*23:54, 55, 56.*)

''ஆகவே, எம்மையும், இவ்வசனங்களைப் பொய்யாக்கும் அவர்களையும் விட்டுவிடும்! அவர்கள் அறியாத விதத்தில் அதிசீக்கிரத்தில் அவர்களைக் கஷ்டத்தில் சிக்கவைப்போம். (ஆடுகின்ற ஆட்டமெல்லாம் ஆடட்டும் என்று சில காலம்) அவர்களை விட்டுவைப்போம். நிச்சயமாக நம்முடைய சூழ்ச்சி மிக்க பலமானது (அவர்கள் தப்பவே முடியாது).'' (*68: 44, 45.*)

''ஆகவே, தங்களுக்கு உபதேசிக்கப்பட்டதை அவர்கள் மறந்த காலையில் (உலக வாழ்வின்பத்தின்) சகல வஸ்துவி னுடைய வாயில்களையும் நாம் திறந்தருளினோம். அவ்வாறு அருளப்பட்டதைக்கொண்டு சந்தோஷமடைந்து கொண்டிருப் பார்கள்; அப்போது திடீரென்று நாம் அவர்களை (அவர்களின் நிலைமையை அடியோடு மாற்றி, வேதனை கொண்டு) பிடிப்போம். அப்போது, அவர்கள் கைசேதப்பட்டவர் களாயிருப்பார்கள்.'' (*6:44.*)

இத்தகைய எச்சரிக்கைகளை விடுக்கும் திரு குர்ஆன் வசனங்கள் ஏராளமாயுள்ளன. இறைவனுடைய சோதனை களைப் பற்றி மதிமயங்கி நிர்ப்பயமாயிருப்பவர்கள் அவனைக் கொண்டு விசுவாசம் பூண்டவர்களாயிருக்க முடியாது.

இவ்வாறான படுமோச மதிமயக்கத்துக்கு மூல காரணம் அல்லா(ஹ்)வைப் பற்றியும் அவனுடைய தன்மைகளைப் பற்றி யும் சரிவர அறியாதிருப்பதுவேயாகும். அல்லா(ஹ்)வை உண் மையில் உணர்ந்தவன் அவனுடைய உபாயமான சோதனை

களைப் பற்றி அச்சமற்றிருக்க மாட்டான்; பிர் அவுன், ஹாமான், நம்ரூது முதலியவர்களுக்குத் திரவியம், சொத்து, அரசாட்சி முதலியவைகளை அல்லாஹ் ஏராளமாக அளித்து இறுதியில் அவர்களை எப்பாடு படுத்தினான் என்பதையும் அவன் மறந்திருக்கமாட்டான். தன்னுடைய உபாயம் (மக்ரு) பற்றிச் சர்வ ஜாக்கிரதையோடிருந்துகொள்ளும்படி இறைவன் எச்சரித்துள்ளான்.

அல்லாஹ் திரு குர்ஆனில் அருளியுள்ளான்:

''நகரவாசிகள் - அவர்கள் நித்திரை செய்தவர்களாயிருக்கிற நிலைமையில், அவர்களுக்கு நம்முடைய வேதனை இரவில் வருவதைப் பற்றி அச்சந்தீர்ந்து விட்டர்களா? நகரவாசிகள் - அவர்கள் விளையாடுபவர்களாயிருக்கிற நிலைமையில் நமது வேதனை பட்டப்பகலில் அவர்களிடம் வருவதைப் பற்றி அச்சந்தீர்ந்து விட்டார்களா? ஆகவே, நஷ்டவாளர்களான கூட்டத்தாரைத் தவிர ஏனையோர் அல்லா(ஹ்)வின் திட்டத்தைப்பற்றி அச்சந்தீரமாட்டார்கள்.'' *(7:97, 98, 99.)*

''இன்னும் அவிசுவாசிகளாகிய) அவர்கள் திட்டமிட்டார்கள்; அல்லா(ஹ்)வும் திட்டமிட்டான். மேலும், அல்லாஹ் திட்டமிடுபவர்களில் சிறந்தவன்.'' *(3:53).*

''(நபியே!) நிச்சயமாக (உமக்கு விரோதமாக) அவர்கள் ஒரு திட்டமிடுகிறார்கள். நானும் (அவர்களுக்கு விரோதமாக) ஒரு திட்டமிடுவேன். ஆகவே, இந்நிராகரிப்போருக்கு (அதுவரையில்) ''நீர் அவகாசமளியும்; சொற்ப அவகாசம் அளியும்.'' *(86: 15-17.)*

எனவே, அல்லா(ஹ்)வின் புறத்தால் எவருக்காயினும் சுகபோகங்கள் வந்திடுமாயின் அவற்றைக் கொண்டு மதி மருளலாகாது; ஏனெனில், அச்சுகபோகங்ளே பழி தீர்க்கும் தண்டனையாயுமாகிவிடலாம். ஆகவே, அவை பற்றி எச்சரிக்கையுடனிருக்கக் கடவோமாக!



## மூமின்களின் மதிமயக்கம்

இனி, விசுவாசிகளின் (மூமின்களின்) மதிமயக்கம் பற்றி ஆராய்வோம். அவர்களில் பாவிகளான கூட்டத்தினர், ''அல்லாஹ் பாவங்களை மன்னிப்பவன் (கபூர்) ஆகவும், நிகரில்லாத அன்புடையோன் (ரஹீம்) ஆகவுமிருக்கிறான். ஆகவே, அவனுடைய அன்பு நிறைந்த பாவமன்னிப்பு எங்களுக்கு உண்டென ஆதரவுவைக்கிறோம்'' என்று வாய்மொழிகள் கூறி, அதையே ஊன்றிப் பிடித்துக்கொண்டு எத்தகைய புண்ணிய அமல்களும் செய்யாமல் வீண்காலங் கழிக்கிறார்கள்.

அல்லா(ஹ்)வின் அன்பையும், அருளையும் அவர்கள் எதிர்பார்ப்பது போற்றத் தக்கதே! அல்லா(ஹ்)வின் கருணை கங்குகரை யில்லாதது; அவன் அருள் விசாலமானது; அவனுடைய கிருபா சமுத்திரம் எங்கும் வியாபித்துள்ளது; அவனுடைய கொடை நிகரில்லாதது. உண்மைதான். ஆனால், ஈமானுடைய அம்சத்திற்கொப்ப ஒழுகி, நற்கருமங்கள் புரிந்து, தானதருமங்கள், பரோபகாரங்கள் செய்து புண்ணியந் தேடியல்லவா அல்லா(ஹ்)வின் அருளையும் அன்பையும் நாடி எதிர்பார்க்க வேண்டும்! அவ்வாறின்றி, நற்கருமமேதும் புரியாது நடத்தையெல்லாம் மாற்றமானதாகவும், பாவமானதாகவும் இருக்க, அல்லா(ஹ்)வின் கருணையை எதிர்ப்பார்ப்பதாக வாயளவில் கூறுவதால் என்ன பயன்? அல்லா(ஹ்)வை ஓர்மைப்படுத்தி வணங்கும் மூமின்களாகிய நாம் இயன்ற அளவு நற்கருமங்கள் புரிந்து அல்லா(ஹ்)வின் அருளையும் அன்பையும் தேட வேண்டாமா?

இத்தகைய மதிமயக்கமுடையோர் இவ்வாறாவதற்கு மூல காரணம், ''எங்கள் தாய், தந்தை, மற்றும மூதாதையர் அல்லா(ஹ்)வுக்கு உவந்த நல்லடியார்களாயிருந்தனர்; ஆகவே, அவர்களின் சந்ததியினரான நாங்களும் அல்லா(ஹ்)வின் அன்பிற்கும் அருளுக்கும் உரித்தானவர்கள் தாம்'' என்று இவர்கள் கூறிக் கொள்வதுதான். இவர்களின் அந்தத் தாய் தந்தையர்களும், மூதாதையர்களும் நற்கிரியைகளாலும், இறைபக்தியாலும், வணக்கத்தாலும், ஒழுக்கத்தாலும் அல்லா(ஹ்)வின் அருளுக்குப் பாத்திரராயினர். ஆனால், இவர்களோ அவர்களின் நன்னடத்தைக்கும் ஒழுக்கத்துக்கும் நேர்மாற்றமாகவல்லவோ நடந்து வருகிறார்கள்.!

''தன்னுடைய நேசன்மீது அன்பு கொண்டுள்ள ஒருவன், அவனை நேசிப்பது போலவே அவனுடைய மக்களையும் நேசிப்பான். இது சர்வ சாதாரணமான விஷயம். இவ்வாறே, உங்கள் மூதாதையர்களை, பெற்றோர்களை நேசித்தது போலவே, அல்லாஹ் உங்களையும் அன்பு கொண்டு நேசிப்பான். ஆகவே, நீங்கள் புண்ணிய கருமங்கள் புரியவேண்டுமென்ற அவசியமில்லை'' என்ற கோணலான அபிப்பிராயத்தை ஷைத்தான் அவர்களுக்கு மினுக்கிக் காட்டுகிறான். இதில் அவர்கள் சிக்கி மதிமயங்கிவிட்டனர்; இதன்மூலம் அல்லா(ஹ்)வின் விஷயத்தில் மதிமருண்டுவிட்டனர்.

ஒரு நபியின் மைந்தரின் கதி என்னவாயிற்றென்பதை இவர்கள் உற்றுணர்ந்து பார்க்கவேண்டாமா? நூஹு நபி (அலைஹி) அவர்கள், தமது புத்திரரைப் பிரளயத்தினின்றும் காப்பாற்றிக்கொள்வதற்காகக் கப்பலில் தன்னோடு ஒன்றாகக் கூட்டிச் செல்ல ஆசித்தபோது, அப்புத்திரன் காபிராய் இருந்தமையால், அல்லாஹ் அதற்கு அனுமதிக்காமல், அவர்களின் சமூகத்தாருக்குக் கொடுத்ததைவிட அதிகச் சங்கடத்தை அப்புத்திரருக்கு அளித்துப் பிரளயத்தில் மூழ்கி மாளச் செய்தானன்றோ!

மேலும், நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள் அருமை மாதாவின் புனித சமாதியைத் தரிசனம் (வஸியாரத்) செய்யவும், அவர்களுக்காகப் பாவ மன்னிப்புக் கோரிக்கை (இஸ்திக்பார்) செய்யவும் இறைவனிடம் அனுமதி கோரியபோது, தரிசனம் (வஸியாரத்) செய்ய மட்டுமே அனுமதி கிடைத்தது; பாவமன்னிப்புக் கோரிக்கைக்கு அனுமதி கிடைக்கவில்லையே!

மதிமயக்கங்கொண்ட இக்குழுவினர் கீழ்க்காணும் திருகுர்ஆன் வசனங்களையும் மறந்தே விட்டார்கள்:

''மேலும், ஒவ்வோர் ஆத்மாவும் தன்னுடைய பாவத்தைத் தானாகவேயன்றிச் (வேறு யாராலும்) சம்பாதிக்காது. ஓர் ஆத்மாவினுடைய பாவச்சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது.'' *(6:165.)*

''மனிதனுக்கு அவன் செய்த வினையேயன்றி வேறொன்றும் கிடையாது.'' *(53:39)*



தமது தாய், தந்தை, மூதாதையரின் தெய்வபக்தியின் பொருட்டால் தானும் ஈடேற்றம் பெறலாம் எனக் கருதுவது, தமது தந்தை ஆகாரம் புசித்ததால் தமது பசியடங்கிவிடும், தமது தந்தை தண்ணீர் அருந்தியதால் தம்முடைய தாகம் தீர்ந்துவிடும் என்று எண்ணுவது போன்றதுதான். இறைபக்தி (தக்வா) என்பது ஒவ்வொருவரையும் தனித்தனியே பற்றிப் பிடித்துள்ள தவிர்க்க முடியாத கடமை (பருலு ஐன்) ஆகும். எனவே, தந்தையின் பக்தியில் தனயனுக்கும் பங்கு உண்டென்று நினைத்து வாளாயிருப்பதெப்படி?

தெய்வபக்திக்கும், மற்றும் நற்கிரியைகளுக்கும், நற்கூலியளிக்கும் தீர்ப்பு நாளன்று இவர்கள் எங்கோ, இவர்களின் தாய், தந்தை, மூதாதையர்கள் எங்கோ?

''அந்நாளில் மனிதன் தன் சகோதரனை விட்டும், தன் தாயை விட்டும், தன் தகப்பனை விட்டும், தன் மனைவியை விட்டும் தன் மக்களை விட்டும் வெருண்டோடுவான். அந்நாளில், அவர்களில் ஒவ்வொருவருக்கும் மற்றவர்களைக் கவனிக்க முடியாதவாறு சொந்தக் கவலை ஏற்பட்டுவிடும்.'' *(80: 36, 37.)*

ஷபாஅத்து என்னும் பரிந்துபேசலின் வாய்ப்பு அல்லாஹ் நாடிய ஒரு சிலருக்கேயுண்டு. அதுவும் அல்லா(ஹ்)வின் விருப்பப்படியேதான் நடக்கும்.

''தன் ஆத்மாவைத் தனக்கு வசப்படுத்தி அதைப் பணியச் செய்து, மரணத்துக்குப் பின் மறுமையில் தனக்கு உதவும்படியான நற்கிரியை அமல்கள் புரிந்தவனே விவேகம் படைத்த வலியவன். தன் ஆத்மாவுக்குத் தான் அடிமையாகி அதன் கெட்ட இச்சைக்கு வசப்பட்டு, (அமல் ஏதும் புரியாமல்) அல்லா(ஹ்)வின் அருளைப் பெறலாம் என்று வெறுமனே மேலெண்ணம் வைப்பவன் அவிவேகியான அசக்தன்'' என்று நாயகம் (ஸல்) நவின்றுள்ளதையும், கீழ்க்காணும் திரு குர்ஆன் வசனங்களையும் இம்மருட்சியாளர்கள் மறந்தேவிட்டனர்:

''ஈமான் கொண்டோரும், சுய பதி துறந்து ஹிஜ்ரத்துச் செய்து அல்லா(ஹ்)வின் பாதையில் மார்க்க யுத்தம் (ஜியாது) புரிந்தோரும் ஆகிய இவர்கள்தாம் அல்லா(ஹ்)வின் கிருபையை ஆதரவு வைக்கிறார்கள். அல்லாஹ் (இவர்களுக்கு

இவர்கள் ஆதரவு கொண்டதற்கொப்ப) பிழைபொறுப்பவன், கிருபை செய்பவன்.'' (2:218)

''அவர்கள் செய்த நற்காரியங்களுக்குத் தக்க சன்மானம்'' (32:17.)

எனவே, நற்காரியங்கள் முற்படுத்தப்பட்டிருந்தாலன்றி ஆதரவுவைக்க இடமில்லை. அவ்வாறான நற்காரியங்கள் ஏதுமில்லாமல் வெறுமனே ஆதரவு மட்டும் கொள்வது பேதமையும் மதிமயக்கமுமன்றோ! இதிலே ஆட்சேபமில்லை.

நற்கிரியைகள் புரிந்துள்ள நல்லடியார்களின் இதயத்தில் (நாம் அல்லா(ஹ்)வின் திருப்திக்குகந்த வண்ணம் நற்கிரியை கள் புரிந்தோமோ இல்லையோ என்று) கிளம்பும் அச்சம் என்ற அக்கினியையும், (நாம் புரிந்த கருமங்கள் பயனுடையவையோ அல்லவோ என்றுண்டாகும்) சந்தேகம் என்ற நெருப்பையும் தணிக்கும் ஒரு குளிர்ச்சிச் சாதனமாகவே நல்லாதரவு (ரஜாஉ) தரப்பட்டுள்ளது நற்கிரியைகளை ஆர்வத்தோடு மென்மேலும் செய்துவரவேண்டும் என்பதற்காகவே உற்சாகமூட்டும் வண்ணம் 'நல்லாதரவு' பற்றித் திரு குர்ஆனில் பிரஸ்தாபிக் கப்பட்டிருக்கிறதேயன்றி, இறுமாப்பிலும் சோம்பலான மதி மயக்கத்திலும் ஆழ்ந்து அமல் செய்யாது கைகட்டி வாளாயி ருப்பதற்காக வன்று.

இவர்களைப் போன்றே இன்னொரு கூட்டத்தினரும் மதி மயங்கியுள்ளனர். நன்மையும், தீமையும் அவர்களிடம் கலந்தி ருக்கும்; ஆனால், நன்மையைவிடத் தீமைதான் மிகைத்திருக் கும். இந்நிலையிலும் தங்களுக்குப் பாவ மன்னிப்புக் கிடைக் கவே செய்யும் என்று அவர்கள் எண்ணியிருப்பார்கள். அப்பப்ப, என்னே அவர்களின் அறியாமை!

அக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் ஹலாலும், ஹராமும் சேர்ந்த சில காசுகளைத் தருமம் செய்கிறான். ஆனால், இவன் ஊராரிடம் அபகரித்த பணமும் ஹலாலற்ற வழிகளில் சம்பாதித்ததும் அவற்றைவிடப் பல மடங்கு அதிகமானவை. எனினும் அந்தச் சொற்பக் காசுகள் தர்மம் கொடுத்ததே போதும் என்று எண்ணியிருக்கும் இவன் போக்கு, தராசின் ஒரு தட்டில் பத்துக் காசுகளையும், மற்றொரு தட்டில் ஆயிரம் காசுகளையும் வைத்து நிறுக்கும்போது பத்துக் காசுகள் வைக்கப்பட்ட தட்டுத் தான் அதிகஎடை காட்டும் என்று வாதாடுபவனின் மனப்போக்



காகவே இருக்கிறது. இது முழு மூடத்தனமல்லாது வேறென்ன!

இக்கூட்டத்தில் இன்னோரு பிரிவினர் தமது பாவக் கிருத்தியங்களைவிடத் தமது நற்செயல்களே அதிகம் என்ற நினைவில் மதிமயங்கிக் கிடக்கின்றனர். இவர்கள் தாம் எத் தகைய பாவச் செயல்கள் புரிந்தாலும் அதைப்பற்றி மனத்தில் சீர்தூக்கிப் பார்க்காமல் தமது நன்மைகளை மாத்திரமே நோக்கிப் பெருமிதமடைகிறார்கள்.

உதாரணமாக, இவர்களுள் ஒருவன் இரவிலும் பகலிலும் அல்லா(ஹ்)விடம் தினமும் பாவமன்னிப்புக் கோரி, நூறு அல்லது ஆயிரம் தடவை இஸ்திக்பாரோ அல்லது இறைவனின் தூய நாமத்தைப் போற்றித் தஸ்பீஹோ செய்து கொண்டே இருப்பான். மற்ற நேரத்திலோ, சகோதர முஸ்லிம்களைப் பற்றி அவதூறும், பொல்லாங்கும், புறமும் பேசுவான்; அல்லா(ஹ்) வின் பொருத்தத்துக்கு மாற்றமான வீண் விஷயங்களைக் கூறித்திரிவான். இவன் தான் ஓதிவரும் இஸ்திக்பாருக்கும், தஸ்பீஹுக்கும் எவ்வளவு கூலி கிடைக்கும் என்று அதைக் கணக்கிடுவானேயன்றி, அல்லா(ஹ்)வின் வெறுப்புக்குப் பாத்தி ரமான பொய்யர்கள், பொல்லாங்குக்காரர்கள், கோளர்கள், வேஷதாரி (முனாபிகு)கள் ஆகியவர்க்குரிய தண்டனை எவ்வளவு கடுமையானது என்பதைச் சிறிதேனும் நினைத்துப் பார்ப்பதே இல்லை. இவன் போக்கு அந்தகாரத்தின் மூலபீட மாகும். அல்லா(ஹ்)வைத் தஸ்பீஹு செய்து கொண்டிருப் பதைவிடப் பாவகரமான பேச்சை விட்டும் இவன் தன் நாவைப் பேணிப்பாதுகாப்பது நலமாகும்.

இத்தகைய மதிமயக்கத்தை விட்டு விலகும் உணர்வைத் தந்து, நம்மை நல்வழியில் திருப்பி உதவும் அல்லா(ஹ்)வை நாம் நன்றியுடன் போற்றுவோமாக!

## ஆலிம்களின் மதிமயக்கம்

காபிர்களைத் தவிர, மூமின்களை நான்கு வகையினராகப் பிரித்தோம். மூமின்களின் மதிமயக்கத்தைப் பற்றிப் பொது வாகச் சில சொன்னோம். இனி அவர்களில் ஒருவொருவரு டைய மதிமயக்கத்தையும் முறையே பார்க்கலாம். முதலா வதாக ஆலிம்கள் (கற்றறிந்தோர்கள்) பற்றி விவரிப்போம். இவர்களில் பலதரப்பட்டவர்கள் உண்டு.

ஒரு வகையினர் வருமாறு: மார்க்க சம்பந்தமான கேள்வி களிலும், சுருதி யுக்தி ஞானங்களிலும் நன்கு பயிற்சி பெற்றுத் தேர்ந்திருப்பார்கள். சதாவும் அவற்றின் விவாதத்திலும், விசாரணையிலும், சிந்தனையிலுமே ஆழ்ந்திருப்பார்கள். ஆனால், தங்கள் நடவடிக்கைகளில் குற்றமுள்ளோராயும், கண், காது, நாவு, கை, கால், மர்மஸ்தானம் முதலிய உறுப்புகளைப் பாவங்களிலிருந்து பேணிக் காப்பாற்றாதோராயும் இருப்பார் கள். பேணுதலுடன் நற்கருமங்கள் செய்து அகத்தூய்மை பெற வேண்டும் என்று கொஞ்சமும் அவர்கள் கவலை கொள்வதில்லை.

''நாம் கல்வி, கலைகளில் முதிர்ந்து அறிவாளியாய் விளங்குகிறோம்; அல்லா(ஹ்)விடம் நமக்கு அலாதியான பதவியுண்டு; கற்றறிந்த ஆலிமான நம்மை அவன் தண்டிக் கவோ, நமது நடவடிக்கைகளில் குற்றங்காணவோ மாட்டான்; ஆலிமான நமது சிபாரிஷ் கொண்டு மற்ற ஜனங்களுடைய பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான்'' என்று கூறித் தம்மைத் தாமே மதித்து மதிமயங்கியிருப்பார்கள்.

இவர்களின் மருட்சி பரிதாபத்துக்குரியது! உண்மையான அறிவு பூண்டு, அகக்கண் கொண்டு இவர்கள் நோக்கினால் பின்வரும் யதார்த்தத்தைத் தெரிந்து கொள்வார்கள்:

அறிவு (இல்மு), நடவடிக்கை சம்பந்தப்பட்ட அறிவு, (இல்முல் முஆமலா), இறையருள் ஞான அறிவு (இல்முல் முகாஷபா) என இரு வகைப்படும். அல்லா(ஹ்)வையும் அவனுடைய வருணிப்பு (வஸிபத்து)களையும் அறியும் இரண்டாம் வகை அறிவு மஃரிபா என்று சொல்லப்படும்.

ஹலால் இன்னது, ஹராம் இன்னது, சற்குண ஆத்மாவின் அடையாளம் இன்னது, துற்குண ஆத்மாவின் அடையாளம் இன்னது என்பன போன்றவற்றைப் போதிப்பது இல்முல் முஆமலா ஆகும். இவ்வறிவைப் பெற்றுணர்ந்து அதற்கொப்ப நல்லமல்களைப் புரிந்து, தீமையிலிருந்து விலகி அகத்தூய்மை பெற்றுப் பூரணமான இறையருள் ஞான(ஹிக்ம)த்தை அடைவது தான் இல்முல் முஆமலாவின் நோக்கம்.

அந்நோக்கத்துக்கு முரணாகச் செயலாற்றும் மேற்கண்ட மருட்சியாளருக்கு ஒரு வைத்தியனை உபமானமாகக் குறிப்பிட லாம். அவ்வைத்தியனோ வைத்திய சாஸ்திரத்தில் கைதேர்ந்த



வன். ஆனால், அவனே நசலால் பீடிக்கப்பட்டவனாக இருக்கிறான். வியாதிகளின் தன்மை என்ன, அவற்றுக்குரிய மருந்த எது என்பதெல்லாம் அவனுக்குத் தெரிந்திருந்தும் தன் நசலுக்கு ஔடதம் தயாரித்துச் சிகிச்சை செய்யாமலே இருக்கி றான். பிறருக்கு வைத்தியம் செய்து மருந்துகள் கொடுத்துக் கொண்டு அதே சமயத்தில் தன் வியாதியை முற்ற வைத்துக் கொண்டிருக்கும் இவன், தன் நசலுக்கு மருந்து செய்து அதை உட்கொண்டு பிரயோகப்படுத்திப் பத்தியமும் பேணினால் தானே அது நீங்கி இவன் சொஸ்தமடைய இயலும்! அவ்வா றின்றி ஔடதங்கின் விவரங்களை இவன் அதிகமும் அறிந்தி ருப்பதாலும், இவன் பெற்ற வைத்திய சாஸ்திர ஞானம் மூலம் மருந்துகளின் பெயர்களை நாவால் உச்சரித்து வானளாவ வர்ணித்துக் கொண்டிருப்பதாலும் இவன் வியாதி நீங்கி விடுமா? இவ்வாறே இதய வியாதி பெற்ற இம்மருட்சி யாளர்களும் அவ்விதயவியாதியை நீக்கும் பரிகாரத்தைச் செயலளவில் மேற்கொண்டு அகத்தூய்மை பெற்றாலல்லது இவர்களின் இதய வியாதி நீங்காது. இதுபற்றியே அல்லாஹ் திரு குர்ஆனில்,

> ''எவன் (பாவங்களை விட்டும்) ஆத்மாவைப் பரிசுத்த மாக்கிக் கொண்டானோ அவன் நிச்சயமாகச் சித்தி யடைந்து விட்டான். எவன் அதனைப் (பாவத்தில்) புதைத்துவிட்டானோ அவன் நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டான்.'' *(91:8, 9.)* என்றுரைத்துள்ளான்.

''எவன் ஆத்மாவைப் பரிசுத்தமாக்கிக் கொண்டானோ'' என்று இறைவன் குறிப்பிட்டுள்ளானேயன்றிப் ''பரிசுத்தப்படுத் தும் தன்மையைப் பற்றிப் பேசியும், எழுதியும் ஜனங்களுக்குப் போதித்தவன்'' என்று குறிப்பிடவில்லை என்பதை இவர்கள் நன்றாக உணரவேண்டும்.

''கல்வி அதிகம் பெற்ற ஒருவன், (தான் பெற்ற கல்விக்குத் தக்க) ஒழுக்கத்துடன் நடந்து அதிகமான ஆத்ம விகாசம் அடையவில்லையெனில், அல்லா(ஹ்)வின் சமூகத்திலிருந்து அப்பால் விலகி அதிகத் தூரம் போகிறான் என்றே அர்த்தம் என்றும், ''இறுதித் தீர்ப்பு (கியாம) நாளில் ஜனங்களிலெல்லாம் அதிகமான கடுந்தண்டனைக்கு உரியவன் தன்னிடம் ஏராளமான அறிவு குடிகொண்டிருந்தும் அதற்கொப்ப ஒழுகாத ஆலிம் (அறிஞன்) தான். இத்தகைய ஆலிமுக்குக் கொடிய

தண்டனையுண்டு'' என்றும் பெருமானார் (ஸல்) இயம்பியுள்ளார்கள். இவற்றையும் மேற்கண்ட மருட்சியாளர்கள் மதியாதிருக்கிறார்கள்.

இம்மையின் இச்சையும், ஆத்மாவின் துராசையும், உலகிலே சுகபோகந் துய்க்கவேண்டுமென்ற பாசமுந்தான் இவர்கள் சீர்கேட்டுக்குக் காரணமாகும். நற்கிரியைகள் இன்றியே, மறுமையில் தங்கள் அறிவு தங்களை ஈடேற்றும் என்று இவர்கள் மனப் பந்தல் போடுகின்றனர், சந்தேகமின்றி, இவர்கள் மதிமயக்கத்தில் உறைந்துவிட்டனர். இவர்களைப் போன்ற நிலை நமக்கு ஏற்படாமல் ஆண்டவனிடம் பாதுகாப்புத் தேடுவோமாக!

பிறிதொரு வகையினர் கல்வியில் தேர்ச்சியும், அமலில் ஈடுபாடும் உள்ளவர்கள். ஆனால், வெளிப்படையான (ளாஹிரிய்யத்தான) அமல்களைப் புரிவார்கள்; அதே போல வெளிரங்கமான பாவங்களை விட்டுப் பேணியுமிருப்பார்கள். எனினும், அந்தரங்கமான பேணுதலால் தங்கள் ஆத்மாவைச் சுத்தப்படுத்தவேண்டுமே என்ற கடமைமறந்திருப்பார்கள். மேலும் அல்லா(ஹ்)விடம் வெறுக்கப்பட்ட மமதை, முகஸ்துதி, பொறாமை, தலைமைத்தன விருப்பம், பொருளாசை, சகபாடி, அண்டை அயலாருக்குக் கேடு நினைத்தல், பல தேசங்களிலும் தன் புகழ் பரவ வேண்டுமென்ற புகழ்ப் பிரியம் முதலிய துற்குணங்களை அவர்கள் தங்களின் இதயத்திலிருந்து அகற்றமாட்டார்கள்.

''முகஸ்துதி (ரியாஉ) சிறிய ஷிர்க்கு ஆகும்'', ''விறகை நெருப்புத் தின்றுவிடுவதேபோல நன்மைகளைப் பொறாமை தின்றுவிடுகிறது'', ''கீரையை (மளமளவென்று) தண்ணீர் வளரச் செய்வது போலப் பொருளாசையும் புகழாசையும் இதயத்திலே நயவஞ்சகத் தன்மையை வளரச் செய்கின்றன'' என்பன போன்ற நாயகம் (ஸல்) அவர்களின் மணிமொழிகளை இவர்கள் மறந்திருப்பதே இவர்களின் மதிமயக்கத்துக்குக் காரணமாகும்.

''இறுதித் தீர்ப்பு நாளில் பொருளும் மக்களும் யாதொரு பயனுமளிக்கா. ஆயினும், பரிசுத்த இதயத்துடன் அல்லா(ஹ்) விடம் வருபவன்தான் (ஈடேற்றமடைபவன்.)'' *(26:88, 89.)* என்ற திரு குர்ஆன் வசனத்தையும் இவர்கள் மறந்தனர்.



இவர்கள் தங்கள் ஆத்ம சுத்திபற்றி அக்கறை கொள்ளாமல் வெளிரங்கங்களில் மட்டும் பராக்காயினர். இதயம் பரிசுத்த மடையாதவர்களின் வழிபாடு செவ்வையானதாகாது.

இத்தகையோரைச் சொறி, சிரங்கால் பீடிக்கப்பட்ட வியாதியஸ்தனுக்கு ஒப்பிடலாம். அவனது பிணி தீருவதற்காக வைத்தியர், உள்ளே குடிப்பதற்கு ஒரு மருந்தும், வெளியே பூசுவதற்குக் களிம்பும் கொடுத்தார். அவன் அக்களிம்பை மட்டும் வெளிப் பக்கம் நன்றாய்ப் பூசிக்கொண்டான். ஆனால், உள் மருந்தைச் சாப்பிடவில்லை. வெளிரங்க சொஸ்தத்தை மட்டும் அவன் விரும்பினானேயன்றி உள்ரங்க சொஸ்தத்தை அவன் ஆசிக்கவில்லை. அவன் வெளிரங்க வியாதியான சொறி, சிரங்குக்கு மூலகாரணம் அவன் உள்ரங்க வியாதிதான். தன் குடலில் வியாதி யுண்டாகி; இரத்தங் கெட்டுப்போய் இருக்கிறது என்ற உண்மையை அவன் கிரகிக்கவில்லை. இதையுணராது வெளிப்பூச்சு மருந்தை மட்டும் பூசியதால் அவன் வியாதி நீங்கவில்லை; நாளுக்கு நாள் அதிகமாகி மேலும் மேலும் உபத்திரவத்தைத்தான் கொடுத்தது. ஆனால், உள் மருந்தையும் சாப்பிட்டு அதன் மூலம் உள் பிணி அகன்றிருப்பின், அதன் விளைவாலுண்டான வெளிரங்கப் பிணியும் அத்துடன் தீர்ந்திருக்கும். இதுபோன்றே, இதயத்தில் அருவறுப்பான தீய குணங்கள் மறைந்தொளிந்து கிடந்தால் அவற்றின் விளைவுகள் வெளி உறுப்புக்களையும் பாதிக்கும்.

வேறொரு வகையினர் மார்க்கத்தில் உள்ரங்கத் துற்குணம் அருவறுக்கத்தக்கது என்பதை யுணர்ந்தேயிருப்பார்கள். ஆனால், தங்களைப் போன்ற பெரிய மனிதர்களுக்கெல்லாம் அத்தகைய துற்குணமெதுவும் உண்டாகாது, தாங்களெல்லாம் அதைவிட்டும் நிவாரணம் பெற்றவர்கள் என்ற இறுமாப்பிலிருப்பார்கள். தங்களுக்கு அல்லா(ஹ்)விடம் உயர்ந்த தனியந்தஸ்து உண்டென்றும், எனவே, இம்மாதிரித் துற்குணங் கொண்டு அவன் தங்களைச் சோதிக்கமாட்டான் என்றும், ஆனால், இல்மு இல்லாத மற்றச் சாமான்ய ஜனங்களையே அவற்றால் சோதிப்பான் என்றும் தீர்மானங் கொண்டிருப்பார்கள். யதார்த்தத்தில் இத்துறையில் மற்றவர்களைவிட அல்லாஹ் இவர்களையே மிகவும் சோதிப்பான்.

அகங்காரம், மமதை, தலைமைத்தன வேட்கை, மேன்மையானவன் என்று காட்டிக்கொள்வதில் விருப்பம், பாரோர்

போற்றச் சிறப்புடனிருக்க வேண்டுமென்ற பாசம் முதலிய ஆசாபாச குணங்கள் இவர்களிடம் மிகைத்திருக்கும். "இம் மாதிரி பெருமை, கர்வம், சிறப்பு எல்லாம் கூடாது என்று எங்கள் விஷயத்தில் சொல்ல முடியாது. ஏனெனில், இந்தப் பெருமை, கர்வம், சிறப்பு எல்லாம் எங்களுக்காகவா எங்களி டம் உள்ளன? இம்மாதிரிப் பெருமை கொள்வதால் மார்க் கத்துக்குச் சிறப்புண்டாகிறது: கர்வம் பூணுவதால் கல்விக்கு மேம்பாடுண்டாகிறது; சிறப்புக் கொள்வதால் உலமாக்களுக்குச் சிறப்புண்டாகிறது" என்று கற்பனைக் காரணங் கூறும் இவர்களைக் கண்டு கை கொட்டிச் சிரிக்கிறான் இப்லீஸ். இதை யுணராமல் இவர்கள் தற்பெருமை பாராட்டுகிறார்கள்.

மேலும், தங்கள் பெருமையாலும் டம்பத்தாலும் சன்மார்க்கத்துக்கு அபிவிருத்தித் தொண்டு செய்வதாகக் கூறும் இவர்கள் எம் பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களும், அவர்களின் அருமை ஸஹாபாக்களும் எத்தகைய எளிய முறையில் தீனுல் இஸ்லாத்தைப் பரவச் செய்தார்கள், எவ்வாறான பணிவுகொண்டு சன்மார்க்கச் சுடரொளி பரப்பினார்கள், எம்மாதிரியான குணாதிசயங்களைக் கொண்டு சன்மார்க்க சேவை புரிந்தார்கள் என்பதையெல்லாம் சிறிதுகூடச் சிந்திப்பதேயில்லை. அவர்களின் பணிவு எங்கே! இவர்களின் பகட்டு எங்கே! அவர்களின் ஏழ்மை எங்கே! இவர்களின் டாம்பீகம் எங்கே! அவர்களின் தன்னலங் கருதாத் தன்மை எங்கே! இவர்களின் சுயநலம் கருதும் சுபாவமெங்கே!

"இஸ்லாத்தைக் கொண்டு அல்லாஹ் எங்களைச் சிறப்பாக்கியிருக்கிறான். அச்சிறப்புள்ள சமுதாயம் நாங்கள். அவனல்லாத வேறு யாரிடமும், வேறெந்த சிறப்பும் வேண்டோம்" என்று உமர் (ரலி) அவர்கள் பெருமிதத்துடன் ஷாம் தேசத்தை முன்னோக்கிக் கூறியபோது, அலங்கார உடை அணிந்திருந்ததுகூடக் கண்டிக்கப்பட்டதென்றால் அருமை நாயகம் (ஸல்) அவர்களுடையவும், அருமை ஸஹாபாக்களு டையவும் அடக்கவொடுக்கமடான ஒழுக்கத்தின் நேர்மை தானென்னே!

இவர்களோ டாம்பீகத்தால்தான் இஸ்லாத்துக்குச் சிறப்பு என்று எண்ணிக் கொண்டு இஸ்லாத்துக்குக் கௌரவம் என்ற பெயரில் தங்களுக்குக் கௌரவம் தேடும் நோக்குடன்



பகட்டான ஆடைகளை அணிகின்றனர். ஆனால், இம்மாதிரி வெளியலங்காரம் புரிவதால் தான் மார்க்கத்துக்குச் சிறப்பும், இல்முக்கு இணையிலா மகத்துவமும், சன்மார்க்கத்துக்குச் சக்தியும் உண்டாகின்றன என்று கூறிவிடுகிறார்கள்.

மேலும், இவர்கள் தங்களைப் போன்ற அந்தஸ்திலுள்ள வர்களோடும் அல்லது தங்கள் அபிப்பிராயத்துக்கு மாற்றமாக ஏதாவது சொன்னவர்களோடும் மனப்புழுக்கமும், பொறாமை யுங் கொண்டு சினந்து வார்த்தையாடுகிறார்கள். தாங்கள் இவ்வாறு அவர்களைக் கடிந்து பேசுவது பொறாமையால்தான் என்பதை இவர்கள் உணராதிருப்பதோடு, "இம்மாதிரி நாங்கள் கொள்ளும் கோபம் அல்லா(ஹ்)வுக்காகக் கொள்ளும் கோபம். இம்மாதிரிக் கோபங்கொண்டுதான் வழி பிசகினோரைத்திருத்த முடியும். அபத்தக்காரனின் முரணையும் அநீதத்தையும் இதைக் கொண்டே அடக்க முடியும்" என்று அர்த்தமுங் கற்பிக் கின்றனர். நிச்சயமாக இவர்கள் மிக மோசமான மதிமயக்க முற்றோராவர்.

தங்களை அவமதித்து அவமரியாதையாகப் பேசுப வர்களை வன்மையாகக் கண்டிக்கும் இவர்கள், தம் போன்ற ஏனைய ஆலிம்கள் மீது அவமரியாதையாக வீண் அபவாதங்கள் கூறப்படும்போது, அல்லா(ஹ்)வுக்காக என்று அவ்விஷயத்தில் கோபமோ, வெறுப்போ அடைகிறார்களில்லை. மாறாகப் பரவசமடைகிறார்கள். மற்ற ஆலிம்களைப்பற்றிப் பொது ஜனங்கள் அதிருப்தி கொண்டு குறைகூற முற்படும்போது அள வில்லாத சந்தோஷமடைகிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில், இவர்கள் தங்கள் திறமையையும், அறிவுப் பிரதாபத்தையும் பற்றி மக்களிடையிலே பகட்டாக எடுத்துக் காட்டுகிறார்கள். "இப்படி அவற்றை நாங்கள் எடுத்துக் காட்டுவதெல்லாம் பொது மக்களுக்கு உணர்ச்சியை யூட்டி அவர்களை நல்வழியில் திருப்புவதற்கே" என்றும் காரணங் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், இது வெறும் வாய்ப் பேச்சுத்தான். தற்பெருமை இவர்களைப் பூரணமாக ஆட்கொண் டுள்ளது. உண்மையில், ஜனங்களின் நற்பயனை நாடுவதே இவர்களின் குறிக்கோள் என்றிருந்தால் தங்களைத் தவிர ஏனையவர்களிடமிருந்து அவர்கள் தங்களுக்குச் சமமானவர் களாகவோ, அல்லது தங்களைவிட மேம்பட்டவர்களாகவோ

அல்லது கிழானவர்களாகவோ எப்படியிருந்தாலும் அவர்களிட மிருந்து ஜனங்கள் நன்மை பெறுவதையும் இவர்கள் உவந்து ஆதரிக்க வேண்டுமே! மற்றவர்கள் தங்களின் திறமையையும், அறிவுப் பிரதாபத்தையும் காட்டும்போது இவர்கள் அசூயையும் வெறுப்பும் கொள்வது ஏன்?

மேலும், இவர்கள் ஆட்சியாளர்களோடு அளவளாவி, அவர்களின் தயவையும் திரவியத்தையும் எதிர்பார்த்த வண்ணம் அவர்களுக்கு ஒத்துப்பாடி அவர்களைப் புகழ்ந்த வண்ண மிருப்பார்கள். அதுபற்றி வினவப்பட்டால், ''எங்களின் சுயநலத் திற்கா நாங்கள் ஆட்சியாளர்களை அண்டுகிறோம்? முஸ்லிம் கள் யாவரின் நன்மைக்காகவுமல்லவா பாடுபடுகிறோம்! ஆட்சி யாளர்களால் முஸ்லிம்களுக்குத் துன்பம் வராமல் தடுப்பதற் கும், முஸ்லிம்களைப்பற்றி அவர்களிடம் சிபாரிஷ் செய்யவு மல்லவா நாங்கள் அவர்களை அண்டிப் பழகுகிறோம்'' என்று கூறிக்கொள்வார்கள். பெரிய மதிமயக்கம் இது! யதார்த்தத்தில் இவர்கள் நோக்கம் அதுவானால், இவர்கள், தாங்கள் ஆட்சி யாளர்களிடம் போய்வருவது போல மற்றவர்கள் போய் வருவதைக் காணும் போது அதற்காகச் சந்தோஷமும் திருப்தி யும்தானே கொள்ளவேண்டும்! தங்களல்லாத ஏனைய ஆலிம் கள் யாரேனும் அவர்களிடம் உயர்ந்த மதிப்பும், நல்லந்தஸ்தும் அடைந்து, சிபாரிஷ் செய்யும் செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணும்போது இவர்கள் மனப்புழுக்கமும், வேதனையும் அடைவதேன்

இன்னுஞ் சில வேளைகளில் இவர்கள் ஆட்சியாளர்களிட மிருந்து பணங்காசையும் பெறுகிறார்கள். அக்கிரமமாகவும் அநீதமாகவும் சேகரிக்கப்பட்ட அப்பணங்காசுகள் ஹராமான வையாயிற்றே என்ற ஊசாட்டம் ஏற்படும்போது, ''இவை ஹராமானவையல்ல; இவை உடையவனில்லாத பொருட் செல்வம். இவை முஸ்லிம்களின் பொது நன்மைக்காக உள்ளவை. நீ தானே இப்போது முஸ்லிம்களின் பிரதம (தலைவர்) இமாமாகவும், அவர்களின் தலைசிறந்த (அறி வாளி) ஆலிம் ஆகவும் இருக்கிறாய். ஆகவே, உன்னைக் கொண்டு தான் சன்மார்க்கக் காரியங்கள் நடைபெறவேண்டி யிருக்கின்றன'' என்று ஷைத்தான் காரணங்காட்டி யோசனை கூறி ''ஆட்சியாளர் தரும் அருமையான செல்வங்களை விட்டுவிடாதே'' என்பான்.



இவ்வண்ணம் ஷைத்தான், (1) உடையவனில்லாத பொருட்செல்வம் என்றும், (2) முஸ்லிம்களின் பொது நன்மைக் காக உள்ளவை என்றும் (3) நீயே முஸ்லிம்களுக்கு இமாம் என்றும் கூறி மூன்று விஷயங்களில் இவர்களை வழிபிசகச் செய்கிறான்.

இமாம் என்றால் யார்? மேன்மை நபிமார்களைப் போன்றும், அருமை ஸஹாபாக்களைப் போன்றும், இந்தச் சமுதாயத்திலுள்ள அகத்தூய்மை பெற்ற உண்மையான ஆலிம் களைப் போன்றும் உலக ஆசாபாசங்களுக்குக் கட்டுப்படாது அவற்றையகற்றி வாழ்பவர் அல்லவா உண்மை இமாம் ஆவார்!

''மடைவாயின் முகப்பில் அடைத்துக் கொண்டிருக்கும் பாராங்கல் தானும் தண்ணீரை அருந்தாது; வயல்களுக்கும் நீரை ஓட விடாது. கெட்ட ஆலிமுக்கு இதுவே உவமானமாகும்'' என்று நபி ஈஸா (அலை) உதாரணங் கூறியிருக்கிறார்கள்.

கல்வி ஞானமுள்ள இம்மாதிரி ஆலிம்களின் மதி மயக்க வகைகள் பலப்பல. அன்னவர்களால் ஏற்படும் நன்மையை விடக் குழப்பமும், வழிபிசகலும், பித்தலாட்டமும்தான் மிக அதிகம்.

இன்னொரு வகையினர்: கல்வி, கேள்விகளிற் சிறந்து விளங்கும் இவர்கள் வெளிரங்கத்தில் அவயங்களை நற்கருமங்க ளால் சுத்தமாக்கி, வழிபாடு வணக்கங்களால் அவற்றை அலங்கரித்துள்ளார்கள். வெளிரங்கமான பாவங்களைவிட்டும் நீங்கியுள்ளார்கள். ஆத்மாவின் நல்லியல்புகள் பற்றியும் முகஸ் துதி, பொறாமை, அகங்காரம், மனப்புழுக்கம், கௌரவம் முத லிய துற்குணங்களை விட்டு இதயத்தைச் சுத்தமாக்குவது பற்றி யும் கவனமெடுத்து அவ்வகையில் முயற்சியிலும் ஈடுபட்டுள் ளார்கள். தங்கள் ஆத்மாவைத் துற்குணங்களை விட்டும் களைந்து சுத்தப்படுத்த வேண்டும் என்பதற்காகத் துற்குணங்கள் என்ற செடிகளை இதயம் என்ற பூமியிலிருந்து அகற்றிவிடு கிறார்கள். ஆனால், மேலெழுந்தவாரியாகக் கவனித்துப் பகிரங் கமாகத் தெரிந்து சில துற்குணச் செடிகளை மட்டும் அகற்றி னார்களேயன்றி, நன்றாக ஆராய்ந்து மறைந்திருக்கும் மற்றத் துற் குணச் செடிகளைக் களைய முற்படவில்லை. இதன் மூலம் இவர்கள் மதிமயங்கிவிட்டனர்.

இவர்கள் அவ்வாறு களைந்து பிடுங்கி வீசியவை வெளிரங்கமாகத் தெரிந்த சில முளைச் செடிகளே. ஷைத்தானுடைய சூழ்ச்சிகள் - துராத்மாவின் மோசடிகள் என்னும் நுண்ணிய, அபூர்வக் களைகள் - விஷச் செடிகள் அவர்களின் இதயம் என்ற பூமியின் கோணங்களில் பிடுங்கப்படாமலுள்ளன. அவற்றைப் பற்றி அவர்கள் கவனிக்கவுமில்லை; கவலைப்படவுமில்லை. அவை சின்னஞ்சிறு பூண்டுகள்தாமே என்று அலட்சியமாக அவற்றை வளர விட்டுவிட்டுள்ளனர். வயலில் களைகளைப் பிடுங்க நாடினவன் வளர்ந்து நிற்கும் களைகள் மட்டும் மெலெழுந்தவாரியாகப் பிடுங்கிவிட்டு, ''களைகளை அவ்வளவுதான் வேறில்லை'' என்று எண்ணி மீதமுள்ள சிறு களைகளை முளைக்க விட்டுவிட்டால் என்னவாகும்? பிடுங்காது விடப்பட்ட சிறு களைகள் நாளாரம்பத்தில் பெரிதாக வளர்ந்து வயலையே நாசமாக்கிவிடுமல்லவா! இது போலவே இவர்கள் இதயங்களில் கவனக் குறைவால் 'அற்பமானவைதாமே' என்று இலேசாகக் கருதி விடப்பட்ட துற்குணங்கள் நாளாரம்பத்தில் பெருகி வலுவடைந்து இதயத்தைப் பாழாக்கிவிடக்கூடும். நுணுக்கமான களைகளையும் இவர்கள் நன்கராய்ந்து நீக்கினால் இவர்களின் இதயப் பூமி பசுமையும் பரிசுத்தமும் அடையும். ஆனால், இவர்கள் அதைக் கவனிப்பதேயில்லை.

மேலும்,இவர்கள் தங்களைத் தனி அந்தஸ்தும், உயர் பதவியும், சீலமும் பெற்றுள்ளவர்கள் என்று கருதிக் கொண்டு, மற்றச் சாமானியர்களோடு பழகினால் தங்கள் அந்தஸ்துக்கு ஹானி ஏற்படும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பிறரோடு கூடிப் பழகுவதேயில்லை. அப்படியே பழகினாலும் அவர்களை மிகக் கேவலமாயும், அற்பமாயும் கருதியே பேசுவார்கள். தங்களைக் கண்டோர் யாவரும் தங்களுக்கு மரியாதை செலுத்தவேண்டுமென்பதற்காக இவர்கள் தங்கள் தோற்றத்தைக் கம்பீரமான தாக்குவதிலும் ஆடையலங்காரஞ் செய்வதிலும் கவனஞ் செலுத்துகின்றனர்.

இன்னொரு வகையினர் ஞானப் பாதையில் முன்னேறுவதற்கான அனுஷ்டானங்களை அடியோடு விட்டுவிட்டு, மக்கள் மத்தியிலே உலக வாழ்க்கையை நடத்திச் செல்ல அனுசரணையாக இருக்கப் பயன்படும் உலக சம்பந்தமான தீர்ப்புகளைப் பற்றிய கல்வியிலும், தர்க்க சாஸ்திரத்திலும் மட்டும்



முற்றும் கவனஞ் செலுத்துகிறார்கள். இதனால், இவர்கள் பிக்ஹு உடைய ஆலிம்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் கற்ற கல்விக்குப் பிக்ஹு உடைய இல்மு அல்லது மதுஹபு உடைய இல்மு என்று பெயர். பிக்ஹு உடைய இல்மு அவசியமே. ஆனால், அஃதொன்றிலேயே மூழ்கி வாழ்நாள் முழுவதையும் தர்க்க வாதங்களிலும், தாவாக்களிலும் தானா கழிக்கவேண்டும்? மேலும், இவர்கள் வெளிரங்க அமல்களையும், உள்ரங்க அமல்களையும் செய்யாமல் வெறுமனே கல்வியைக்கொண்டு மட்டுமே மருட்சியடைந்து அமல்களைப் பாழாக்கிவிட்டனர்; தங்கள் அவயங்களைச் சரிவரக் கவனித்துப் பேணுவதுமில்லை.

ஏனென்றால், இவர்கள் தங்கள் நாவைப் புறம் பேசலினின்றும் பாதுகாக்கவில்லை; வயிற்றை ஹராமான உணவுகளை விட்டும் பேணவில்லை; அரசினர் அவையில் பரிசையும், பவிசையும் நாடி நடப்பதை விட்டும் பாதங்களைப் பாதுகாக்கவில்லை. இவ்வண்ணமே, இதர உறுப்பினங்களையும் தீங்குகளை விட்டுப் பேணவுமில்லை. அத்துறையில் கவனஞ் செலுத்தவுமில்லை. மேலும் சர்வ உறுப்புக்களுக்கும் அரசனான இதயத்தையும் அகங்காரம், முகஸ்துதி, பொறாமை, இன்னும் இவை போன்ற நாசகரத் தீய குணங்களிலிருந்தும் தடுத்துப் பாதுகாக்கவில்லை. இதற்குரிய சிகிச்சை பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் இஹ்யா உலூமுத்தீனில் நாம் கூறியுள்ளோம்.

இத்தகையோர் இரு வகைகளில் மருட்சியடைந்துள்ளனர். முதலாவதாக, அமல் (செய்கை) மூலம் ஏற்பட்டுள்ள மருட்சி. இவர்களுக்கு ஒரு நசவாளியை உவமிக்கலாம். அவனோ, கைதேர்ந்த வைத்திய நிபுணர்களிடமிருந்து வைத்திய சாஸ்திரத்தைக் கற்றிருக்கிறான். ஆனால், அதைக் கையாண்டு தன் நசலுக்கு மருந்து செய்யாமலும், மற்றவர்களுக்கு அதை அறிவித்துக் கொடாமலுமிருக்கிறான். அவன் படிப்பு ஏட்டுச் சுரக்காயாகவே இருக்கிறது; நசலும் நசலாகவே இருக்கிறது.

இன்னவர்கள் நாசத்தின் பக்கலிலே செல்பவர்களாவர். தங்கள் ஆத்மாவைப் பரிசுத்தப்படுத்துவதையும், துற்குணங்களை யகற்றி நிஷ்களங்கமானதாக்குவதையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு மாதத்தீட்டு (ஹைழு) ஏற்படுவதிலுண்டான நுண்ணிய கருமங்கள் யாவை, பழிக்குப் பழி

வாங்குவதன் அபூர்வ ஆராய்ச்சிகள் என்ன, சத்தியப் பிரமாணம் செய்வதன் வகை யாது, தலாக்குச் சொல்லுதல், புருஷன் மனைவி விலகி இருத்தல் முதலிய இத்தியாதி உலக விவகாரங் களின் விவரங்கள் யாவை என்று இம்மாதிரிக் கருமங்களையே சதாவும் துருவித் துருவி ஆராய்ந்து இவை பற்றிய விவாதத் திலும் பேச்சிலும் தாம் மூழ்கியிருப்பர். இவர்கள் தங்கள் வாணாள் முழுவதையும் இந்நிலையிலேயே வீண் விரயஞ் செய்வர். இவர்கள் உள்ளக்கிடக்கையெல்லாம் மற்றவர்கள் தங்களுக்கு மரியாதை காட்டவேண்டும், ஜனங்கள் மத்தியிலே தங்களுக்குத் தனி கௌரவமிருக்க வேண்டும் என்பதே. காலீ (நீதவான்) ஆகவும், முப்தீ(பத்வா கொடுப்பவர்) ஆகவும் தாங்கள் பெயர் பெற்றிலங்க வேண்டுமென்பதே இவர்களின் வேட்கையாகும். 'அவர் செய்த அந்தத் தீர்ப்பு சரியில்லை. இவர் கொடுத்த இந்தப் பத்வா பொருத்தமில்லை' என்று பரஸ்பரம் குற்றஞ்சாட்டுவதிலும், 'நான் சொல்வதே சரி, மற்றவருக்கு என்ன தெரியும்?' என்று குறைகூறுவதிலும் ஒருவருக்கொருவர் சளைக்கமாட்டார்கள். ஆனால், இவர்கள் பரஸ்பரம் நேருக்கு நேர் சந்திக்கும்போதோ தேனொழுகப் பேசுவார்கள். இது வெறும் மாய்மாலம்தான்.

இரண்டாவதாக, இவர்கள் இல்மு (கல்வி) மூலம் மருட்சியடைந்துள்ளனர். அதாவது, தாங்கள் பெற்றிருக்கும் பத்வா சம்பந்தமான இல்முதான் இல்மு என்றும், அது தவிர மற்ற எதுவும் இல்மு இல்லை என்றும், அஃதே அல்லா(ஹ்) வின் சமூகங் கொண்டு சேர்ப்பிக்கக்கூடியது, ஈடேற்றம் பெறச் செய்யக்கூடியது என்றும் இவர்கள் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

உண்மையை ஆராய்வோம்: அல்லா(ஹ்)வின் சமூகங் கொண்டு சேர்ப்பிப்பதும், ஈடேற்றந் தருவதும் நிச்சயமாக அல்லா(ஹ்)வின் மீதுள்ள நேசம் (ஹுப்புல்லாஹி) தான். அல்லா(ஹ்)வை அறியக்கூடிய (மஃரிபா) ஞானம் இருந் தாலன்றி அல்லா(ஹ்)வின் நேசம் என்பது உண்டாக முடியாது, அஃதின்றி இறைவனுடைய அன்பைப் பெறுவது எங்ஙனம் ?

மஃரிபா என்னும் ஞான அறிவு அவனுடைய (தாத்து) தன்மை பற்றியது; அவனுடைய (ஸிபத்து) வருணனைகள் பற்றியது; அவனுடைய (பிஃலு) செயல்களைப் பற்றியது.



ஹஜ்ஜுக்குப் போகிறேனென்று கூறிக் கட்டுச்சாதம் மட்டும் கட்டிக்கொண்டு, ஹஜ்ஜு செய்யப் போகாமல் வழியிலே நின்றுகொண்டிருப்பவனைப் போன்ற நிலையில் தான் இந்த மதிமயக்கக்காரர்களும் இருக்கின்றனர். பிக்ஹு என்ற பதத்தின் கருத்து அறிந்து தெரிவது என்பதாகும். அதன் நோக்கம் அல்லா(ஹ்)வை அறிவது தான். ஆகவே, நரகத்தைக் கொண்டும், கடுமையான மறுமைத் தண்டனைகளைக் கொண்டும், அச்சுறுத்தும் அவன் (ஸிபத்து) குணங்களையும், தீயவைகளைக் கண்டித்து விலக்கும் அவன் (அப்ஆலு) செயல்களையும் மனத்தால் பயந்துணர்வது கொண்டும் இறைவ னிடங்கொள்ளவேண்டிய பயபக்தி (தக்வா) செம்மையுட னிருக்க வேண்டும். இவற்றை இவர்கள் உணர்வதேயில்லை.

திரு குர்ஆனில் அல்லாஹ் அருளியுள்ளான்:

''ஆகவே, அவர்களில் (மூமின்களில்) உள்ள ஒவ்வொரு கோஷ்டியாரிலுமிருந்து ஒரு கூட்டத்தார் சன்மார்க்க ஞானத்தைக் கற்றுக்கொள்வதற்காகப் புறப்பட வேண்டாமா? தங்கள் சமூகத்தாரிடம் தாங்கள் திரும்பி வந்ததும் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவும், அதன் மூலம் அவர்கள் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் இயலுமல் லவா!''(9:122.)

மற்றொரு வகையினர் அபிப்பிராயபேதமான விஷயங் களை மட்டும் நன்றாக நோட்டமிட்டு மனனஞ் செய்து கொண் டுள்ளார்கள். மற்றவர்களுக்குத் தெரியாத நுண்ணிய விஷயங்க ளெல்லாம் தங்களுக்கே தெரியும் என்று கூறி அவற்றைப்பற்றி ஏனையோருடன் குதர்க்க வாதம் செய்துகொண்டிருப்பார்கள். தம்மோடு விவாதிப்பவரை அடக்கி வாய் மூடச் செய்யவேண்டு மென்ற நோக்கத்தோடு பிடிவாதமாகத் தாம் சொல்வதே சரியென்று விதண்டாவாதம் செய்வார்கள். தாம் செய்யும் தாவா உண்மைக்கு மாற்றமானதாய் இருந்தாலுங்கூடத் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்றே சொல்லிக் கொண்டி ருப்பார்கள். இன்னார் சொன்ன மார்க்கத் தீர்ப்பைத் தட்டிப்பேச யாருங் கிடையாது என்று தம்மைப் பற்றி ஜனங்களிடையில் பிரபல்யமாக வேண்டுமென்ற ஒரே ஆசைதான் இவர்களுக்கு.

மதுஹபுடைய இமாம்களுக்குள்ளே இருக்கக்கூடிய அபிப் பிராயபேதங்களுக்காக இமாம்களையும், அவர்கள் எடுத்திருக்

கும் ஆதாரங்களையும் பற்றிக்கூடக் குறை கூறத் துணிந்து விடுவார்கள். மற்ற ஆலிம்களுடைய பேச்சில் அல்லது பத்வா வில் அல்லது நூலில் என்னென்ன குற்றங்குறைகள் உள்ளன என்று குற்றங் காணும் கண்கொண்டே நோக்குவார்கள். இவ்வாறாக மற்றவர்களைக் குறைகூறுவதிலும், அலட்சியப் படுத்திப் பேசுவதிலுமே இரவும் பகலும் இவர்கள் தங்கள் ஆராய்ச்சியைச் ஈடுபடுத்துவார்கள். ஆராய்வதன் மூலம் நல்லம்சங்களான உண்மைகளைக் கிரகிக்கவேண்டும் என்ற ஆர்வமிருப்பின் எவ்வளவோ புண்ணியமாகுமே! ஆனால், இவர்களில் லட்சியம் அஃதன்றே! வீண் தர்க்கங்கள் பண்ணு வதும், விவாதங்கள் செய்வதும், பிறரைத் தாக்குவதும், வரட்டு ஜம்பங்கள் புரிவதுமல்லவா இவர்களின் குறிக்கோளாயுள்ளது! தாங்கள் பெற்றுள்ள கல்வி ஞானங் கொண்டு இம்மையிலும், மறுமையிலும் பயனடைவதை விடுத்து இவ்வுலகில் மட்டும் பேரும் புகழும் பெற்று, மறுமையில் நஷ்டத்தையல்லவா தேடிக்கொள்கிறார்கள்! அவ்வாறு பேரும் புகழும் தேடித் திரிவதை விடுத்துத் தங்கள் இதயங்களைப் பரிசுத்தம் செய்து பக்குவப்படுத்துவதில் முனைந்தால் அவர்களுக்கு எவ்வளவோ நலமாயிருக்கும்! அதனால் இம்மையிலும், மறுமையிலும் நற்பாக்கியம் பெற்ற நன்மாந்தராகி விடுவார்களே! தானே பெரியவன் என்று இவ்வுலகில் அவர்கள் பூண்டிருந்த அகந்தையானது மறுவுலகில் அவர்களைத் தாக்கி வேதனைப் படுத்தக்கூடிய ஜ்வாலை விட்டெரியும் அக்கினியாகவல்லவா இருக்கும்!

மாண்புமிக்க மதுஹபுடைய இமாம்களைப் பற்றியும் இவர்கள் குறை காணத் துணிந்துவிட்டனரே! மதுஹபுடைய இமாம்கள் வெறுமனே பொறுப்பற்ற தன்மையில் தங்கள் சுய இச்சைப்படியா மதுஹபுகளை நிர்ணயித்துள்ளார்கள்? இல்லையே! மதுஹபுடைய சட்டதிட்ட அத்தாட்சி மூலங்கள், அடிப்படைத் திட்டங்கள் யாவும் அல்லா(ஹ்)வின் வேதமான திரு குர்ஆனையும், அவன் அருமைத் தூதர் நாயகம் (ஸல்) அவர்களது மேலான ஸுன்னத்து சொல், செயலையும் ஆதார மாகக்கொண்டல்லவா நிர்ணயிக்கப்பட்டுள்ளன! இவற்றை யுணராது வெறுக்கத்தக்க முறையில் மருட்சி கொண்டு மயங் கிய இவர்கள் போக்கு வருந்தத்தக்கது.



வேறொரு வகையினர் தர்க்க சாஸ்திரத்திலும் விவாதக்கலையிலும் மூழ்கியுள்ளார்கள். தங்களை எதிர்த்து மறுத்துப் பேசுவோரை வாயடங்கச் செய்வதும், எதிரியின் வாதத்தில் எங்கே பிடி இருக்கிறது என்று பார்த்து அவர்களை மடக்குவதுமே இவர்கள் தொழிலாகும். இவ்வாறான தர்க்க சாஸ்திரத்தை இவர்கள் பிறருக்கும் படித்துக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இத்தன்மையான இவர்கள் இரு வகைப் படுவர். முதல் வகையினர்: தாமும் வழி பிசகி ஏனையவரையும் வழி பிசகச் செய்பவர்கள். (ளால்லுன், முளில்லுன்) இவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸுன்னத்துக்கு மாற்றமாக நடப்பார்கள். தாங்கள் வழிபிசகியிருப்பதை மறந்திருப்பதோடு, தங்களின் போக்கே ஈடேற்றந்தரக்கூடியது என்றும எண்ணிக் கொண்டிருப்பார்கள். இவர்களில் இவ்வாறாக இன்னும் பலர் உண்டு. தங்களுள் ஒருவரையொருவர் ஏசிப்பேசி இவர்கள் குபுர் பத்வா கொடுத்துக்கொண்டிருப்பார்கள். தலீல் அத்தாட்சி களைக் கண்டுபிடிக்கும் துறையில் இவர்கள் வழி பிசகி விட் டார்கள். சரியான தலீல் சான்றுகள் எவை என்று ஆதாரங் களையும் அடிப்படைகளையும் நிர்ணயிப்பதில் இவர்கள் தவறிவிட்டார்கள். உண்மையைச் சரியாக உணராத இவர்கள் உறுதியான சான்றுகளைச் சந்தேகமானவையாகவும், சந்தேகமானவற்ளைப் பக்காவானவையாகவும் நேர்மாற்ற மாக்கிக்கொண்டார்கள்.

இரண்டாம் வகையினர்: இவர்கள் கொள்கையில் மோசமானவர்களல்லர்; பெருமானார் (ஸல்) அவர்களுடைய ஸுன்னத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆனால், ஒரு காரியத்தில் இவர்கள் மதிமருட்சியுள்ளவர்கள். சர்வ காரியங்களிலும் பிரதான்யமுடையது தர்க்க சாஸ்திரம் தான்; அதுவே சன்மார்க்கத்தில் அல்லா(ஹ்)வுக்கு மிகச் சமீபமான முடுகுதலைத் தரக்கூடியது; தர்க்கம், விவாதம் இல்லாமல் யாரும் சன்மார்க்க சம்பூரணத்துவமடைய முடியாது; தர்க்க சாஸ்திரம் கற்காமலும் விவாதங்கள் புரியாமலும் இறைவனைக் கொண்டு விசுவாசம் பூண்டவன் உண்மை விசுவாசி யாகமாட்டான; அவன் சம்பூரணமானவனுமல்லன்; இறைவன் பக்கம் முடுகுதலானவனுமல்லன் என்றெல்லாம் நம்புவதே இவர்களுடைய மதிமருட்சியாகும். இவர்களுடைய இவ்வெண் ணமும் அபிப்பிராயமும் தவறானவை. இவர்கள் குறிப்பிடும்

தர்க்க, விவாத சாஸ்திரங்களோடு பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் அருமை ஸஹாபாக்களுக்கும் சம்பந்தம் இருந்ததா என்ற விஷயத்தில் இவர்கள் கண்ணோட் டஞ் செலுத்தவில்லை. ''எனக்கடுத்தபடியாகப் படைப்புகளில் சிரேஷ்டமுடையோர் எனது ஸஹாபாக்கள்?' என்று நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களைப் பற்றிச் சாட்சி பகர்ந்துள் ளார்கள். அத்தகைய உத்தமர்களின் காலத்திலெல்லாம் இவர் கள் குறிப்பிடும் தர்க்கமும், விவாதமும் இருந்ததில்லையே! அது பற்றிய உண்மைகளை ஆராயுந் துறையில் இவர்கள் பார்வை செல்லவே இல்லை.

''எந்தச் சமூகமும் அவர்களுக்குள்ளே தர்க்கமும் விவாத மும் தலைதூக்கி யல்லாது வழிகெடுவதில்லை'' என்று நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக அபூ உமாமதுல் பாஹிலீ (ரலி) கூறியுள்ளார்கள். இவற்றையெல்லாம் உணராது இம்மருட்சியாளர்கள் தர்க்க சாஸ்திரத்தை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு மதிமயக்கமடைந்துள்ளார்கள்.

வேறொரு வகையினர் வஃளு உபதேசங்களில் பராக்கா யிருக்கிறார்கள் மனத் தூய்மை, நற்குண ஒழுக்கம், அச்சம், ஆதரவு, சாந்தம், நன்றி, இறைவன்மீது (தவக்குல்) பொறுப்பு, நம்பிக்கை, உலகபற்றின்மை, உண்மை (யகீன்) உறுதி, கலப்பற்ற (இக்காஸ்) தன்மை, சத்தியத் தன்மை ஆகியவை களைப் பற்றியெல்லாம் விளக்கமாகவும், உருக்கமாகவும் அழகான சொல்லடுக்குடன் உபதேசிப்பார்கள்; மேலும், சித்தசுத்தியுடனிருப்பவர்களுடைய பதவியின் மேன்மை எத்தகையது என்பது பற்றியும், உள்ளத்தைச் சுத்தமாக்கிப் பக்குவப்படுத்தி நற்குணங்களில் உரைவிடமாக வேண்டுவதன் அவசியம் பற்றியும் உள்ளத்தைக் கவரத் தக்க முறையில் மதுரமாக ஹிதோபதேசம் புரிவார்கள்; ஆனால், கல்வி அறிவே இல்லாத சாதாரண ஜனங்களிடமிருக்கக்கூடிய நற்பண்புகளை கூட இவர்களிடம் காணமுடியாது.

பிறருக்கு உபதேசம் புரிந்து அல்லா(ஹ்)வின் நேசத்தை அவர்களுக்கு ஊட்டிவரும் தாங்கள், மார்க்க ஞானங் கற்றுப் பட்டம் பெற்றுள்ள தாங்கள். அக்காரணங்களால் அல்லா(ஹ்) விடம் ஈடேற்றம் பெற்றுள்ளவர்கள், தாங்கள் பற்றற்றிருத்தல் (ஸுஹ்து) பற்றிக் கூறுபவர்களாக இருப்பதனால் அந்தப்



பிரகாரம் அமல் செய்யாவிடினுங்கூடத் தாங்கள் அல்லா(ஹ்) விடம் பிழை பொறுக்கப்பட்டுள்ளவர்கள் என்றெல்லாம் அவர் கள் மனதில் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். முந்திய ஏனைய வகையினரைவிட இவர்கள் மிகவும் பொல்லாத மருட்சி யிலாழ்ந்திருக்கிறார்கள்.

அல்லா(ஹ்)வையும், அவன் ரஸூலையும் தாங்களே மிகவும் நேசிப்பவர்கள் என்று இவர்கள் நினைத்துள்ளார்கள். கலப்பற்ற (இக்காஸ்) தன்மை பற்றி மகாநுண்ணிய விஷயங் களையெல்லாம் தெளிவாக விளக்கிவைக்கும் தாங்கள், உண் மையில் கலப்பற்ற சித்தசுத்தி பெற்றவர்களாய் இருக்கப் போய்த்தான் அவ்வாறான விஷயங்களையெல்லாம் தெரிய, பேச முடிகிறதென்றும், நப்ஸின் அணுப்போன்ற குற்றங் குறைகளையும் படம் பிடித்தாற் போலக் காட்டி விளக்கும் தாங்கள் அத்தகைய சக்தியைப் பெற்றது உண்மையில் அக் குற்றங் குறைகளையெல்லாம் தங்களின் ஆத்மாவிலிருந்து அகற்றியிருப்பதனால் தான் என்றும் இவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறே, ஏனைய கருமங்களிலும் இவர்கள் தாங்கள் பரிசுத்தமுள்ளவர்கள் என்று சுயமே கருதிக் கொண்டிருக்கிறார்கள். யதார்த்தத்தில், சர்வ ஜனங்களையும் விட இவர்களே இதய மாசுடையவர்களாயும், பூலோக இச்சை மிகந்தவர்களாயும் இருக்கிறார்கள். மண்ணுலகின் மீது மட்டில்லா மோகங்கொண்ட இவர்கள், மற்றவர்களின் மனத் தைத் தங்கள்பால் வசீகரிப்பதற்காக உலக மாயை, பற்றற்றி ருத்தல் பற்றி வார்த்தைகளை அள்ளிக் கொட்டுவார்கள். ஆனால், இவர்கள் உள்ளமோ பூலோக இன்பங்களைத் துய்க் கும் வேட்கையில் துள்ளிக் குதித்துக்கொண்டிருக்கும். தாங்கள் சித்தசுத்தியற்றவர்களாய் இருந்து கொண்டு ஏனையோர் சித்தசுத்தி பெறவேண்டுமெனப் போதனை செய்வார்கள். அல்லா(ஹ்) அளவில் மனமுருகி இறைஞ்சிக் கெஞ்சும் பாவ னையில் வெளிப் பாசாங்காக அழுதும், கண்ணீர் வடித்தும் பிரலாபித்துத் துஆக் கேட்பார்கள். ஆனால், யதார்த்தத்தில் அல்லா(ஹ்)வுடைய பொருத்தத்தை விட்டு அப்பால் ஓடும் இயல்புடையவர்களாயிருப்பார்கள். அல்லா(ஹ்)வைக் கொண் டும், ரஸூலைக் கொண்டும் எச்சரிக்கை செய்து ஏனையோ ருக்குப் பயமுறுத்தி அச்சமூட்டுவார்கள். ஆன்ால், தாங்களோ அல்லா(ஹ்)வைக் கொண்டும், ரஸூலைக் கொண்டும் சற்றுங்

கூட அச்சமுறாமல், நிர்ப்பயமாயும் அலட்சியமாயுமிருப்பார்கள். அல்லா(ஹ்)வின் தியானத்தில் (திக்ரில்) எப்போதும் நிலைத்திருக்குமாறு ஏனையோருக்கு இயம்புவார்கள். ஆனால், தாங்களோ அடியோடு அல்லா(ஹ்)வை மறந்திருப்பார்கள். மற்றவர்களை அல்லா(ஹ்)வின் பக்கம் முடுகப் பண்ணுவதாகக் கூறிக்கொள்வார்கள். ஆனால், அவர்களோ அவனது திருச் சமூகத்தை விட்டும் மிக மிகத் தொலைவில் இருப்பார்கள். தீய குணங்களை வெறுத்துப் பேசுவார்கள். ஆனால், அத்தனை தீய குணங்களும் அவர்களிடந்தான் குடிகொண்டிருக்கும். சிருஷ்டிப் பொருட்களிடம் ஆதரவு வைத்துப் பற்றுதல் கொள்ளாமல் சிருஷ்டி கர்த்தாவாகிய அல்லா(ஹ்)விடமே ஆதரவு வைத்து அவன் மீதே நம்பிக்கை வைத்து அவனிடமே சரண்புகுங்கள் என்று மற்றவர்களுக்குக் கூறுவார்கள். ஆனால், தாங்களோ சிருஷ்டிப் பொருட்களையே முழுதும் நம்பி அவற்றிடமே அதிக வேட்கையும் பக்ஷமும் கொண்டிருப்பார்கள்.

மேலும், மக்களைச் சீர்திருத்துவதே தங்கள் நோக்கமெனச் சொல்லிக் கொள்ளும் இவர்கள், புகழையும் செல்வாக்கையுமே நோக்கமாகக் கொண்டு உபன்யாசங்கள் நிகழ்த்துகிறார்கள். ஜனங்களிடையில் தங்களின் அலங்காரப் பிரசங்கங்களை நிகழ்த்தி அவற்றின் மூலம் வருவாய்க்கு வழிசெய்துகொள்கிறார்கள். இத்தகைய பிரசங்கங்களுக்குத் தடையேற்பட்டுவிட்டால் இவர்களின் ஜீவனத்துக்கு நெருக்கடியாகிவிடும். அது தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை. ஆனால், இவர்கள் வாயால் என்னவோ 'சுயநலமே எங்களிடமில்லை. ஜனங்களை நேர் வழியில் செலுத்துவது தான் எங்கள் நோக்கம்' என்று சொல்லிக் கொள்கிறார்கள். இப்படிக் கூறிக்கொள்ளும் இவர்களின் வஃளு மஜ்லிசுக்கு வழக்கமாக வரக்கூடிய ஜனங்கள், இவர்கள் போன்ற வேறு உபதேசிகள் யாரிடமாவது போய் உபதேசம் பெறுகிறார்கள் என்று கேள்விப்பட்டால் உடனே பொறாமையும் மனப் புழுக்கமுங் கொண்டு, அதன் கடுமையாலே மரணித்துப் போகுமளவுக்கு எரிச்சலடைகிறார்கள். அவ்வாறு மற்றவர்களிடம் உபதேசத்தைக் கேட்டு வந்தவர்கள் இன்னாருடைய உபதேசம் நல்ல அருமையானது, விசேஷமானது என்று அதனைப் புகழ்ந்து அதன் மகிமையை எடுத்துக் கூறுவதைத் தங்கள் காதால் கேட்டுவிட்டாலோ அல்லா(ஹ்)வின் படைப்புகளில் யாரும் கொள்ளாத ஆத்திரமும், எரிச்சலும்



கொண்டு தங்களின் மனப் புழுக்கத்தை வெளிக் கொட்டுவார்கள்; அவர்கள் மீது காய்ந்து விழுவார்கள். அந்தோ, இன்னவர் மதி மருட்சியில் முற்றும் அழுந்திப் போனவர்களாவர். இவர்கள் மனத்தை மாற்றிச் சன்மார்க்க நெறியின் பக்கம் இவர்களை மீட்டுதல் மிகக் கஷ்டமானகாரியம்.

உபதேசிகளில் மற்றொரு குழாத்தினர் ஜனங்களுக்கு அத்தியாவசியமாகச் சொல்லிக் காட்டப்படவேண்டிய விஷயங்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலை கொள்ளாதிருக்கிறார்கள். இத்தகையவர்கள் தாம் இக்காலத்தியப் பேச்சாளர்களில் மிகுதமாய் உள்ளனர். ஆண்டவனது கார்மானத்தைப் பெற்ற ஒரு சிலரைத் தவிர அநேகமாக ஏனையவர்களெல்லாம் இக்குழாத்தினரையே சேருவர்.

இவர்கள் பேச்செல்லாம் எதுகை, மோனை அலங்காரத்துடனும், மிடுக்கான அடுக்கு மொழிகளுடனும், எல்லோராலும் தெரிந்துகொள்ள முடியாத சிக்கலான, மார்க்க வரம்புக்குப் புறம்பான கருத்துக்களுடனும், பயனில்லாத வீண் புலம்பலாகவேயிருக்கும். இவர்களின் முழுச் சிந்தையும், கவனமும், முயற்சியும் சொற்களைக் கவர்ச்சிகரமாக அமைத்து, அழகிய அடுக்கு மொழிகளாக்கிப் பேசுவதிலேயே சென்று கொண்டிருக்கும். கவிதைகளைப் போன்று தங்களின் வாய்ப் பேச்சு இனிமையுடனிருத்தல் வேண்டுமென்பது இவர்கள் அவாவாகும். ஜனங்கள், சங்கீதம் (ஸமா) கேட்கும் இன்பத்தில் எப்படித் தம்மை மறந்து பரவசமாகிச் சுய உணர்விழந்து அழுது புறண்டு கூச்சலிடுகிறார்களோ அஃதேபோன்று தங்களின் வசனங்களைக் கேட்கும் பரவச உணர்ச்சி பெற்று லயித்துச் சுய உணர்விழந்து விட வேண்டும் என்ற ஆசையால் இவர்கள் தங்கள் முழுமுயற்சியையும் அதில் காட்டுவார்கள். உண்மையில் ஹக்குடைய நேசப்பற்று மிகைத்த (மஹப்பத்) பேரின்பக் காதல் பூண்டு தவாஜுது - ஷவுகு - ஐதுபு என்ற பரவசம் உண்டாகித் தன்னை மறந்த நிலைகள் (ஹால்கள்) மிகைப்பது போற்றத்தக்கதே. ஆனால், இவர்களோ வீணான, மோசமான வெளிரங்க எண்ணங்களைக்கொண்டு, வெளிப்பகட்டிற்காகவே இத்துறையில் முனைந்திருக்கிறார்கள். இவ்வாறாக, உலகத்தாரின் பாராட்டையும் புகழையும் எதிர்பார்த்து உபதேசிக்கும் இத்தகையோர் மனிதரிலுள்ள ஷைத்தான்களாவர்; தாமுங் கெட்டு மற்றவர்களையும் சீரழித்தவர்களாவர். ஏனெனில், முன்குறிப்பிட்ட

அந்தச் சிலராவது தங்களைச் சீர்திருத்தாவிடினும் மற்றவர்களையாவது சீர்திருத்த முனைகின்றனர். ஜனங்களுக்கு நல்லுபதேசங்களை யளிப்பதிலேயாவது ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களோ அல்லா(ஹ்)வின் நற்பாதையை விட்டும் ஜனங்களைத் தடுத்து, அல்லா(ஹ்)வை மறந்து உலக இச்சை எனும் குப்பையால் அவர்கள் இதயங்களை நிறப்பும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

''ஜீவனத்துக்காகச் செய்யப்படும் கருமம் எத்தகையதாயினும் அது குற்றமாகாது'' என இவர்கள் சொல்லிக் கொண்டு, துன்யாவின் குப்பைகளில் (இச்சைகளில்) பெரிதும் ஆசை பூண்டு மற்ற ஜனங்களையும் அல்லா(ஹ்)வின் விஷயத்தில் மருட்சி பெறப்பண்ணி வழிகெடுத்து விடுகிறார்கள். முக்கியமாக இவர்கள் அலங்கார, ஆடம்பர உடுப்புக்களையணிந்து, கர்வம் பிடித்தவர்களும், முகஸ்துதிப் பிரியர்களும் புடைசூழ வஃளு மஜ்லிஸ்களைக் கூட்டி, அல்லா(ஹ்)வின் அருளைவிட்டும் பேறு கெட்டுப் போகும்படியான, மோசமான பிரசங்கங்களையே நிகழ்த்துகிறார்கள். அவற்றின் மூலம் ஜனங்களை மோசமான கொள்கைகளிலும், பாவமான கருமங்களிலும் ஈடுபடுத்தி விடுகிறார்கள். இவர்களைவிட்டும் அல்லாஹ் நம்மைக் காப்பாற்றுவானாக!

உபதேசிகளில் மற்றொரு கூட்டத்தினர் உலகப்பற்றற்று இருத்தல் சம்பந்தமான வாக்கியங்களையும், அவை சம்பந்தான ஹதீஸ்களையுமே பேசிக்கொண்டிருப்பார்கள். இவர்களில் சிலர் மற்றவர்களிடம் ஏதோ தாங்கள் கேட்டுப் படித்ததையும், கேள்விப்பட்டதையும் நுனிப் புல் மேய்ந்தாற்போல் மனப்பாடம் பண்ணிக்கொண்டு, ஆனால், அவற்றின் கருத்தைச் சரிவர உணராது, சபைகூட்டி, பிசங்க மேடைமீதேறிச் சொற்பொழிவாற்றுகிறார்கள். மற்றும் சிலர் ஜனங்கள் கூடும் கடைவீதிகளில் அமர்ந்து இத்தகைய வாக்கியங்களை எடுத்துப் பிரசங்கிக்கிறார்கள். உலக மாயையில் மோசம்போகாத பெரியார்களின் சரிதைகளையும், அவர்களின் நல்வாக்கியங்களையும் தாங்கள் நன்றாகத் தெரிந்திருப்பதாலும், அவை பற்றிப் பேசிக்கொண்டிருப்பதாலும் அல்லா(ஹ்)விடம் தாங்கள் நல்லந்தஸ்து பெற்றவர்கள் - பாவ மன்னிப்புப் பெற்றவர்கள் என்று இவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எந்தப் பெரியோர்களைப் பற்றி



இவர்கள் அறிந்தும், தெரிந்தும், அவர்களின் வாக்கியங்களைக் கூறிக்கொண்டுமிருக்கிறார்களோ அந்தப் பெரியோர்களைப் போன்று இவர்களும் அமல்செய்ய முயலாமலிருப்பதுடன், அவர்களின் போக்குக்கு நேர் முரணாக நடப்பதுடன் சதாவும் உலகப் பற்றிலே மூழ்கிக் கிடக்கிறார்கள். இன்னவர்கள், முந்திய யாவரையும் விட ஆழ்ந்த மதிமயக்கமுற்றவர்களாவர்.

ஆலிம்களில் பிறிதொரு கூட்டத்தினர் முழு நேரத்தையும் ஹதீஸுடைய இல்மில் செலவிடும் முஹத்திஸீன்களாய் இருக்கின்றனர். அத்துறையில் நாயக வாக்கியங்களைத் திரட்டுவதிலும், ரிவாயத்துகளைச் சேகரிப்பதிலும் இவர்கள் ஆழ்ந்துள்ளார்கள். ஆனால், மற்றவர்களைவிடத் தாமே அதிகமான ஹதீஸ்களை அறிந்தவர், அதிகப் பிரயாசையும் சிரமமும் பட்டுப் பல நுண்ணிய ஹதீஸ்களைச் சேகரித்தவர், பல்வேறு கிராமங்களிலும் போயலைந்து பெரியார்கள் பலரைக் கண்டு அதிகமான ஹதீஸ்களைச் சேகரித்தவர் ஆகவேண்டு மென்ற எண்ணமே இவர்களில் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டுள்ளது. ''நாம் இன்ன ஸ்தலங்களுக்கெல்லாம் சென்றோம்; மேதாவிகளான இன்னாரையெல்லாம் சந்தித்தோம்; மற்றவர்கள் தேடிக் கொணராத பல அபூர்வ ஹதீஸ்களையெல்லாம் ஆதாரப்பூர்வமாகப் பெயர் வரிசை (இஸ்னாது)களுடன் சேகரித்து ரிவாயத்துச் செய்துள்ளோம்'' என்று பெருமையோடு இவர்கள் கூறிக்கொள்வார்கள்.

பல காரணங்களால் இத்தகையோர் மதிமயக்க முற்றிருக்கிறார்கள். அவற்றுள் ஒரு காரணத்தால், வேத நூற்களைச் சுமக்கும் கழுதைக்கு இவர்கள் ஒப்பாகிறார்கள். ஏனெனில், தாங்கள் சேகரித்துள்ள ஹதீஸ்களின் தாத்பரியத்தைத் தாங்கள் உணரவேண்டும், அவற்றின் கருத்துக்களை நன்கு சிந்தித்துத் தாங்கள் அனுஷ்டானம் புரியவேண்டும் என்ற எண்ணமே இவர்களுக்கு உண்டாவதில்லை. இன்னாரிடமிருந்து இன்ன ஹதீஸைக் கேட்டுள்ளோம் என்று மற்றவர்களுக்கு அதைச் சொல்வதுடன் மட்டும் இவர்கள் நிறுத்தி, அதுவே போதும் எனக் கருதினரே தவிர ஹதீஸ்களின் கருத்தைத் தாங்கள் கிரகிக்கவோ, அவற்றின் தத்துவத்தைத் தாங்கள் உணரவோ முனைவதேயில்லை. இவர்கள் போக்கு நன்மைக்கு வெகு தூரமானதாம்.

ஹதீஸ் கொண்டு நாடப்பட்டுள்ளது யாது? அதை உணர்வதும், அதன் கருத்தை ஆராய்ந்து சிந்தையில் கொள்வது மன்றோ! அதாவது முதலில் ஹதீஸைக் கேட்கவேண்டும்; பின்பு அதைப் பேணி மனனம் செய்யவேண்டும்; பின்பு அதன் தத்துவத்தை கிரகிக்க வேண்டும்; பின்பு அதற்கேற்ப அனுஷ்டானம் புரிந்து ஒழுகி அமல் செய்யவேண்டும். இவற்றையெல்லாம் செவ்வனே செய்து, அப்பால்தான் மற்ற வர்களுக்கு ஹதீஸை எடுத்தியம்பவேண்டும். ஆனால், இக்கூட் டத்தினரோ தாங்கள் கேள்வியுற்றதோடு மட்டும் நிறுத்திக் கொண்டனர். அதனால் இவர்களுக்கு ஒரு பயனுமுண்டாக வில்லை.

இக்காலத்தில் சிறுவர்கள் பலர் ஹதீஸ்களை ஓதுகிறார் கள்; ஆனால், அவர்கள் மறதியில் முதன்மையாகத் திகழ்கி றார்கள். அவர்களுக்கு அவற்றை ஓதிக் கொடுக்கும் பெரியார் களும் சில சந்தர்ப்பங்களில் மறதியுடனிருக்கக்கூடும். அவர்கள் முன்பாகப் பிள்ளைகள் ஹதீஸை ஓதிக்கொண்டிருக்கும்போது அதை அப்பெரியார்கள் கவனியாமலிருக்கலாம்; அல்லது தூங்கிக் கொண்டுமிருக்கலாம். அச்சந்தர்ப்பத்தில் ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்யச் செல்பவர்கள் அந்த 'ஹதீஸை' அவர்கள் கூறியதாகத் தமது தொகுப்பில் சேர்த்துக் கொண்டிருக்கலாம்.

ஹதீஸ் கேட்பதற்கும், ரிவாயத்துச் செய்வதற்கும் அடிப் படை மூலம், நபி நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நேரில் கவனித்துக் காது தாழ்த்திக் கேட்பதுதான். அவ் வண்ணம் கேட்டதை ஓரெழுத்தும் விடாது மனனஞ்செய்து பேணி பின்பு, அதற்கொப்ப வழுவின்றிப் பிறருக்கு எடுத்துரைத்தல் வேண்டும். ரிவாயத்து என்னும் அறிவிப்பானது பேணி மனனஞ் செய்வதன் மூலமும், மனனஞ் செய்தல் என்பது காது தாழ்த்திக் கவனித்துக் கேட்பதன் மூலமுமே உண்டாகும்.

அருமை நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் சமூகத்திலிருந்து ஹதீஸைக் கேட்க முடியாவிடின், அவர்களின் அருமை ஸஹாபாக்களிடமிருந்து அல்லது அவர்களை உண்மையோடு பின்பற்றிய தாபியீன்களிடமிருந்து கேட்கலாம். அவர்களிடமிருந்து கேள்விப்படும் ஹதீஸ்கள் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டதற் கொப்பாகும். ஏனெனில், அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அல்லும்



பகலுமாய் இருந்து ஹதீஸ்களைத் காது தாழ்த்திக் கேட்டு மனத்தில் பதியவைத்து அவற்றிற்கேற்ப ஒழுகி வந்துள்ளார்கள். அவர்களைப் பின்பற்றி இவர்களும் ஹதீஸ்களை அதபுடனும், கவனத்துடனும் கேட்டு மனதில் பதிய வைக்கவேண்டும். தாம் கேள்வியுற்றுள்ள ஹதீஸில் ஓர் அட்சரமேனும் சந்தேகத்திற்கிட மில்லாத தன்மையில் ரிவாயத்துச் செய்யவேண்டும். அதில் ஏதும் சந்தேகமோ அல்லது ஞாபகப் பிசகோ ஏற்படின் அதை ரிவாயத்துச் செய்ய முற்படலாகாது. ஏனெனில், அதன் மூலம் தவறுகள் விளையக்கூடும்.

ஹதீஸ்களைப் பாடமிட்டுப் பேணுவது இரு வகையில் சாத்தியமாகும்: (1) தரிபாடான ஞாபகத்துடன் அவற்றை மனதில் நிலைபெறச் செய்தல். (2)கேள்வியுற்றவற்றை எழுதிப் பதிந்துகொள்ளல். இவ்வண்ணம் எழுதிப் பதிந்ததை தன்னல்லாத மற்றவர் யாரும் கூடுதல், குறைவுசெய்து மாற்றி விடா வண்ணம் பாதுகாத்தல் வேண்டும். ஏனையோர் வந்து ஸஹீஹான அந்த ஹதீஸை மாற்றிக் குழப்பிவிடாமல் தன் பொறுப்பில் வைத்துப் பாதுகாத்துவரவேண்டும். இவ்வண்ணம் கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் பேணிவரவேண்டிய ஹதீஸ்களைச் சிறுவர்களிடமிருந்தோ, மறதியாளர்களிடமி ருந்தோ, தூங்குமூஞ்சிகளிடமிருந்தோ கேட்டு ரிவாயத்துச் செய்யலாகாது. அவ்வாறு செய்தலாகுமென்றால் தூளியில் தூங்கும் பாலர்களிடமுங்கூடக் கேட்டு ரிவாயத்துச் செய்யலாம் என்றாகிவிடும். இதுபோன்று,ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்யும் முஹத்திஸீன்களின் விஷயத்தில் எத்தனையோ பொறுப்புகளும், ஷறுத்துக்களும் உள்ளன.

பொதுப்படையாகக் கூறும்போது ஹதீஸ்கொண்டு நாடப்படும் கருமம் அதன் பிரகாரம் அமல் செய்வதே. அதற்கனுசரணையாக, ஹதீஸின் கருத்துக்களையும், அந்தரங்க அம்சங்களையும் உணர முற்பட வேண்டும். திரு குர்ஆனி லிருப்பது போன்றே ஹதீஸிலும் பல அபூர்வக் கருத்துக்கள் செறிந்திருக்கின்றன.

அபூ ஸுஃப்யான் இப்னு அபில் கைரில் மன்ஹூ(ரலி) பற்றி அறிவிக்கப்படுகிறதாவது: அவர்கள், ஸாஹிர் இப்னு அஹ்மதுஸ் ஸர்கஸீ(ரலி)யின் சபைக்கு விஜயஞ்செய்தார்கள். ''அனாவசியமானவை (வீண் வார்த்தை)களை விட்டு நீங்கி

யிருத்தல் ஒரு மனிதனுடைய இஸ்லாமின் சிறந்த அம்சமாகும்'' என்ற நாயக வாக்கியந்தான் அங்கு ரிவாயத்துச் செய்யப்பட்ட ஹதீஸில் முதலாவதாயிருந்தது. ''எனக்கு இது போதும், இதைப் பற்றி நான் சரிவர அறிந்து கொண்டபின் ஏனைய ஹதீஸ்களைக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறி, கேள்வியுற்ற அந்த ஹதீஸின் சிந்தனையில் ஆழ்ந்தவர்களாய் அன்னார் கிளம்பிவிட்டார்கள். அவர்களை போன்ற மகான்கள் ஹதீஸ் கேட்கும் இயல்பு இத்தகையதாய் இருந்தது.

ஆலிம்களில் மற்றுமொரு வகையினர் இலக்கண, இலக்கியப் (நஹ்வு, லுகாத்) பாடங்களிலும், மொழி, பாடல், கவிதை ஆராய்ச்சித் துறைகளிலும் ஆழ்ந்து ஈடுபட்டுள்ளனர். அந்த ஈடுபாட்டிலே, அவர்கள் மதி மருட்சியடைந்துள்ளனர்.

சமூகத்தின் மத்தியில் அத்தகைய துறைகளில் தாங்களே தலைசிறந்த அறிஞர்களென்றும், அதனால் தாங்களே பாவமன்னிப்பைப் பெற்ற புண்ணிய ஆத்மாக்களென்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இலக்கண, இலக்கியப் பாடங்கள், பாஷா ஞானம் இவற்றாலேயே சத்திய தீனுல் இஸ்லாம் மார்க்கத்தையும், நாயகம் (ஸல்) அவர்களின் மேலான ஸுன்னத்தையும் காப்பாற்ற முடியுமென்று எண்ணிக்கொண்டு அத்துறையில் தம் வாழ்நாள் முழுவதையுமே விரயமாக்குகின்றனர். அப்பப்ப, இது மலைபோன்ற மதிமயக்கம்!

அறிவுகொண்டு இவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நன்றாக ஆராய்ந்து நோக்குவார்களாயின் துருக்கி பாஷை போன்று அரபியும் ஒரு பாஷைதான் என்பதை உணர்வார்கள். துருக்கியப் பாஷையிலோ அல்லது இந்தியப் பாஷையிலோ அல்லது வேறெந்தப் பாஷையிலோ உள்ள இலக்கண, இலக்கியங்களை ஆராய்வதிலேயே ஒருவன் தன் வாழ்நாள் முழுவதையும் செலவிடுவது எவ்வாறு வீண் காரியமோ அவ்வாறேதான் அரபிப் பாஷையிலும் தேவைக்கு மிஞ்சி இலக்கண, இலக்கிய ஆராய்ச்சில் வாணாள் முழுவதையும் ஈடுபடுத்துவதும் வீண் காரியமாகும். ஆனால், மற்றமொழிகளைவிட அரபி மொழிக்கு உள்ள சிறப்பு சன்மார்க்க ஷரீஅத் அரபிமொழியில் அருளப்பட்டுள்ள ஒரேயொரு விஷயந்தான்.

திரு குர்ஆனையும், ஹதீஸ் ஷரீபையும் சரிவரப் படித்துத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு அரபிப் பாஷையின் இலக்கண,



இலக்கியங்களைக் கற்றால் போதும். அதன் மூலமே தேவையான அளவு இலக்கண, இலக்கிய அனுபவம் பெற்று விடலாமே! தேவைக்கு மிஞ்சி அத்துறையில் மூழ்கிக் காலத்தை வீணாக்கல் அவசியமன்று. அவ்வண்ணம் நடப்பவன் மதிமயங்கிய பேதையேயாவான்.

## ஆபிதுகளின் மதிமயக்கம்

தொழுகையாளர்கள் பல வகையான இபாதத்துக்களிலும், புண்ணிய வணக்கங்களிலும், நல்லமல்களிலும் ஈடுபட்டுள்ளனர். எனினும், அவற்றிடையிலும் மருட்சியடைந்த வகையினர் பலர் இவர்களிலுண்டு. தொழுகையில் மருட்சியடைந்தோர் சிலர்; திரு குர் ஆனை ஓதுவதில் மதிமயங்கினோர் சிலர்; ஹஜ்ஜு கருமத்தில் மதிமயங்கினோர் சிலர்; ஜிஹாதில் (சன்மார்க்கச் சமரில்) மதி மருட்சியடைந்தோர் சிலர்; பற்றற்றிருத்தலில் (ஸுஹ்தில்) மதிமயங்கினோர் சிலர்.

தொழுகையில் மருட்சியடைந்தோர்: இவர்களில் சிலர் பறுலுகளைத் தவறவிட்டுவிட்டு, மேல் மிச்சமான நபில்களில் பராக்காய் இருக்கிறார்கள். சில சமயம் அத்து மீறி வரம்பு கடந்துங்கூட இவர்கள் மேல் மிச்சமான காரியங்களில் ஈடுபட்டு விடுகிறார்கள். இதனால் அளவு கடந்த ஊசாட்டத்துக்கு இலக்காகிவிடுகிறார்கள். ஒலுச் செய்யும்போது தண்ணீரைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஒலுச் செய்வதற்கு ஆகும் என்று ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்ட தண்ணீரில் கூட இவர்கள் மிகவும் அதிகமான சுத்தத்தை எதிர் பார்க்கிறார்கள். இதனால் தொழுகையின் வேளைகள் கூடப் பிற்பட்டுத் தப்பிப் போய்விடுகின்றன.

ஒலுச் செய்யும் தண்ணீரில் அசுத்தம் ஏதும் விழுந்திருக்கலாமோ என்று கவனித்து அற்பசொற்பத்தையும், இல்லாதவற்றையும் மலைபோல பிரமாதப்படுத்தும் இவர்கள், தங்களுடைய வயிற்றுக்கு அளிக்கும் உணவின் விஷயத்தில் அது ஹலாலா, ஹராமா என்ற பிரதான கவனிப்பில் அந்த அளவோ அல்லது அற்பமாகவோ கூடக் கவனஞ் செலுத்துவதில்லை. மேலும் சில சந்தர்ப்பங்களில் நூற்றுக்கு நூறு ஹராமானவைகளையும் நன்றாக தின்றுவிடுகிறார்கள். ஒலுவின் தண்ணீரில் செலுத்தும் ஜாக்கிரதையையும் கவனத்தையும் ஹலால்,

ஹராமைப் பேணும் விஷயத்தில் இவர்கள் கைக்கொள்வார் களாயின் மிகவும் சிரேஷ்டமாகும்; ஸஹாபாக்களின் பொன்னான குணத்தையும் பின்பற்றியவர்களாவார்கள்.

ஏனெனில், ஒரு முறை ஹஜ்ரத் உமர் (ரலி) ஒரு கிறிஸ் தவப் பெண்ணின் பாத்திரத்தில், (அப்பாத்திரம் அப்பெண்மணி யால் நஜீஸில் புழங்கப்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகம் கொள்ள இடமிருந்துங்கூட அதில்) ஒலுச் செய்தார்கள். ஆனால், அவர்கள், ஹராமில் சிக்கிவிட நேரலாம் என்ற அச்சத்தால் எத்தனையோ ஹலால்களையும் ஒதுக்கிவந்தள்ளார் கள். ''ஹராமில் விழுவேன் என்ற பயத்தால் எழுபது ஹலாலா னவைகளையுங்கூட நான் விட்டுவிடுகிறேன்'' என்று அவர்கள் சொல்லியுள்ளார்கள்.

தொழுகையாளர்களில் வேறொரு பிரிவினர்: தொழுகை யுடைய நிய்யத்து விஷயத்தில் மட்டிடமுடியாத ஊசாட்டம் இவர்களை ஆட்கொண்டுள்ளது. நிய்யத்துச் சரியாகவில்லை என்ற காரணத்தை முன்னிறுத்தி ஷைத்தான் இவர்களை ஊசாட்டங் கொண்டுக் கலைக்கிறான். நமது நிய்யத்துச் சரியாகவில்லையே, சரியாகவில்லையே என்று இவர்கள் குழம்பிக்கொண்டே உரத்த சப்தத்துடன் நிய்யத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். பின்பு தக்பீரை விட்டுக் கையை உதறுகிறார்கள். இப்படியே மாறிமாறிச் செய்து ஜமா அத்தையும் தவறவிட்டுவிடுகிறார்கள். அத்துடனா? சில சந்தர்ப் பங்களில் இவர்களுக்குத் தொழுகையின் வேளை கூடத் தப்பிப் போகிறது. எப்படியோ, ஒரு வகையாகத் தொழுகைக்குத் தக்பீர் கட்டிவிடுகிறார்கள். ஆனால், நிய்யத்துச் சரிதானா என்ற சந்தேகம் உள்ளத்தைக் குழப்பிக் கொண்டேயிருக்கிறது. அப்படியே ஒருவகையாக நிய்யத்துப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாலும், தக்பீரைச் செவ்வையாக மொழிந்தோமோ இல்லையோ என்ற ஐயமுண்டாகிவிடுகிறது. உடனே அதில் குழப்பமுற்று பல தடவை திருப்பித் திருப்பி தக்பீரை உரத்துக் கூறி தக்பீருடைய வகையை (வஸிபத்தை)யே பேதகப்படுத்தி விடுகிறார்கள். காது தாழ்த்திக் கேட்பதன் வரிசையையும் இழந்து விடுகிறார்கள்.

ஊசாட்டத்துடன் கூடிய இவர்களின் இத்தகைய நுணுக்கமான பேணுதலெல்லாம், கவனமெல்லாம் முதலாவது



ரக்அத்தில் மட்டுமேதான். மற்ற ரக்அத்துகளிலோ அவற்றி லேதும் இராது. இவர்கள் தொழுகையில் மனத்தைச் செலுத்தி பயபக்தியுடன் தொழமாட்டார்கள். இதுவே இவர்களுடைய மதிமயக்கமாகும். தொழுகையில் மனத்தைச் செலுத்தி பயபக்தி யுடன் தொழுவது மிகப் பிரதான கடமை என்பதை இவர்கள் உணர்வதே இல்லை.

''இவ்வண்ணம் நீங்கள் மிக நுணுக்கமாகக் கவனித்து ஊசாட்டமடைவது மிகவும் நல்ல காரியம். சாதாரண (அவாம்) ஜனங்களைவிட நீங்கள் சிறந்தவர்கள் என்பதை இதுவே பிரித்தறிவிக்கிறது. ஆகவே, உங்கள் நாயனிடத்திலே நீங்கள் தான் நல்லவர்கள்'' என்று ஷைத்தான் இவர்களிடம் உரைத்து, இவர்களின் மோசமான ஊசாட்டங்களை அலங்காரமாகக் காட்டி இவர்களை மதிமயங்கச் செய்துவிடுகிறான்.

தொழுகையாளர்களில் மற்றொரு கூட்டத்தினர்: இவர்கள் தொழுகையில் ஸூரத்து பாத்திஹாவின் ஒவ்வொரு அட்சரத் தையும் உச்சரிக்கும் விஷயத்தில் அளவில்லாத ஊசாட்டத்துக்கு ஆளாகியுள்ளார்கள். ஓதக்கூடிய மற்ற விஷயங்களிலும் அவ்வாறே செய்கிறார்கள். ஷத்து, மத்துகளைச் சரியாக உச்சரிக்கவேண்டுமென்பதிலும், ழாதுக்கும், ழேக்கும் வித்தி யாசப்படத்தி தெள்ளத் தெளிய ஓதவேண்டுமென்பதிலும்தான் இவர்கள் முழுச் சிந்தையையும் செலுத்திக் கொண்டிருக்கி றார்களே தவிர வேறு எதிலும் கவனஞ் செலுத்துவதில்லை. இத்தனை சிரமத்துடன் இவ்வாறு ஓதும் இவர்கள் பாத்திஹா வின் அகமியம் யாது, அதன் தாத்பரியம் என்ன என்பதை யெல்லாம் சிந்திப்பதேயில்லை. பாத்திஹாவின் கருத்தை உணர்ந்தோதுவதிலல்லவா கவனஞ் செலுத்தவேண்டும்! தொழு கையல்லாத நேரத்தில் எவ்வளவு ஓதுகிறார்களோ அவ்வளவே தொழுகையில் ஓதினாலும் போதுமானது. அதற்காக அடியார் கள் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை. கருத்தைச் சற்றுங் கவனியாது எழுத்தை மட்டும் பெரிதாக நோட்டமிடும் இவர்களின் மதிமயக்கம் கடுமையானது.

ஒரு கோரிக்கையுடன் அரச சபைக்குச் செல்லும் ஒருமனிதன், தன் கோரிக்கையை அரசன் முன் நேரடியாகச் சொல்லும்படி உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், தன் கோரிக் கையை முறையே எடுத்துக் கூற முற்படாமல், ஒவ்வொரு

அட்சரத்தையும் அழுத்தத்துடன் நிறுத்தி, நிறுத்தி, மீட்டி, மீட்டி, அ...ர...சே...ஆ...ரா...சே...அ...ர..சே என்ற இப்படியே பல தடவைகள் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டும், தான் நாடி வந்ததையெடுத்துரைக்க முடியாமல் அரச அவையை அவமதித்துக்கொண்டுமிருந்தால், அதற்காக அவனுக்குச் சட்டப் படி தண்டனையளிக்கப்பட்டு, அரச சபையில் உளறின புத்தி சுவாதீனமற்றவன் என்று பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் அனுப்பப்படுவானல்லவா! இவர்களின் போக்கும் இம்மனிதனுடைய நிலையாகவே உள்ளது.

திரு குர்ஆன் ஓதுவதால் மதிமயங்கினோர்: இவர்கள் திரு குருஆனை மளமளவென்று ஓதி முடிக்கிறார்கள். ''இரவும், பகலும் தொடர்ச்சியாக நாங்கள் இத்தனை ஜுஸ்வு ஓதிவிட் டோம், முப்பது ஜுஸ்வுகளையும் பூர்த்திசெய்து கத்முச் செய்து விட்டோம்'' என்று பெருமையுடன் மற்றவர்களைவிட அதிகமாக ஓதியிருப்பதாகக் கூறவேண்டும் என்ற நோக்கத் தோடு மழமழவென்று ஓதுகிறார்கள். இவர்கள் வாய் திரு குர்ஆனைக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டிருந்தாலும், இவர்கள் இதயம் பலவகைகளான மேலெண்ணங்களிலும், வேறு சிந்தனைகளிலும், உலக ஆசாபாசங்களிலும் வட்ட மிட்டுத் திரிந்துகொண்டிருக்கும். திரு குர்ஆன் அல்லா(ஹ்) வுடைய திரு வசனம், அதன் ஒவ்வொரு ஆயத்தும் அடியார் களுக்கு உணர்ச்சியூட்டக்கூடியது என்பதை இவர்கள் அடியுடன் மறந்து திரு குர்ஆனை ஓதும் போது அதன் ஆயத்துக்களின் கருத்துக்களை சற்றும் கிரகிப்பதேயில்லை. மறுமையின் தண்டனை, நரக வேதனை பற்றி ஆயத்துக்கள் வரும்போது இவர்களின் உள்ளம் அச்சமுறுவதில்லை; உணரச்சிவசமாக்கும் உபதேச உரைகள் வரும்போது இவர்கள் உணர்ச்சி வசமாவது மில்லை; ஏவல், விலக்கல் பற்றிய கட்டளைகளைக் கொண்ட வசனங்கள் வரும்போது இவர்கள் கவனம் அதில் செல்வ தில்லை; அற்புதத் திருமறையின் அருமை இன்ப நயத்தை பருகி ரசிப்பதில்லை. இவ்வாறான நிலைமைகளெல்லாம் அர்த்தத்தை யுணர்ந்து ஓதினாலன்றோ உண்டாகும்! இவர்களின் குறிக்கோள் ஓதி முடிப்பதன் எண்ணிகையை அதிகப் படுத்தவேண்டு மென்பதாகவல்லவா உள்ளது!

அல்லாஹ்வின் திருமறையை இரவும், பகலுமாய் நூறு விடுத்தமாக ஓதி வந்தாலும் அதிலுள்ள அம்ரு, நஹ்யு (ஏவல், விலக்கல்)களைப் பேணி ஒழுகி நடவாமலிருந்தால் அவ்வாறு ஓதும் அடியான் தண்டனைக்கும், வேதனைக்குமே ஆளாகி றான்.



இவர்களில் சிலருக்கு இனிமையான குரல் வாய்த்திருக் கும். அதனால் தனது இனிய தொனியால் இவர்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். ஆனால், தமது தொனிமீது பரவசமடைந்து மயங்கவில்லை என்றும், அல்லாஹ்வுடன் (முனாஜாத்) வசனம் புரிய ஏற்படும் வாய்ப்பின் பொருட்டாலும், அவன் வசனங்களைக் கேட்கும் இன்பத்தாலும்தான் பரவசமடைவதாக வும் இவர்கள் கூறிக் கொள்கிறார்கள். இவர்களின் வாய் மொழிக்கும், வாய்மைக்கும் வெகுதொலைவு! உண்மையில், இவர்கள் பரவசமுற்றது தங்கள் இனிமையான குரலில் மயங்கித்தான். யதார்த்தத்தில் அல்லாஹ்வின் வசன இன்பத்தில் திளைத்து லயித்திருப்பின் தொனியின் தன்மை பற்றி நோட்டமிடமாட்டார்கள். அதுபற்றிய ஊசாட்டங்கூட இவர் களுக்கு ஏற்பட்டிராது. இறைவசன இன்ப ரசம் பொங்குவ தென்றால் அது தொனியின் இனிமை கொண்டல்ல, திரு குர்ஆனின் கருத்து விளக்கத் தன்மையாலேயேதான். இத்தகை யோரும் மிகப் பெரிய மதிமயக்கத்திலாழ்ந்துள்ளனர்.

ஆபிதுகளின் வேறொரு வகையினர்: இவர்கள் நோன்பு விஷயத்தில் மதிமயக்கமடைந்துள்ளார்கள். இவர்களில் சிலர் வருடம் முழுவதும நோன்பு நோற்கிறார்கள். சிலர் சங்கையான நாட்களில் நோன்பு வைக்கிறார்கள். இவ்வாறாக நோன்பை யனுஷ்டித்து வாயையும், வயிற்றையும் ஆகாரம், பானங்களி லிருந்து தடுத்துக் கொள்ளும் இவர்கள் தங்கள் நாவைப் புறம்பேசுதல் முதலிய பொல்லாங்குகளிலிருந்து தடுத்துக் கொள்வதில்லை; தங்கள் உள்ளங்களை முகஸ்துதியை விட்டும் பாதுகாப்பதில்லை; நோன்பைத் திறந்து ஆகாரமருந்தும் வேளையில் ஹராமானவைகளை விட்டும் தங்கள் வாயையும், வயிற்றையும் பேணுவதில்லை; அனாவசியப் பேச்சுக்களை விட்டுத் தங்கள் நாவைப் பேணுவதில்லை.

நபிலான நோன்புகளை யனுஷ்டிக்கும் இவர்கள் பிரதான அத்தியாவசிய வாஜிபான கடமைகளை மறந்து விடுகிறார்கள். எனினும் தாங்கள் ஈடேற்றம் பெற்றவர்கள் என்று நினைத்துக் கொள்கிறார்கள். அந்நினைப்பு உண்மைக்கு மாற்றமானது.

கோள், புறம், ஹராமான புசிப்பு முதலியவைகளை விட்டும் ஈடேற்றம் பெற்ற பரிசுத்த இதயமுடைவர்தான் அல்லாஹ்வின் சமூகத்தில் ஈடேற்றம் பெற்றவராவர். இதையுணராது இவர்கள் மதிமயங்கியுள்ளனர்.

ஆபிதுகளில் வேறொரு கூட்டத்தினர்: இவர்கள் ஹஜ்ஜு டைய காரியத்தில் மருண்டு கிடக்கின்றனர். இவர்கள் எல்லோ ருமறிய ஹஜ்ஜு செய்கிறார்கள். ஆனால், தாங்கள் அநீதமாகத் தேடிய பொருள்களை உடைமைக்காரர்களிடம் சேர்ப்பிப் பதில்லை; அவர்களின் மன்னிப்பைத் தேடுவதுமில்லை. தம் மீதிருக்கும் கடன்களை அடைப்பதுமில்லை; தாய், தந்தையரின் மனங்குளிரச் செய்வதுமில்லை; ஹலாலான வழியில் திரவியந்தேடி ஹலாலான கட்டுச்சாதம் கட்டுவதுமில்லை. ஹஜ்ஜுக்குச் செல்லும் பாதையிலே பர்லான தொழுகைகளைப் பேணித் தொழுதுவராமல் பாழ்படுத்திக்கொள்கிறார்கள். உடல், உடுப்பு இவற்றைச் சுத்தமாக வைக்கும் வெளிரங்கப் பேணுதல்களிலும் இவர்கள் சரியாக நடப்பதில்லை. ஹஜ்ஜுக்குப் போகும் வழியிலே புணர்ச்சி, வம்பு, வழக்கு இவற்றிலிருந்து விலகாது மோசம்போய் விடுகிறார்கள்.

ஹஜ்ஜுக்குச் செல்லும் இவர்கள் (காபிலாவோடு) பிரயாணக் கூட்டத்தோடு சேர்ந்து செல்கிறார்கள். தாங்கள் சேகரித்துள்ள ஹராமான பொருளை ஒன்று திரட்டி வைத்துக் கொண்டு அதிலிருந்து வழியில் தங்கள் காபிலாவிலுள்ள சகாக் களுக்குச் செலவு செய்கிறார்கள். இவ்வாறு செலவுசெய்வதன் மூலம் பிரக்யாதியையும், முகஸ்துதியையு் எதிர்ப்பார்க்கி றார்கள். முதலாவதாக ஹராமான பொருளைக் கையாண்ட குற்றத்துக்கும், இரண்டாவதாக முகஸ்துதியை நாடிய குற்றத்துக் கும் இவர்கள் ஆளாகிறார்கள். இவ்வாறெல்லாம் செய்து மக்கமா நகர்போய்ச் சேர்ந்து புனித கஃபதுல்லாஹ்வை அடுக்கி றார்கள். அற்ப குணங்களாலும், கெட்ட சுபாவத்தாலும் அசுத்த மாக்கப்பட்டுள்ள இதயத்துடன் இவர்கள் அல்லாஹ்வின் இல்லத்தை முன்னோக்குகிறார்கள். இத்தன்மையிலுள்ள இவர்கள் அல்லாஹ்வின் சமூகத்தில் தங்களுக்கு மிகச் சிறந்த பதவி யுண்டென்றும் கருதிக்கொள்கிறார்கள். அந்தோ, என்னே இவர்கள் மதிமயக்கம்!



ஆபிதுகளின் இன்னொரு வகையினர்: அம்ரு, நஹ்யு (ஏவல், விலக்கல்) விஷயத்தில் இவர்கள் மதிமயங்கியுள்ளனர். நன்மைகளைக் கொண்டு ஏவி, தீயவைகளை விலக்கி மற்றவர் களுக்குப் போதனை செய்கிறார்கள். ஆனால், தங்கள் ஆத்மா பற்றிக் கவலை கொள்ளமலிருக்கிறார்கள்; மற்றவர்களிடமிருந்து அம்ரு, நஹ்யு செய்யும் விஷயத்தில் சில சமயம் மிகக் கண்டிப் பாகவும் நடந்து கொள்கிறார்கள். ஆனால் அதன் மூலம் தமக்குத் தனிக் கியாதியையும், மகத்துவத்தையும் எதிர்பார்க்கி றார்கள். மேலும், அன்னியர் யாராவது இவர்களிடம் குற்றங் குறை, பிசகுகளைக் கண்ணுற்று இவர்களும் அம்ரு, நஹ்யு செய்ய நேர்ந்தால், ''நீயா எங்களுக்குச் சொல்லவேண்டும்! உண் மையை நாடி நன்மையின்பால் அழைப்பவர்கள் நாங்களல் லவா! எங்கள் விஷயத்தில் நீ தலையிடவேண்டாம்!'' என்று சீற்றத்துடன் பிதற்றுகிறார்கள்.

இன்னவர்கள்,சில சந்தர்ப்பங்களில் பள்ளிவாசல் போன்ற ஸ்தலங்களில் ஜனங்களைக் கூட்டி ஏவல், விலக்கல், உபதேசம் செய்கிறார்கள். அக்கூட்டத்துக்கு யாராவது வரத் தவறிவிட்டால் அல்லது பிந்திவிட்டால் அவர்கள்மீது கடுமையான வார்த்தை களைப் பிரயோகிக்கிறார்கள். மேலும்,இவர்களுக்கு முகஸ் துதிப் பிரீதியும், தலைமைத்தன ஆசையும் மிகவும் அதிகம். அதனால் பள்ளிவாசல் நிர்வாக காரியாதிகளில் தாங்களே தலைமை தாங்கவேண்டும், தங்களுக்கே கியாதியும், அதிகார மும் கிட்ட வேண்டும் என்று பேராவல் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குப் போட்டியாக வேறு யாராவது தலையெடுத்தால் அவர்கள்மீது கடுமையான பொறாமை கொண்டு பாய்ந்து விழுகிறார்கள்.

ஆபிதுகளில் வேறு சிலர் பள்ளிவாசல்களில் பாங்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு தாங்கள் பாங்கு சொல்வது அல்லா(ஹ்)வுடைய முகத்தை நாடியேதான் என்று கூறிக்கொள்கிறார்கள். அவர்கள் இல்லாத சமயத்தில் வேறு யாராவது அவர்களுக்குப் பதிலாகப் பாங்கு சொல்லிவிட்டால் கியாம நாள் ஏற்பட்டுவிட்டதோ என்று கருதும் படியாகக் கூச்சலிடுகிறார்கள். ''எமக்கு ஏகபோகமாய் இருந்துவரும் தனி உரிமையைப் பறித்து விட்டாரே'' என்று சத்தமிடுகிறார்கள். உண்மையில் அல்லா(ஹ்)வின் முகத்தை நாடி நடப்பதாய்

யிருந்தால் இவர்கள் இவ்வாறு கூச்சலிடத்தேவையில்லை. இவர்களின் மதிமயக்கம் இத்தகையதாய் இருக்கிறது.

ஆபிதுகளில் வேறு சிலர் பள்ளிவாசல்களில் இமாம்களாய் இருக்கிறார்கள். தாங்கள் தனிப்பெரும் செல்வாக்குடன் திகழவேண்டும் என்ற எண்ணம் இவர்களை மிகைத்துள்ளது. தாங்களே மற்றெல்லோரையும் விட மேம்பட்டோர் என்று கருதிக்கொண்டிருக்கும் இவர்களின் குறிக்கோள், இன்னார் இன்ன பள்ளியின் பேஷ் இமாம், அவரது பள்ளியில் அவரைத் தவிர வேறுயாரும் இமாமத் செய்வதில்லை என்று தங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசப்பட வேண்டுமென்பதே. இவர்களை விடத் தக்வாவும், பேணுதலும் மிக்க வேறு யாராவது அந்த இமாமத் பொறுப்பை ஏற்க நேர்ந்தால் இவ்களுக்கு உண்டாகும் மனப்புழுக்கத்துக்கும், சங்கடத்துக்கும் எல்லையிருக்காது.

ஆபிதுகளில் மற்றொரு கூட்டத்தினர் புனித மக்கமா நகரையும், திரு மதீனமா நகரையும் அண்டி யடுத்துப் பல காலம் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அது கொண்டு இவர்கள் மதிமயங்கிப்போகிறார்கள். இவர்கள் தங்கள் ஆத்மாவைப்பற்றிச் சிந்திப்பதில்லை. தங்கள் அந்தரங்க சுத்தி பற்றியோ, வெளிரங்க சுத்தி பற்றியோ அக்கரை கொள்வதில்லை. ஏனெனில், இவர்களின் சடலந்தான் மக்கா, மதீனாவை யடுத்திருக்குமேயன்றி, இவர்களின் உள்ளமோ சொந்த ஊரையும், வீட்டையும் பற்றித்தான் சிந்தனை செய்து கொண்டிருக்கும். மேலும், இவர்கள் மற்ற ஜனங்களிடம், ''நாம் இத்தனை யித்தனை ஆண்டு காலமாக நமது சுயதேசமெல்லாம் விட்டு மக்கா, மதீனாவிலேயே காலங் கழித்தோம்'' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வார்கள். இவர்களில் இப்போக்கு மதிமயக்கமுடையதாகும்.

மக்கமா நகரை அண்டிச் சுயபதியின் தியானத்திலே இதயத்தைச் செலுத்தி ஆழ்ந்திருப்பதைவிட, சுயபதியிலேயே அமர்ந்து திரு மக்கமா நகரின் தியானத்திலே இதயத்தைச் செலுத்தி லயித்திருப்பது எவ்வளவோ விசேஷமானதாகுமே!

மக்கமா பதியையே அண்டி வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் எப்போது கிளம்பியாயிற்றோ அப்போது முதல் அதன் பாத்தியதைப் பொறுப்பு (ஹக்கு)களைச் சரிவரப் பேண



வேண்டும். மக்கமா நகரையடுத்திருக்கும்போது அல்லா(ஹ்)வுக்குரிய ஹக்குகளையும், சங்கைகளையும், மதீனமா நகரையடுத்திருக்கும்போது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குரிய ஹக்குகளையும், அதபு ஒழுக்கங்களையும் முறைபோலப் பேணி அனுஷ்டிக்க வேண்டும். இத்துறையில் அல்லாஹ் நல்லுதவி புரிந்த ஒரு சிலரைத் தவிர வேறு யாரே அக்கடமைகளையும், ஹக்குகளையும், அதபுகளையும் சரிவர நிறைவேற்றச் சக்தி பெறுவர்!

இவர்கள் வெளிரங்க (ளாஹிரியத்து)க் காரியங்களிலேயே கவனஞ் செலுத்துகின்றனர். புண்ணிய ஸ்தலங்களின் கட்டிடச் சுவர்களைக் கண்ணால் கண்டால் மட்டும் போதும், அதன் மூலமே ஈடேற்ற மடைந்து விடலாம் எனக் கருதிக் கொண்டிருக்கும் இவர்களுடைய மதிமயக்கந்தானென்னே! இவர்களின் எண்ணத்துக்கும், வெற்றிக்கும் வெகு தூரம்.

படைத்து ஆண்டவனைப் பரம பக்தியுடன் வழிபட்டுப் புண்ணியந்தேடியதாகக் கருதிக்கொள்ளும் இவர்கள் பசியால் வாடிப் பரிதவிக்கும் ஏழை, எளியவர்களான ஆண்டவனுடைய அடியார்களின் பசி தீர்க்க ஒரு கவளமாகிலும் ஈயவேண்டுமே என்று எண்ணுவ துண்டா? சிருஷ்டிகளுக்கு ஆற்றவேண்டிய கடமை (ஹக்கு)களைச் செவ்வனே நிறைவேற்றாதோர் சிருஷ்டி கர்த்தாவுக்குரிய ஹக்குகளை எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்கள்! தமது ஆத்மாக்களையும், உறுப்புகளையும் பேணி நன்னெறியில் பண்படுத்தி, சிருஷ்டிகளின் கடமைகளையும் நிறைவேற்றி, அப்பால் புனித ஸ்தலங்களைத் தரிசித்து அவற்றை சத்திய வாஞ்சையுடன் அண்டி வாழும் நல்லடியாருடைய வெற்றியே வெற்றி!

ஆபிதுகளில் மற்றொரு குழாத்தினர்: துறவி (ஸாஹிது)களாய் இருக்கின்றனர். இவர்கள் செல்வம், சுகங்களை வேண்டாமென வெறுத்துச் சாதாரண உணவையே, அதிலும் சொற்பத்தையே போதுமாக்கிக் கொள்கின்றனர். மலிவான ஆடைகளையணிந்து, பள்ளிவாசலையே சொந்த வீடாக ஆக்கிக் கொள்கின்றனர். தாங்கள் பற்றற்ற துறவிகளின் பதவியைச் சம்பூர்ணமாகப் பெற்றுவிட்டதாக இவர்கள் கருதிக் கொள்கின்றனர். ஆனால், 'பற்றற்ற' இவர்கள் கீர்த்தியும் தலைமைத் தனமும் அடையவேண்டும் என்று பெரும் பற்றுக் கொண்டுள்ளனர்.

த்தலைமைப் பதவி பின்வரும் மூன்றிலொன்றால் உண்டாகும்: (1) கல்வி, (2) பிரசங்கம், (3) சம்பூரணமான பற்றற்ற தன்மை. முந்திய இரு விஷயங்களிலும் இவர்கள் இடுபடவில்லை. அவ்விரண்டிலும் தலைமை தாங்குவதால் ஏற்படும் விபரீதங்களைவிட, மூன்றாவதான விஷயத்திற்குத் தலைமை தாங்குவதால்தான் அதிக விபரீதம் சம்பவிக்கும் மானிடனை நாசப்படுத்தும் கருமங்களில் மிகவும் பயங்கரமானது இம்மூன்றாவது விஷயமாகும். அதைத்தான் இவர்கள் எடுத்துக் கொண்டனர். பொருளாசையைவிடப் பொல்லாதது தலைமைத்தன ஆசையாகும். பொருள் வேண்டாம் எனவெறுத்துப் பொல்லாத தலைமைத்தன ஆசையில் சிக்கி மோசம்போவதைவிடத் தலைமைத்தனம் வேண்டாம் என விட்டொதுங்கிப் பொருளைப் பெறுவது இவர்கள் விஷயத்தில் எவ்வளவோ நல்லதாய் இருக்கும்.

மேலும், இவர்கள் ஆழ்ந்த மதிமயக்கத்தில், உழல்கின்றனர். தாங்கள் இம்மாய உலகில் மயங்காதவர்கள் என்று கருதிக்கொண்டிருக்கும் இவர்கள் உலகம் (துன்யா) என்பது யாது, அதை வெறுத்திருத்தல் எப்படி என்ற விஷயங்களையெல்லாம் யதார்த்தப்பூர்வமாக அறிந்திருக்கமாட்டார்கள். பூலோக இச்சை பொருளாசை எல்லாம் வேண்டாம் என வெறுத்திருக்கும் இவர்கள் சில சமயம் செல்வப் பிரபுக்களைத் தேடிப் போவார்கள். அதிலும், ஏழைகளைத் தள்ளி முந்தியடித்துக்கொண்டு பணக்காரர்களின் இல்லம் புகுவார்கள். இப்போக்கு பொருளாசை நாடியல்லாமல் வேறெதற்கு?

இவர்களில் இன்னும் பல தரத்தினர் இருக்கிறார்கள். அரும்பெரும் ஞானக் கல்விக் களஞ்சியங்களைத் தமது இதயத்திலே கொண்டிருப்பதாய் நினைத்துத் தாமே ஞான மேதை என்று தம்மைப் பெரிதாகக் கருதிக்கொண்டிருப்பவர் சிலர். ஜனங்களைவிட்டு நீங்கித் தனித் தொதுங்கியிருப்பவர் சிலர். ஆனால், அவ்வாறு கல்வத்தில் தனித்திருப்பதற்குரிய விதி முறை (ஷறுத்து)களை இவர்கள் அனுஷ்டிப்பதில்லை. இவர்களுக்கு யாராவது பணங்காசுகள் கொடுத்தால் வேண்டாமென்று சொல்லிக் கொள்வார்கள். அவ்வாறு வேண்டாமென்று இவர்கள் மறுப்பது, பாழும்பணத்தின்மீது ஆசையில்லை என்பதனாலன்று; மனமென்னவோ ஒப்புக்கொள்ளத்தான்



சொல்கிறது. ஆனால், அவ்வாறு பணத்தைத் தாங்கள் பெற்றுக் கொண்டால், ''இவர்களுடைய துறவு (ஸுஹ்து) லக்ஷணம் இதுதான் போலும்!'' என்று ஜனங்கள் தங்களை இழிவாக நினைப்பார்களே, தங்கள் மதிப்பு மங்கிவிடுமே என்பதற்காகத்தான் இவர்கள் வேண்டாமென்று மறுக்கிறார்கள். உண்மையில் இவர்களின் இதயம் பணத்தாசையால் நிறம்பிக் குமுறும். மனிதர்களின் தயவை இவர்கள் எதிர்பார்க்கக் காரணமே பணத்தாசைதான். மனிதர்கள் மத்தியிலே ஏற்படுகிற புகழை எதிர்நோக்கியும், அவர்கள் மத்தியிலே தமக்கு இழிவுண்டாகிவிடக்கூடாதென்பதை அஞ்சியும் நடக்கிறார்கள்.

ஆபிதுகளில் இன்னொரு வகையினர்: இவர்கள் தமது உறுப்பினங்களால் பெரும் இபாதத்துகள் செய்கிறார்கள். இரவும், பகலுமாகத் தினந்தோறும் ஆயிரம் ரக்அத்துகள்வரை தொழுது வணங்கித் திருகுர்ஆனின் முப்பது ஜுஸ்உகளையும் அவற்றில் ஓதி முடிக்கிறார்கள். ஆனால், இவ்வளவு இபாதத்துச் செய்யும் இவர்கள் தங்கள் அகத் தூய்மைப்பற்றியோ கல்பின் களைப் போக்குவது பற்றியோ, முகஸ்துதிப் பிரியம்,தான் என்ற மமதை, கர்வம் முதலிய நாசகர சுபாவங்களிலிருந்து மீள வேண்டும் என்பது பற்றியோ சிறிதும் சிந்தனை செய்வதில்லை. அதிகமான வெளிரங்க வணக்கம் புரியும் இவர்கள் அந்தரங்க சுத்தியை அலட்சியமாய் விட்டுவிட்டு, அவ்வெளிரங்கக் கிரியைகளே தங்கள் மீஸானிலுள்ள நன்மைத் தட்டைக் கனமுடையதாக்கிவிடும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த எண்ணம் வெறும் கானல்நீர்தான்! வெளிரங்க உறுப்புக்களால் செய்யப்படும் மலை போன்ற கிரியைகளைவிட, அந்தரங்க சுத்தியுடைய பக்திமானின் தக்வாவிலுள்ள ஓர் அணுவும், சற்குண விவேகியின் நற்குணங்களிலுள்ள ஒரு குணமும் பன்மடங்கு மேலானவையாகும்.

''பாரதூரமான இபாதத்துகள் புரியும் நீர் இவ்வுலகம் நிலைத்திருக்கக் காரணமாயுள்ள அக்தாபுகள், அவ்தாதுகளில் ஒருவராய்த் திகழ்கிறீர்; அல்லா(ஹ்)வின் அவ்லியாக்களிலும் ஒருவராயிருக்கிறீர்; அவ்லியாக்களின் அன்பரான நல்லடியாராயிருக்கிறீர்'' என்பன போன்ற புகழ்மாலைகொண்டு ஜனங்கள் இவர்களை விளிக்கும்போது இவர்களின் மதிமயக்கம் மேலும் பெருகுகிறது. இப்புகழுரைகளால் பெரிதும் பூரிப்படைந்து,

தங்களிடம் விசேஷமான மகத்துவம் இருக்கப் போய்த்தான் - தங்கள் இதயம் பக்குவமடைந்திருக்கப் போய்த்தான், தங்களை நோக்கி ஜனங்கள் இவ்வாறாகக் கூறுகிறார்கள் என்று கருதி, தாங்கள் ஏதோ தனியம்சம் பெற்ற மகான்கள் என்று வெளிக்குக் காட்டிக்கொள்கிறார்கள். எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டொருமுறை யாராயினும் இவர்களை நோக்கிப் புகழுக்கு மாற்றமாக உதாசீனமாகப் பேசிவிட்டால் இவர்கள் நிலைமையே மாறிவிடுகிறது. அவ்வாறு பேசியவர்களுக்கு உடனே 'காபிர்' என்று பட்டங்கொடுத்து அவரோடு யுத்தஞ் செய்ய முனைந்துவிடுவர். ''என்னை ஏசிய உன்னை அல்லாஹ் ஒருபோதும் பிழை பொறுக்கமாட்டான்'' என்றும் அவரை நோக்கிச் சாபமிடுவர்.

ஆபிதுகளில் இன்னொரு வகையினர்: இவர்கள் மேல் மிச்சமான நபில் வணக்கங்களில் முழுக் கவனமும், விசேஷ அக்கறையும் காட்டுகிறார்கள். ஆனால், பறுலான வணக்கங் களில் அதே கவனமும், அக்கறையும் காட்டுவதில்லை. இவர் கள் லுஹாத் தொழுகை, இரவிலுள்ள நபிலான தொழுகை முதலியவற்றையெல்லாம் பெரு மகிழ்வுடன் தொழுவர்கள்; ஆனால், அவற்றில் காட்டும் ஆர்வத்தைக் கடமையான பறுலுத் தொழுகைகளில் காட்டமாட்டார்கள்.

அல்லா(ஹ்)வின் அருளன்பும் அவனது நன்மைக் கொடைகளும் பறுலுத் தொழுகைகளில் அமோகமாயுள்ளன என்பதை இவர்கள் உணர்வதில்லை. எனவே, பறுலுத் தொழுகைகளை அவற்றின் குறிப்பிட்ட ஆரம்பவேளை (அவ்வல் வக்து)களிலேயே செவ்வனே நிறைவேற்றவேண்டு மென்ற வேட்கை இவர்களுக்கு உண்டாவதில்லை.

அல்லா(ஹ்)வின் சமூகம் அதிசமீபமாய் நெருங்கியுள்ள முடுகுதலுடையோர் (முதகர்ரிபூன்கள்) புரிந்த புண்ணிய அமல் களில், பறுலான அமல்களைப் போல் வேறு எதுவும் விசேஷ மானவையாய் இருக்கவில்லை.'

நன்மையான கிரியைகளில் முன்னால் செய்யவேண்டி யதை முன்னால் செய்தும், அடுத்துச் செய்யவேண்டியதை அடுத்துச் செய்தும் கிரமப்படி (தர்த்தீபு) நடப்பதே முறை யாகும். அவ்விதமின்றி மன இச்சைப் படி நடக்க முற்படுவது சிலாக்கியமானதன்று; தீய செயலாகும். சில சந்தர்ப்பங்களில்,



தவறிப்போகக் கூடிய பறுலு, தவறிப்போகாத பறுலு என வெவ்வேறான இரு பறுலுகள் குறுக்கிடக்கூடும் இச்சந்தர்ப்பத் தில் இரண்டாவதைவிட முந்தியதையே முற்கூட்டிக் கவனிக்க வேண்டும். இதுபோன்றே கபுறுகளிலும் குறுகிய சந்தர்ப்ப முள்ளவை, விசாலமான சந்தர்ப்பமுள்ளவை என்று இருவிதங் களுண்டு. இவற்றிலும் முற்கூட்டிச் செய்யவேண்டியதை முற்கூட்டியும், மற்றதை அப்பாலும் கிரமமாகச் செய்ய வேண்டும். அவ்வாறின்றி ஒழுங்கு முறைக்கு மாற்றமாக நடப்பவர் மதிமயக்கமுடையவரே.

இன்னும் இவைபோன்ற விஷயங்கள் எத்தனையோ உள்ளன. நன்மையும் நன்றாகத் தெரிகிறது; தீமையும் தெளி வாகத் தெரிகிறது. ஆனால், ஒரு சில நன்மைகளை விட வேறு சில நன்மைகளை முற்படுத்த வேண்டும் என்ற விஷயந்தான் மறைந்து கிடக்கிறது. அதன் விவரமாவது:

மேலதிகமான நபில்களைக் காட்டிலும் பறுலுகளை முற்படுத்தல்.

சிலரை மட்டும் பற்றிப்பிடிக்கும் பறுலு கிபாயாக்களை விட ஒவ்வொருவரையும் பற்றிப்பிடிக்கும் பறுலு ஐன்களை முற்படுத்தல்.

சிலரை மட்டும் பற்றிப்பிடிக்கும் பறுலு கிபாயாக்களை விட ஒவ்வொருவரையும் பற்றிப்பிடிக்கும் பறுலுஐன்களை முற்படுத்தல்.

தவறிப்போகாத பறுலுகளைக் காட்டிலும் தவறிப் போகக்கூடிய பறுலுகளை முற்படுத்தல்.

தந்தைக்குரிய கடமையைவிடத் தாய்க்குரிய கடமையை முற்படுத்தல்.

ஹஜ்ஜுக்குச் செல்வதற்கு முன்பாகத் தாய் தந்தையர்க் குரிய படிச் செலவை அளித்தல்.

ஜும் ஆவுடைய வக்து வந்ததற்கப்பால் பெருநாள் தொழுகையைவிட ஜும் ஆத் தொழுகையை முற்படுத்தல்.

பொருள் விஷயத்தில் கடன் அடைப்பதையே மற்றவை களுக்கு முற்படுத்தல். இவ்வாறான விஷயங்களில் ஒழுங்கு நியதியைப் பேணவேண்டும்.

மானிடன் இத்தியாதி விஷயங்களை அறிந்து உணர்ச்சி பெறவேண்டும். இக்கருமங்களிலுண்டாகும் மதிமருட்சி மிக நுணுக்கமாக மறைந்திருக்கும். அதை ஆராய்ந்து கண்டுபிடித்து அகற்றி நிவர்த்தி பெறுவது சாமானியமன்று. அறிவிற் சிறந்த மகா ஞான மேதை களான உண்மை உலமாக்களே அவற்றை நீக்கி பாதுகாப்புப் பெற்றவராவார்கள்.

## பணக்காரர்களின் மதிமயக்கம்

பணக்காரரில் ஒரு சாரார்: பணக்காரரில் பல வகையினர் உண்டு. ஒரு சாரார் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், சத்திரஞ் சாவடிகள், பாலங்கள் முதலியவற்றைக் கட்டுகிறார்கள். ஆனால், தாங்கள் புரியும் இத்தகைய தருமச் செயல்களை ஜனங் களுக்குப் பகிரங்கப்படுத்திப் புகழ் பெறவேண்டுமென்ற நோக் கமே இவர்களிடம் அதிகமாயுள்ளது. எனவே, தாங்கள் கட்டிய அத்தகைய கட்டிடங்கள் மீது தங்கள் பெயர்களைக் கருங்கற் களிலும், சங்குமறைக்கற்களிலும் செதுக்கிவிடுகிறார்கள். தம் மரணத்திற்கப்பாலும் தமது பெயர் பிரபலத்துடன் விளங்க வேண்டுமென்ற ஆசையால்தான் இவ்வாறு செய்கிறார்கள். அத்துடன், இம்மாதிரியாகத் தாங்கள் புரிந்தவற்றால் தங்களுக்கு ஆண்டவனுடைய பாவமன்னிப்புக் கிட்டிவிட்டது என்றும் கருதிக் கொள்கிறார்கள்.

இவர்கள் இரு வகைகளில் மனமருட்சியடைந்துள்ளார் கள்: முதலாவதாகப் பொதுக் காரியங்களில் இவர்கள் பயன் படுத்திய பணத்தை அநீதமாகவும், லஞ்சம், கைக்கூலி முதலிய வகைகளாலும், ஹராம் கலந்த மோசமான வழிகளாலும் இவர் கள் சம்பாதித்திருப்பார்கள். இத்தகைய பாவகரமான முறை களில் பணந் திரட்டுவோர் அல்லா(ஹ்)வின் கோபப் பார்வைக்கே ஆளாகின்றனர். எனவே, இவர்கள் மீது விதியான அவசரக் கடமை யாதெனில் அல்லா(ஹ்)வின் கோபப் பார் வைக்கே ஆளாகின்றனர். எனவே, இவர்கள்மீது விதியான அவசரக் கடமை யாதெனில் அல்லா(ஹ்)விடம் பாவமீட்சி (தௌபா) தேடுதலும், அநீதமாகவும், அக்கிரமமாகவும் தேடிய செல்வங்களை அவற்றில் உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுத்தலுமேதாம். அச்செல்வங்களுக்கு உரிய உடைமைக் காரர்கள் உயிருடனிருந்தால் அவர்களிடமும், அல்லது அவர்கள் இறந்து போயிருப்பின் அவர்களின் வாரிசுதாரர்களிடமும் ஒப் படைக்கவேண்டும். வாரிசுதாரர் யாரும் கிடையாதென்ற பட்சத் தில் அதிமுக்கியமான பொதுப் பணிகளில் அவற்றைப் பயன் படுத்தல் இவர்களின் (வாஜிபு) கடமையாகும். தங்கள் அண்டை அயலாரில் எத்தனையோ ஏழைகள், பசி பட்டினி யால் வாடி வதங்குகிறார்கள். அ ர்கள் பசியைத் தீர்க்க இவர் கள் வழி வகை செய்யலாம். ஆனால், அவ்வாறான நற்பணி புரிந்தால் இவர்கள் பெயர் பிரஸித்தமடையாதல்லவா! எனவே, அத்தியா வசியத் தேவையில்லாதிருப்பினுங்கூட மேலே குறிப் பிட்ட வகைக் கட்டிடங்களில், தமது காலத்திற்குப் பின்பும் தமது பெயரும், பிரஸ்தாபமும் ஜனங்கள் மத்தியில் புகழுடன் நிலைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் தமது பெயரைப் பதிப்பிக்கிறார்கள். இவர்களை முகஸ்துதிப் பிரியம், பெயர் துலங்கவேண்டுமென்ற ஆசை முதலியன ஆட்கொண்டு விட்டன.



இரண்டாவதாக, இக்லாஸான கலப்பற்ற எண்ணத்துடன் நன்மையை நாடியே பெரும் தொகை செலவிட்டு அத்தகைய கட்டிடங்களைக் கட்டுவதாகத் தமது மனத்தில் நினைத்துக் கொள்கிறார்கள். பொது நன்மையில் பரந்த நோக்கத்துடனிருப் பதாகக் கருதும் இவர்களிடம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஒரு பரம ஏழைக்காக ஒரு ரூபாயாவது தாருங்கள் எனக் கேட்கப் பட்டால் கூட அதற்கு இவர்கள் மனமிசைவதில்லை. ஏனெனில், அவ்வாறாகச் சகாயஞ் செய்வதன் மூலம் இவர்க ளுக்கு என்ன புகழ் கிடைத்துவிடப்போகிறது! அத்தகைய உபகாரங்கள் பற்றிக் கருங்கற்களிலும் சங்குமறைக் கற்களிலும் செதுக்கப்படவாபோகிறது! இவர்களின் இதயங்களில் புகழா சையும் கீர்த்தி இச்சையும் குடி கொண்டுள்ளன.

பணக்காரரில் மற்றொரு சாரார்: இவர்கள் ஹலாலான வழியிலேயே திரவியந் தேடி அவற்றைப் பள்ளிவாசல்கள் கட்டு வதில் செலவு செய்கிறார்கள். ஆனால், இவர்கள் செய்த காரியத் திலுள்ள கீழ்க்காணும் இரண்டு விஷயங்களால் இவர்களும் மதிமருட்சியடைந்திருக்கின்றனர்:

(1) முகஸ்துதிப் பிரீதியும், தமது பேரையும் பெருமையை யும் உலகறியச் செய்யவேண்டுமென்ற வேட்கையும் இவர்களை மயக்கியுள்ளன. இவர்களின் பக்கத்து வீட்டுக் காரர்கள் அல்லது

அவ்வூர்வாசிகள் பலர் பரம ஏழைகளாயிருக்கக்கூடும் அத்தகை யோருக்குப் பொருள் சகாயஞ் செய்து அவர்களைக் கைத்தூக்கி விடவேண்டியது இச்சீமான்கள் மீதுள்ள முக்கியக் கடமை யாகும். அத்தகைய ஏழைகளும், பக்கீர்களும் பலர் இவர்களின் உதவியை வேண்டி நிற்கும்போது அவர்களைக் கவனித்து ஆவன செய்யவேண்டியது இவர்கள்மீது பிரதான பொறுப் பல்லவா!

பள்ளிவாசல் கட்டப்படுவது கூடச்சேர்ந்து தொழுவதற் காகவேதான். போதுமான அளவு பள்ளிவாசல்களிருக்க, மேலதிகமாகத் தெருவுக்கொரு பள்ளிவாசல், வீதிக்கொர பள்ளி வாசல் என்று கட்டவேண்டியது கட்டாயமில்லை. இவர்கள் பள்ளிவாசலைக் கட்டுவதன் மூல நோக்கம் யாதெனில், அப்பள்ளியின் முகுப்பில் 'இன்னார் மகன் இன்னார் கட்டியது' என்று தமது பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை ஜனங்கள் கண்டு தம்மைப் பாராட்டிப் புகழ்வார்கள் என்பதே. அத்தகைய ஆசையே இவர்களைப் பள்ளிவாசல் கட்டத் தூண்டுகிறது. இவ் வாறாக ஜனங்களின் துதியையும், பாராட்டையும் கேட்டு உள்ளம் பூரிப்படைந்துகொண்டிருக்கும் இவர்கள் அல்லா(ஹ்) வின் திருவுளப் பொருத்தத்தை நாடியே அத்தகைய பணிபுரிந் திருப்பதாகத் தமது மனத்தில் நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால், யதார்த்தத்தில் இவர்கள் அவ்வாறு அல்லா(ஹ்)வின் திருவுளப் பொருத்தத்தை நாடியே அத்தகைய பணிபுரிந்திருப் பதாகத் தமது மனத்தில் நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால், யதார்த்தத்தில் இவர்கள் அவ்வாறு அல்லா(ஹ்)வின் திருவுளப் பொருத்தத்தை நாடிச் செய்யவில்லை. வாய் அவ்வாறு கூறினா லும் அவர்களின் அந்தரங்க ஆசை ஜனங்களின் புகழையும் பாராட்டையுமே நாடி எதிர்பார்க்கிறது. அல்லா(ஹ்)வுக்கு இது தெரியும். இவ்வாறு திருப்பணி புரிவோருக்கு அல்லா(ஹ்)வின் வெறுப்பே கிடைக்கும்.

(2)பள்ளிவாசல்களை அளவுக்கு அதிகம் அலங்கரிப்ப திலும், சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஜோடனை செய்வ திலும் பணத்தை வாரி யிறைக்கிறார்கள். இவர்கள் செய்யும் அலங்காரங்கள் சமயத்தில் தொழுபவர்களின் கவனத்தைக் கலைத்துத் தொழுகையைக் குழப்பிவிடுகின்றன. எனவே, அவை விலக்கப்பட்டவையாகிவிடுகின்றன. ஏனென்றால்,



தொழுபவர்கள் அவ்வலங்கார ஜோடனைகளைப் பார்க்க நேரிடும்போது அவர்களின் மனம் அவற்றின் கவர்ச்சியில் லயித்துப்போய்விடுகிறது. சிந்தை அவற்றில் லயிப்பதால், தொழுகையை உள்ளச் சத்தோடும், ஏகாக்ர சித்தத்தோடும் நிறைவேற்ற வேண்டுமென்பதைக் கவனிப்பதில்லை. தொழு கையைக் கொண்டு நாடப்படுவதே உள்ளச்சமும், மன மொருமித்த பக்தி லயிப்பும் தாமே!

இவர்கள் கட்டிய பள்ளிவாசல்களில் தொழுகையுள்ள சந்தர்ப்பங்களிலும், தொழுகையில்லாத சந்தர்ப்பங்களிலும் சம்பவிக்கும் நிகழ்ச்சிகளுக்குரிய பலாபலன்கள் அவற்றைக் கட்டிய இவர்களுடைய மீஸான் தராசில் வந்து சேரவே செய் யும். பள்ளிவாசலைப் பகட்டான அலங்காரம் புரிந்தமையால் அங்குத் தொழுதோரின் தொழுகைக்குப் பங்கம் விளைந்த தெனில் அது சாமான்யமான அபச்சாரமா? அதற்குரிய பலா பலன் இவர்களின் மீஸான் தராசில் வந்தடையாதிருக்குமா?

''நபி நாயகம் (ஸல்) தங்களின் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளி வாசலை மதீனமா நகரில் கட்ட விரும்பிய சமயம் வானவர் ஜிபுரீல் (அலை) வந்து, ''பள்ளியை ஏழு முழம் உயரமுடைய தாகக் கட்டுங்கள், நகாசு வேலைகளோ, கண்கவரும் அலங் காரங்களோ செய்யவேண்டாம்'' எனக் கூறினார்'' என்று ஹுஸைன் (ரலி) இயம்பியுள்ளார்கள்.

அனாவசியமான அலங்காரம், தேவையற்ற நகாசு, சித்திர வர்ண வேலைப்பாடுகள் முதலியவற்றை நாயகம் (ஸல்) அவர் களும், மற்றும் அவர்களைத் தொடர்ந்த நாதாக்களும் வெறுத்து நிறுத்தியுள்ளார்கள். ஆனால், மதிமயக்கங்கொண்ட இப்பணக் காரர்களோ அவர்கள் வெறுத்தவற்றை உவந்து கைக்கொண்டுள் ளார்கள். இதனால் இவர்கள் மதிமயங்கியவர்களாகிறார்கள்.

பணக்காரரில் இன்னொரு சாரார்: இவர்கள் ஏழை எளியோருக்கு ஸதகா, தருமங்கள் கொடுக்கிறார்கள்;ஆனால், பெருங் கூட்டங் கூட்டி எல்லோரும் காணக் கொடுக்கவேண்டு மென ஆசை வைக்கிறார்கள். அதனால், தம்மிடம் தருமம் பெற்றுச் செல்லும் ஏழை, எளியார் பலரிடையில் தமக்கு நன்றி கூறிச் செல்லவேண்டுமென்பதையும், தமது தரும தயாளம் பற்றிப் பிரஸ்தாபமாக வேண்டுமென்பதையும் இவர்கள் எதிர்

பார்க்கிறார்கள். ஜனங்கள் காணாவண்ணம் இரசியமாகக் கொடை கொடுப்பதை இவர்கள் விரும்புவதில்லை. தம்மிடம் தருமம் வாங்கிச் செல்பவர்கள் தம்மை வாயாரப் பகிரங்கமாக வாழ்த்தாவிடில் அவர்களை நன்றிகெட்டவர்கள் என இவர்கள் நிந்திக்கிறார்கள். வெளிக்குத் தெரியாமல் இரகசியமாகத் தருமங் கொடுப்பதைப் பெரும் பாவம் போலக் கருதுகிறார்கள். வந்தார், வரத்தாருக்கெல்லாம் ஏனையோர் புகழட்டும் என அள்ளிக் கொடுக்கும் இவர்களின் அண்டை, அயலார் பட்டினி யால் வாடி வதங்கிக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களைப் பற்றி இவர்கள் கவலைப்படமாட்டார்கள்; அவர்கள் பால் மனமிரங்கவுமாட்டார்கள். அவர்களைப் பற்றிக் கடுகளவும் சிந்திக்கவுமாட்டார்கள்.

இத்தகைய பணக்காரர்கள் ஹஜ்ஜு யாத்திரை செல்வது பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) கூறியுள்ளதைப் பாருங்கள்:

''பிந்திய காலத்தில், பெயரளவிலுள்ள ஹாஜிகள் அதிகரிப்பார்கள்; அவர்களிடம் பணங்காசுகள் வந்து குவியும். இதனால், ஊர் சுற்றிப்பார்க்கும் ஆசையுடன்-அந்நோக்கத்துட னேயே ஹஜ்ஜுப் பிரயாணம் செய்வார்கள். எந்நோக்கங் கொண்டு ஹஜ்ஜுக்குப் போனார்களோ அதே நோக்கத்தைக் கொண்டே மீளுவார்கள். அவர்களின் பாவமோ, குற்றமோ எதுவுங் குறைந்திருக்காது; புதிதாக நன்மைகள் ஏதும் தேடாது திரும்புவார்கள். கடல் கடந்து வனாந்தரங்களிலெல்லாம் ஹஜ்ஜுப் பிரயாணத்துக்காக ஒட்டகத்தை ஓட்டிச் சென்ற அவர் களுக்கு, அவர்களின் வெகு சமீபத்தில் பசி, பட்டினி, வறுமை யால் வாடிவதங்கிக் கண்ணீர்விடும் அண்டை அயலார்களின் கஷ்டத்தைக் கடைக்கண் கொண்டாகிலும் நோக்கி உதவி புரிய வோ, ஒத்தாசை செய்யவோ மனமிருக்காது. இத்தகையோரின் இம்மாதிரியான ஹஜ்ஜை என்னென்பது!''

பணக்காரரில் வேறொரு பிரிவினர்: இவர்கள் பெருஞ் செல்வத்தைத் திரட்டிப் பத்திரமாக வைத்துக் காத்துக் கொண்டி ருப்பார்கள். ஆனால், அவற்றை எவ்விதமான நற் கைங்கரியத் துக்கும் செலவுசெய்யாமல் கருமித்தனங்காட்டி அணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பார்கள்.



காசு செலவு இல்லாத இபாதத்துக்கள் என்னென்ன உண்டோ அவற்றையெல்லாம் பெருமகிழ்வுடன் இவர்கள் நிறைவேற்றுவார்கள். பகலெல்லாம் நோன்பு பிடித்தல், இரவெல்லாம் நின்று வணங்கல், தினந்தோறும் திரு குர் ஆன் முழுவதையும் பூர்த்தியாக (கத்மு) ஓதி முடித்தல் முதலிய உறுப்பு சம்பந்தமான வணக்கங்களையெல்லாம் பூர்த்தி செய்வ தில் முன்னிற்பார்கள். இத்தகைய வணக்கங்களில் தமக்குக் காசு, பணம் செலவு செய்யவேண்டியதில்லை என்ற காரணத் தாலேயே அவற்றில் முழுக் கவனஞ் செலுத்துவார்கள்.

மகா பெரும் மருட்சியுடையவர்கள் இவர்கள். இதயத்தை நாசப்படுத்தும் கருமித்தனம் என்ற கெட்டவியாதி இவர்கள் இதயத்தின் மூலஸ்தானத்தைப் பற்றிப் பிடித்திருக்கிறது. அந்தக் கெட்ட வியாதியை நீக்கவேண்டுமானால் தாராளச் செலவு என்ற கிசிச்சையைக் கையாள வேண்டும். ஆனால், இவர்களோ வியாதிக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லாத, அனாவசியமான வேறு சிகிச்சைகளையே கையாள்கிறார்கள். அவற்றால் யாது பயனுண்டாகப்போகிறது?

இவர்களின் போக்கு தன் உடையுள் ஒரு பாம்பு புகுந்து கொண்டுள்ள ஒருவனுடைய நிலையை ஒத்திருக்கிறது. பொல்லாத நச்சுப் பாம்பு அது; அது தீண்டினதும் அவன் இறந்து போக வேண்டியதுதான். இத்தன்மையில் அபாயம் எத்தகையது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இவ்வபாயக் கட்டத்தில் அம்மனிதனுடைய கடமையான முதல் காரியம் அப்பாம்பை எப்படியாவது உடுமானத்தை விட்டு வெளியாக்க வேண்டியதே. அபாயகரமான இந்நேரத்திலே அம்மனிதன் பாம்புடைய பிரச்சனையை விட்டுவிட்டுத் தன் உடலில் ரத்தம் கெட்டுப்போயிருப்பதை மாற்ற இரத்த சுத்தி செய்யக் கூடிய நல்ல இரத்த விருத்தி டானிக் ஏதாவது சாப்பிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறான்! பாம்பின் விஷத்திலிருந்து தப்பிய பின்பல்லவா இவன் இரத்தசுத்தி பற்றிக் கவலைப் படவேண்டும்! சுவர் இருந்தால் தானே சித்திரம் தீட்டலாம்! பாம்பு தீண்டி இவன் மடிந்தபின் டானிக் சாப்பிடுவதெப்படி?

அகத்தினுள்ளே கஞ்சத்தனம் என்ற கருநாகம் புகஇட மளித்துவிட்டு அதை வெளியாக்கவேண்டிய முயற்சியெதுவும் செய்யாமல், அவசியமில்லாத வேறு பராக்குகளில் ஈடுபட்டுக்

கொண்டிருக்கும் இம்மருட்சியாளர்கள் நாம் மேல குறிப்பிட்ட மனிதனுடைய நிலையில்தானே இருக்கின்றனர்!

''இன்ன மனிதன் பகல் முழுவதும் நோன்பு நோற்கிறான்; இரவெல்லாம் நின்று வணங்குகிறான்'' என்று ஒரு நபரைப் பற்றி பிஷ்ருல் ஹாபீ (ரலி)யிடம் புகழ்ந்து கூறப்பட்டது. ''அப் பேதை மனிதன் தனக்குத் தேவையான முக்கிய விஷயத்தைக் கைவிட்டுத் தேவையில்லாத விஷயத்தில் தலையிட்டுள்ளான். பசித்தோருக்கு உணவளித்தலும், ஏழை எளியோருக்குத் தனசகாயஞ் செய்தலும் அவன் செய்யவேண்டிய முக்கிய காரியங்கள். துனியாவைக் கட்டியணைத்து, ஏழை எளியோருக்குப் பணங்காசு செலவு செய்யாமல் கட்டிக் காத்துக் கொண்டு வெறுமனே பட்டினிக் கிடந்து நோன்பு நோற்பதையும், நின்று வணங்குவதையும்விடப் பணத்தைத் தானே தருமம் செய்தலன்றோ அவன் முதலில் செய்ய வேண்டிய சத்கருமமாகும்?'' என்று பிஷ்ருல் ஹாபீ (ரலி) விளக்கங் கூறினார்கள்.

பணக்காரரில் மற்றொரு வகையினர்: இவர்கள் கடமையாக்கப்பட்ட ஜகாத்தை மட்டும் சரியாகக் கணக்குப் பார்த்துக் கொடுத்துவிடுவார்கள். ஆனால், இவர்களிடம் மனத் தாராளமோ பரோபகாரச் சிந்தையோ இருக்கமாட்டா. இவர்கள் ஜகாத்தைக் கொடுக்கும்போதும் தம்மிடமுள்ள பொருள்களில் கழிவுபட்ட மோசமானவற்றையே கொடுப்பார்கள். ஆனால், அத்தகைய பொருட்களைத் தமக்கே வைத்துக்கொள்ள மட்டும் சற்றும் சம்மதிக்கமாட்டார்கள். மற்றவர்களுக்கோ அவற்றைத் தான் ஈகிறார்கள். இவர்கள் ஜகாத்து கொடுக்கும் தன்மை இப்படி!

மேலும், இவர்கள் ஜகாத்துக் கொடுக்கிறபோது தம்மிடம் வேலை பார்ப்பவர்களாக, தமக்கு அடிபணிந்து எடுபிடி வேலைசெய்பவர்களாக, தாம் கொடுப்பதற்கு நன்றி செலுத்தும் முறையில் தமது ஏவல்களுக்குக்கட்டுப்படுபவர்களாக உள்ள நபர்களைப் பார்த்து, பிரதிபலனை எதிர்நோக்கி ஜகாத்து கொடுக்கிறார்கள். அல்லா(ஹ்)வை உவந்து அவன் திருப்தியை நாடி ஜகாத் கொடுக்கவேண்டுமென்பதை மறந்து, தாம் ஜகாத்து கொடுக்கும் நபர்களிடமிருந்து இவர்கள் பிரதிபலனை எதிர்பார்க்கிறார்கள்.



''இன்ன மனிதர் அல்லா(ஹ்)வுக்குப் பயந்து ஜகாத்தை முறைப்படி கொடுத்துவருகிறார்'' என்று தம்மைப்பற்றி விளம்பரப்படுத்தக்கூடிய உயர்ந்த அந்தஸ்துடைய பெரிய புள்ளிகளிடம் தம் ஜகாத்தைக் கொடுக்கும் பொறுப்பை இவர்கள் ஒப்படைக்கிறார்கள். அதன் மூலம் அந்தப் பெரிய புள்ளிகளின் தயவைச் சம்பாதித்துக்கொண்டு உலகக் காரியாதிகளில் தமக்குச் சாதகமாக அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஜகாத்து கொடுப்பதில் இவர்களின்அந்தரங்க நிய்யத்து இவ்வாறு உலகப் பயன்களை எதிர்பார்ப்பதாயுள்ளது. இதனால் இவர்களின் நல்ல நிய்யத்துக்கும் பங்கமுண்டாகிறது; செய்யும் புண்ணியத்திற்கும் பயனில்லாது போகிறது.

இத்தகையவர்கள் நிச்சயமாக மதிமயக்கங்கொண்டவர்களே. படுமோசமான தன்மையிலிருந்துகொண்டு, தாங்கள் அல்லா(ஹ்)வுக்குச் சம்பூர்ணமாக வழிபடுபவர்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள். இவர்கள் தாம் கொடுக்கும் ஜகாத்துக்காக அல்லா(ஹ்)வின் அருளன்பையும், தவாபையும், திருவுளப் பொருத்தத்தையும் எதிர்பாராமல் அதற்குப் பதில் மனிதர்களின் புகழுரைகளையும் பொருத்தத்தையுமே நாடுகிறார்கள்.

பணக்காரரில் வேறொரு வகையினர்: இவர்கள் திக்று, வஃளு மஜ்லிஸுகளுக்குச் சமூகந் தருவதன் மூலம் மருட்சியடைந்துள்ளனர். இவ்வகையில் ஏழைகளுக்கும், சாதாரண ஜனங்களுக்குங் கூட்டாகிறார்கள். இவர்கள் திக்று, ஹதீஸ், வஃளு மஜ்லிஸ்களுக்குத் தவறாமல் சமூகந் தருகிறார்கள்; அங்குப் போய்வருவதை வழக்கமாகவும் ஆக்கிக் கொள்கிறார்கள். ஆனால், வஃளு கேட்பதற்கொப்பத் தங்கள் நடைமுறைகளைச் சீர்திருத்தம் செய்யாவிட்டாலும், ஹதீதுப் பிரகாரம் ஒழுகாவிட்டாலும் கூட அந்தப் புண்ணிய மஜ்லிஸுக்குப் போய் வந்தாலே பெரிதும் நன்மைகளுண்டாகும் என்ற மனப் பான்மையிலேயே இருந்துவருகிறார்கள். நேர்மையில் கொஞ்சங்கூட மனந்திரும்பாதிருக்கும் இவர்கள் பெரிய மருட்சியாளர்களாவார்கள்.

ஹதீஸ், வஃளு மஜ்லிஸுகளுக்குச் செல்வதன் நோக்கமே

அங்குக் கூறப்படும் உபதேசங்கள், போதனைகளைக் கேட்டு அவற்றிற்கேற்ப நன்மையான கருமங்கள் புரியவேண்டுமென்ற ஆர்வமுண்டாகவேண்டுமென்பதுதானே! தினந் தினம் அங்குப் போயும் அவ்விதம் ஒரு நல்லபிலாஷை உணர்ச்சி இவர்களுக்கு உண்டாகவில்லையென்றால், இவர்கள் அங்குப் போய்வருவதில் பயன்இல்லையென்றுதானே அர்த்தம்! அவ்வாறாகச் செயலளவில் நற்கருமங்கள், நன்மைகள் புரியவேண்டுமென்ற ஆவல் உண்டாவது மிகவும் சிலாகிக்கத்தக்க நல்லதோர் அம்சமாகும். அந்த ஆவல் பல நன்மைகளைச் செய்யத் தூண்டும். அவ்வாறு தூண்டவில்லையெனில், அம்மஜ்லிஸுகளுக்குப் போய்வருவதால் பயனில்லை என்றுதான் ஏற்படும்.

இவர்கள் ஹதீஸ், வஃளு கேட்கக்கூடிய விதத்திலும் எத்தனையோ மருட்சிகள் உள்ளன. ஏதாவது உருக்கமான மொழிகளைக் கேட்டால் பெண்களைப்போலத் தேம்பித் தேம்பி அழுது சஞ்சலிப்பார்கள். ஏதாவது பயங்கரமான அச்சமூட்டும் எச்சரிக்கைகளைக் கேட்டால் நடுநடுங்கி, நிறம் பேதலித்து ''யா அல்லாஹ், ஸலாம்! எங்களை ஸலாமத்தாக்கு! கடைத்தேற்று! நவூதுபில்லாஹ்! (அல்லாஹ்வைக் கொண்டு பாதுகாவல் தேடுகிறேன்). ஹஸ்பியல்லாஹ்! (எனக்கு அல்லாஹ் போதும்). லா ஹவ்ல வலா குவ்வத இல்லாபில்லாஹ்! (அல்லா(ஹ்)வைக் கொண்டல்லாது எவ்வித உசும்புதலும், சக்தியும் கிடையாது)'' என்ற வாக்கியங்களைச் சப்தமிட்டு உரைப்பார்கள். ஆனால் அவ்வாறெல்லாம் இவர்கள் அழுவதாகக் காண்பிப்பது, பயங்கரத்தால் நடுநடுங்கி நிறம் பேதலிப்பதாகக் காட்டிச் சப்தமிடுவது யாவும் மற்ற ஜனங்கள் தம்மைப் பெரிய பக்திமானாகக் கருதவேண்டும் என்ற நோக்கத்தோடுதான். இத்தகையோர், தாங்கள் நன்மைகள் நிறைந்த பாக்கியவான்களாய் இருக்கப்போய்த்தான் தங்களுக்கு இம்மாதிரி நிலைகள் ஏற்படுகின்றன என்று தங்கள் மனத்தில் நினைத்துக் கொள்கிறார்கள்.

இவர்களுக்கு ஒரு வியாதியஸ்தனை உவமானங் கூறலாம். அவன் தினந்தோறும் வைத்தியர்கள் பிரசங்கம் நிகழ்த்துமிடத்திற்குச் சென்று, அவர்கள் சொல்லும் வார்த்தைகளையும், ஔடதங்கள், மருந்துகள் பற்றிய விபரங்களையும் கவனமாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறான். ஆனால், அவர்கள் சொல்லும் சுகாதார ரீதியில் நடப்பதோ அல்லது அவர்கள் குறிப்பிட்ட ஔடதம், மருந்துகளைத் தயாரிப்பதோ கிடையாது; அதுபற்றிக் கவலைப்படுவதுமில்லை. என்றாலுங்கூட, ''மகா நிபுணர்களான பிரபல வைத்தியர்கள் கூடுமிடத்தில் தினமும் நாம் வந்து அமர்ந்து அவர்களின் மொழிகளையும், பிரசங்கங்களையும், மருந்துகள்பற்றிய விளக்கங்களையும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்; இதனாலேயே நமது வியாதி முற்றும் நீங்கிவிடுமே!'' என்று அவ்வியாதியஸ்தன் தீர்மானித்துக் கொள்கிறான்.



கவனியுங்கள்! ஜாக்கிரதையுடனிருந்து கொள்ளுங்கள்! நீங்கள் கேட்கும் ஹதீஸ் உபதேசங்கள் மூலம் உணர்ச்சி பெறுங்கள்! உங்களிடம் குடி கொண்டுள்ள ஆசாபாசங்களை அகற்ற முற்படுங்கள். கேட்கும் உபதேசங்கள் உங்கள் மனத்திலே அதிர்ச்சியுண்டாக்க வேண்டும். அவற்றின் மூலம் உங்கள் நடைமுறைகளில் நல்லொழுக்கம் ஏற்படவேண்டும். அவ்வாறாயின், இம்மண்ணுலகைவிட்டு நீங்கள் பிரிக்கப்பட்டு அல்லாஹ் அளவில் செல்லும்போது, நீங்கள் கேட்டு வந்த ஹதீஸ், வஃளுகள் உங்களுடன் துணைவரும்; ஆண்டவன் சமூகத்தில் வரவேற்கப்படக்கூடியவர்களாயிருப்பீர்கள்; கவலையும் அச்சமுமற்றிருப்பீர்கள். அவ்வண்ணம் உங்களைச் சீர்திருத்தம் செய்து நல்வழியில் செயலாற்ற முனையாமல், வாளாயிருந்து கொண்டு நாம் கேட்டுவந்துள்ள ஹதீஸ்களும், வஃளுகளும் நமக்கு உறுதுணை (வஸீலா) ஆக இருக்கும் என்று வீணே மனப்பால் குடித்தால், நீங்கள் கேட்டுவந்த ஹதீஸ், வஃளுகளே உங்களுக்கு எதிர்த்தரப்பிலுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அத்தாட்சியாய் அமையும். நீங்கள் பெரும் ஏமாற்றமடைந்து மதிமயக்கமுடையவர்களாக ஆகிவிடுவீர்கள். அவ்வாறாக மதிமயக்கமுறாமல், கேட்கும் உபதேசங்களையும், ஹதீஸ்களையும் மனப்பூர்வமாக ஏற்று நடைமுறையில் அவற்றை அனுஷ்டித்து விமோசனம் பெறுவீர்களாக!

## ஸூபிய்யாக்களின் மதிமயக்கம்

அல்லாஹ் காப்பாற்றிப் பாதுகாத்துக்கொண்ட ஒரு சிலரைத் தவிர இக்காலத்திய ஸூபிய்யாக்களில் பெரும்பாலாரை ஆச்சரியப்படத்தக்க பெரும் மருட்சி பீடித்துள்ளது. இவர்களில் பல வகையினர் உண்டு.

ஒரு வகையினர்: இவர்கள் ஸூபிய்யாக்களைப் போன்று நடை, உடை, பாவனை செய்து வெளி வேடந் தரித்துக்கொள்கிறார்கள். பெரும் ஞான (தஸவ்வுப்)ப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டும், அத்தகைய பரிபாஷைகளைப் பழக்கிக் கொண்டுமிருக்கிறார்கள். உண்மை ஸூபிய்யாக்களைப் போல வெளிக்குத் தெரியும் படி பல காரியங்கள் புரிகிறார்கள். இறைவனது நாம தியானத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்-சதாவும் ஒலுவுடன் இருந்து கொண்டு, தொழுது கொண்டே இருக்கிறார்கள்-முஷாஹதா, முராகபா நிஷ்டையிலிப்பது போலத் தலையைத் தாழ்த்தித் தொங்க விட்டுக் கொண்டு முஸல்லா விரிப்பில் லியத்துத் தரிபடுகிறார்கள்-பெரிய யோகிகளைப்போன்று சதா சிந்தனையில் ஆழ்ந்த, சுவாசத்தை அடக்கி யோகாப்பியாசம் புரிகிறார்கள்-பெருமூச்சு விடுகிறார்கள்-ஏதோ பெருங்கவலையிலாழ்ந்திருப்பது போல முகத்தை வைத்துக் கொள்கிறார்கள். ஆக இம் மாதிரிக் காரியங்களில் பெருங் கவனத்தோடு, வெளிக்குத் தெரியும்படி அவற்றைச் செய்வதில் விசேஷப் பிரீதியுடனிருக்கிறார்கள். ஜனங்கள் மத்தியிலே ஹதீஸ் உபதேசஞ் சொல்ல முற்பட்டால் மிகமிகத் தாழ்ந்த தொனியிலே, பல நாள் பட்டினி கிடந்தாரைப் போன்று பேசுகிறார்கள்; ஆனால், மற்ற வேளைகளிலோ கத்துகிறார்கள்.

இவர்கள் தங்களுடைய இத்தகைய நிலைமையாலேயே தாங்கள் கடைத்தேறிவிட முடியும் என்று கருதிக்காலம் போக்குகிறார்களேயன்றி உண்மை ஸூபிய்காக்களின் அம்சங்களான முஜாஹதா (ஆத்ம சுத்திக்காக கஷ்டங்களை மேற்கொள்ளல்), ரியாழத்து (ஆத்மாவை நல்ல பண்பில் அப்பியாசப்படுத்தல்), முராகபா (தன்னை நோட்டமிடுதல்), அந்தரங்க வெளிரங்க பாவங்கள் அனைத்தையும்விட்டுத் தமதகத்தைச் சுத்தப்படுத்திப் பக்குவப்படுத்தல் முதலியவற்றில் சற்றும் அக்கறை கொள்வதில்லை.

மேலும், ஹலால் என்று தோன்றாத ஷுப்ஹத்தான (சந்தேகமான) பொருள்களையும், ஹராமான வஸ்துக்களையும், ஆட்சியாளர்களிடமுள்ள அநீதமான பொருள்களையும் பெரும் வேட்கையுடன் நாய்போலத்தின்கிறார்கள். சின்னஞ் சிறு ரொட்டித் துண்டுக்கும், செம்புக் காசுக்கும், அற்பமான



தொரு தானியத்துக்குங்கூட விழுந்தடித்துக்கொண்டு ஓடி முந்துகிறார்கள். ஈத்தங்கொட்டைச் சருகுக்காகவும், ஒரு முழ நிலத்துக்காகவும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களின் சுயநலம் சம்பந்தமாக ஏதாவது தகராறு ஏற்பட்டுவிட்டால், ''உன்னுடைய வண்டவாளம் இவ்வளவு தானே, தெரியாதாக்கும்'' என்று பரஸ்பரம் மானபங்கப் படுத்திக் கேவலமாகப் பேசி குஸ்திக்கும் இறங்கிவிடுகிறார்கள். இவ்வளவெல்லாம் செய்துகொண்டு தாங்கள் மகா ஞானிகள், ஸூபிய்யாக்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். என்னே இவர்களின் மதி மயக்கம்!

இவர்களின் போக்குக்கு ஒரு தொண்டுக் கிழவியின் நிலைமையை உவமையாகக் காட்டலாம். சுத்தவீரர்கள், பட்டாளத்தினர், பராக்கிரமசாலிகள் முதலியோர் யுத்தத்துக்குச் செல்வதற்காகப் படையில் சேர்க்கப்படுவதாகவும் அரசனால் அவர்களின் பெயர் ஜாபிதா தயாரிக்கப்படுவதாகவும் அக்கிழவி கேள்விப் படுகிறாள். உடனே அவள் வீரர்கள், பட்டாளத்தினர் அணிந்துள்ளவை போன்ற ஆடைகளையும், உடுப்புகளையும் அணிந்து, ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு அரசனுடைய சமூகஞ் செல்கிறாள். அங்குப் போய்த் தன்னையும் பட்டாளத்தில் ஒரு போர் வீரனாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்கிறாள். பரிசோதனை செய்து பொறுக்கி எடுக்கும் இலாக்காவுக்கு அவள் அனுப்பப்படுகிறாள். இங்கு அவள் வேஷம் கலைந்து உண்மை வெளியாகிறது. சரியாக நிற்கக் கூட இயலாத பழுத்த தொண்டுக் கிழவியான அவள் மரணப் பயணத்தை வெகு அண்மையில் வைத்துக் கொண்டு பட்டாளத்தில் சேர்ந்து சூரத்தனம் செய்யப் போவதாகக் கூறுவதிலும், வீரர்களின் உடையை அணிவதிலும் அர்த்தமோ பொருத்தமோ உண்டா? அவ்வாறாக அரசன் முன் அவள் சென்றது அரசனைப் பரிகசிப்பதாகவன்றோ ஆகிவிடுகிறது!

''ஏ, அறிவு கெட்ட கிழவியே, உன் அந்திய காலத்தில் இத்தகைய காரியஞ் செய்ய வெட்கமில்லையா? அரசனை ஏளனம் செய்யவா துணிந்தனை!'' என்று, பொறுக்கி எடுக்கும் இலாக்காவினர் அவளைக் கடுமையாகக் கண்டித்து அரசனை அவமதித்த குற்றத்துக்காக அவளையானைக் காலில் இட்டுக் கொல்லும்படி கட்டளையிட்டனர். அவ்வாறே அவளும்

தண்டனைக்குள்ளானாள். அந்தோ, யானையால் சவட்டி மிதிக்கப்பட்டு உயிர் துறந்தாள் அவள்!

இக்கிழவியின் வீரவேஷம் போன்றே, நாம் மேலே குறிப்பிட்ட போலி ஸூபிய்யாக்களும் துறவு வேஷமிடு கிறார்கள்.

ஸூபிய்யாக்களின் இன்னொரு வகையினர்: முந்தியவர் களைவிட இவர்ககள் அதிகமான மதிமயக்கங் கொண்டுள் ளனர். எளிய ஆடை அணிதலும், சாதாரண உணவருந்தலும், எளிய இடத்தின் சம்பந்தமும், சிறிய இல்லிட வாழ்க்கையும் இவர்களுக்கு அதிகமும் சங்டமானவையாயிருக்கின்றன.

தாங்கள் ஸூபிய்யாக்களென்று வெளியில் கூறிக் கொண்டு திரிவார்கள். ஆனால், ஸூபிய்யாக்களின் வெளிரங்க மான நடை, உடை, பாவனையைக்கூட இவர்களிடம் காண முடியாது. பட்டுப் பீதாம்பரங்களை அணியாவிட்டாலும், விலையுயர்ந்த பகட்டு ஆடைகளையும், டாம்பீகமான ஜுப்பா, கோட்டு முதலிய உடுமானங்களையும் அணிந்து கொள்கி றார்கள். வேண்டுமென்றே தமது புதிய ஆடைகளைக் கிழித்துத் தமது ஸூபித்தன வேஷத்தை வெளிக்குக் காண்பித்துக் கொள் வதற்காக, ஒட்டுத் தையல்களைப் போட்டுக் கொள்கிறார்கள். இவை பட்டாடைகளைவிடப் பன்மடங்கு அதிக விலையுள்ள வையாயிருக்கும். இவர்களிடம் உள்ள தொழுகை முஸல்லா விரிப்புங்கூடப் பல வர்ணச் சித்திர வேலைப்பாடுகளமைந்த விலையுயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாயிருக்கும்.

வெளிரங்கமான பேணுதல்கள்பற்றியே அசட்டையாய் இருக்கும் இவர்கள் உள்ரங்கப் பேணுதல்களை எவ்வாறு காப்பாற்றுவார்கள்! இவர்களின் அந்தரங்க நோக்கமே உலகில் சுகமாக வாழவேண்டுமென்பதும், ஆட்சியாளரின் நிதிகளிலி ருந்து தின்னவேண்டுமென்பதும் தானே!

எனினுங்கூட, இவர்கள் தாங்கள் தான் மிகவும் சிரேஷ்ட மானவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். முஸ் லிம்களுக்குத் திருடர்களால் உண்டாகும் அபாயத்தைவிட இவர் களால்தான் அதிக அபாயம் உண்டாகிறது. திருடர்களாவது பொருட்களைத்தான் திருடுகிறார்கள். இவர்களோ தங்கள்



பகட்டான வேஷத்தால் இதயங்களையல்லவா கொள்ளையடிக் கிறார்கள்! இவர்களின் வெளிக் கோலத்தைக் கண்டு மயங்கிய வர்கள் இவர்களிடம் தங்கள் மனத்தைப் பறிகொடுத்து இவர் களைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் தாங்களும் மோசம் போவதோடு தங்களைத் தொடரும் பிறரையும் நாசத்துக் காளாக்கிவிடுகிறார்கள். இவர்களின் இந்த இழிநிலைபற்றி எடுத்துக் கூறப்பட்டால் ஸூபிய்யாக்களின் தன்மை இப்படித் தானிருக்கும் என்பார்கள். இவர்களின் இப்போக்கால் நேர்மை யாளர்களான ஸூபிய்யாக்களைப்பற்றியுங்கூட ஜனங்கள் தப்பெண்ணங் கொள்ள இடமுண்டாகிறது. ஸூபித் தத்துவத் தின் பரிசுத்தத் தன்மையை இவர்கள் களங்கப்படுத்துகிறார்கள்.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர்: இவர்கள் ஞானப் பாட்டையிலுள்ள முகாஷபா (அகக்கண் திறப்பு), ஹக்கின் லிகாஃ (இறை தரிசனம்), பல மகாம்களையும் கடந்து வஸ்லு (ஐக்கிய நிலை), சதாவும் இறைகாட்சி கண்டுகளிக்கும் ஷுஹூது, இறை சந்நிதானத்தை அடுத்திருக்கும் குர்பு முதலிய உயர்ந்த அனுபவங்களெல்லாம் தமக்குக் கிட்டியிருப்பதாகத் தாவாச் செய்வார்கள். ஆனால், அவற்றின் பெயர்களையும் அவைபற்றிய வார்த்தைகளையும் வாயளவில் சொல்வதைத் தவிர அவைபற்றிய எவ்வகை ஞானமும் அனுபவமும் இவர் களுக்கு இரா.

ஏதோ சில மொழிகளையோ, கலிமாக்களையோ, இஸ் முகளையோ யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொண்டு அவற் றைத் திரும்பத் திரும்ப ஓதிக்கொண்டே இருப்பார்கள். தாங்கள் ஓதுபவைதாம் அகிலத்திலே ஆதி முதல் அந்தம்வரையுள்ள ஞான அறிவுகளிலெல்லாம் மகா விசேஷமானவை என்று நினைத்துக் கொண்டுமிருப்பார்கள். இந்நினைப்புடன் இவர்கள் பிக்ஹுடை ஆலிம் (பகீஹு) களையும், திரு குர்ஆனைப் போதிப்பவர்களையும் தங்களைவிடக் கீழ்த்தரமானவர்கள் என்று அலட்சிய மனோபாவத்துடன் நோக்குவார்கள். உலமாக் களையே இவ்வாறு அலட்சியப்படுத்தும் இவர்கள் ஏனைய சாமான்ய ஜனங்களை எவ்வளவு மோசமாகக் கருதுவார்கள்! ஆயினும், சாதாரண ஜனங்களில் பலர் - உழவர்கள், நெசவாளி கள், தொழிலாளர்கள் பலர் - இந்த ஞான மந்திரம், கலிமா தெரிந்ததாகக் கூறுபவர்களையே தொடர்ந்து நாட்கணக்காய்

அவர்கள் பின்னாலேயே அலைகிறார்கள். கடைசியில் இவர்களும் அவற்றைக் கற்றுக்கொண்டு அவற்றைத் திருப்பித் திருப்பி ஓதுவதற்கு உட்கார்ந்துவிடுகிறார்கள். ஏதோ இறை சமூகத்திலிருந்து தங்களுக்கு வந்த வஹீ போலவும், எவருக்கும் அருளப்படாத பரம இரகசியம் தமக்கு அளிக்கப்பட்டது போலவும் நினைத்துக்கொண்டு ஆலிம்களையும் ஆபிதுகளை யும் இவர்கள் அற்பமாக நோக்குகிறார்கள்.

'சங்கடத்தில் சிக்கி உழைக்கும் கூலிக்காரர்கள்' என்று ஆபிதுகளையும், 'ஹதீஸ்களைக்கொண்டு திரைபோடப்பட் டுள்ளவர்கள்' என்று ஆலிம்களையும் இவர்கள் குறிக்கிறார்கள்.

ஹக்கிடம் நெருக்கமானவர்கள், இறை சமூகம் ஐக்கிய மான வஸ்லுடையவர்கள் தாங்களே தான் என்று வருணித்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் மமதை பிடித்த இவர்கள் அல்லா(ஹ்)விடம் மிகக் கெட்ட நயவஞ்சக முனாபிக் குகளாக விளங்குகிறார்கள். அகக்கண் திறந்த உண்மை ஞானி களான ஸூபிய்யாக்கள் இவர்களை அறிவேதுமில்லாத முழு முட்டாள்களாயும், செல்லாக் காசுகளாயும் மதிக்கிறார்கள். இப்போதையறிவிலிகள் தங்களிதயத்தில் உறைந்துகிடக்கும் ஆசாபாசங்களையும், துர்குணங்களையும் அகற்ற முற்பட வில்லை; உண்மையான ஞான அறிவைத் தேடிப் பெற்றுத் தங்கள் மர்த்தபா (பதவி)க்களை உயர்த்த முனையவில்லை; தங்கள் ஆத்ம சுத்திபற்றிச் சற்றேனும் கவலைப்படவில்லை. யாரோ, ஏதோ சொன்னதைப் பற்றிப்பிடித்துக்கொண்ட குருட்டு நம்பிக்கையுடன் அதைத் திரும்பத் திரும்ப ஓதிக் காலங் கடத்தித் தங்கள் மன இச்சைக்கு வழிப்பட்டார்களே தவிர வேறில்லை. அதைவிடுத்து உண்மையிலேயே தங்களுக்குச் சித்தியையும் பயனையும் தரக்கூடிய சத்முயற்சிகளில் ஈடுபட் டால் எவ்வளவோ நன்மையாகுமே!

ஸூபிய்யாக்களில் வேறொரு சாரார்: இவர்கள் முன்ன வர்களை யெல்லாம் மிஞ்சிவிட்டார்கள். இவர்கள் நல்ல அமல் களைச் செய்கிறார்கள்; ஹலாலானவற்றை அனுபவிக்கி றார்கள்; இதய சம்பந்தமான கண்காணிப்பு ஆராய்ச்சி செய்பவர் களாய் யிருக்கிறார்கள். எனினும், தங்களுக்கு ஸுஹ்து (பற்றற்ற தன்மை), தவக்குல் (இறைவன்மீது பொறுப்புச் சாட்டல்), ரிலா (இறைதிருப்தி), ஹுப்பு (பேரின்பக் காதல்)



முதலியவைகளில் பெரிய மகாம் (அந்தஸ்து)கள் கிடைத் திருப்பதாக வாதாடுகிறார்கள். ஆனால் யதார்த்தத்தில் அப் பதவிகளிலும் இவர்கள் செம்மை பெற்றிருக்க மாட்டார்கள். அவற்றிற்குரிய ஷுறுத்துக்கள், முறைகள், தன்மை விவரங்கள், அவற்றிலுள்ள சங்கட நிலைகள் ஆகியவை என்னென்ன என்று எந்த விவரமும் இவர்களுக்குத் தெரியவே தெரியாது.

இவர்களில் சிலர் இறையன்பிலேயே தாங்கள் சொக்கிப் போயிருப்பதால் தங்களுக்கு அன்பு முற்றி வஜ்து என்னும் பரவசானந்த மயக்கம் ஏற்படுவதாகக் கூறிக்கொண்டு இறைவனது இஷ்கில் வையாளி போடுகிறார்கள். மேலும், இறைவனைக் கொண்டு தங்கள் மனம் போனபடி ஆகாத சில பிதுஅத்தான அல்லது குப்ரான தோற்றங்களையும், அபிப் பிராயங்களையும் சொல்லி பொல்லாத வாதம் செய்கிறார்கள். அல்லா(ஹ்)வை அறியும் மஃரிபாத் துறையில் சரிவர எதுவும் அறிந்து தெளியுமுன்பே தமக்கு அல்லா(ஹ்)வின் ஹுப்பு கிட்டி விட்டதாகக் கூறுகிறார்கள். இவர்கள் சொல்வது பொருத்த மற்றது; வெறும் அபத்தமானது. ஏனெனில், அல்லாஹ் ஆகாது என விலக்கியவற்றை வெறுத்து விட்டுவிடாமல் அவற்றை இறுகப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் கூறிய ஏவல்களை எடுத்து நடவாமல் தங்கள் மன இச்சைக்கு அடிமையாகி அதன் போக்குப்படி நடக்கிறார்கள். அல்லா(ஹ்) வின் ஏவல்களைவிடத் தங்கள் மன இச்சையின் ஏவல்களுக்கே வழிபடுகிறார்கள். ஜனங்கள் அவமானமாக ஏதும் சொல்லக் கூடுமே என்று ஜனங்களுக்குப் பயந்து சில காரியாதிகளை விட்டுவிடுகிறார்கள். ஆனால், அதே காரியாதிகளை ஜனங்களை விட்டும் தனித்திருக்கும் நேரத்தில் விடுகிறர் களில்லை. தாங்கள் புரியும் இத்தகைய மாற்றமான செயல்க ளெல்லாம் அல்லா(ஹ்)வின் பேரின்ப அன்புக் கனலை அணைத்துவிடுமே என்று இவர்கள் கவலைப்படுவதேயில்லை.

இவர்களில் சிலர் கிடைத்தமட்டும் போதும் என்ற திருப்தி யான கனாஅத்தோடும் தவக்குலோடுமிருக்கிறார்கள். தவக்குல் என்று சொல்லிக்கொண்டு பக்கத்தூருக்கும் போகையிலும் கட்டுச்சாதம் ஏதும் கொண்டு செல்லாமல் போகிறார்கள். இவ்வாறு செய்வதே தவக்குலின் உயர்ந்த பண்பு என்று நிர்ணயங் கொண்டிருக்கிறார்கள். இவர்களைவிடத் தவக்குலின்

பன்மடங்கு சிறந்து விளங்கிய அந்த உம்மத்தின் முன்னோர் களான மேதைகளும், அருமை ஸஹாபாக்களும் இவர்களைப் போன்று செய்ததாக ஆதாரமில்லை. தவக்குல் என்ற பேரால் இவர்கள் செய்யும் கர்ரியம் பிதுஅத்தானதாகும். எவ்விதமான தவக்குலினால் ஆத்மாவுக்கு நன்மையும், வேறு எந்தவிதமான தவக்குலினால் அதற்கு அபாயமும், சங்கடமும் சம்பவிக் கின்றன என்று இவர்களை விட, மேதைகளான அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். கட்டுச்சாதமின்றிப் பிரயாணஞ் செய்வது ஆத்மாவைச் சங்கடப்படுத்துவதாகிறது என்பதை யுணர்ந்த அவர்கள் கட்டுச்சாதத்தை எடுத்தே சென்றார்கள். அவர்கள் தவக்குலோடுதான் இருந்தார்கள். ஆனால், அவர்களின் தவக்குல் அல்லாஹ் மீதிருந்ததே தவிர, கொண்டுசென்ற கட்டுச்சாதத்தின் மீதிருக்கவில்லை.

கட்டுச்சாதம் எடுத்துச்செல்லாமல் தவக்குலுடன் போவதாகச் சொல்லும் இவர்கள், தாங்கள் போகுமிடத்தில் யாராவது உணவு கொணர்ந்து தரமாட்டார்களா, வேறு எவ்வகையிலாவது ஆகாரம் கிடைக்காதா என்று இச்சை கொண்டு எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார்கள். அதை நம்பியே தான் இவர்கள் கட்டுச்சாதம் கொண்டு செல்லவில்லை.

பொதுவாகக் கடைத்தேற்றும் நற்பதவி மகாம்களிலே எதிலும் மருட்சியில்லாமலிருப்பதில்லை. அவ்வாறாக மதிமருட்சியில் மயங்கியவர்கள் மிகப்பலர். இவற்றின் முழு விபரங்களை நமது 'இஹ்யா உலூமுத்தீன்' எனும் கிதாபில் 'ருப்உல் முன்ஜியாத்' என்ற பகுதியிலே எடுத்துரைத்துள்ளோம். அவற்றைப் பார்வையிடுக.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர்: இவர்கள் கலப்பற்ற ஹலாலான உணவைத் தேடுவதில் மட்டுமே தங்கள் முழுப் பிரயாசையையும் செலுத்தித் தங்கள் ஆத்மாவை அதிக மும் கஷ்டப்படுத்துகிறார்கள். இந்த ஒரு வேலையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்களேயன்றித் தங்கள் இதயசுத்தி சம்பந்த மாகவோ, அங்க அவயவப் பேணுதல்கள் சம்பந்தமாகவோ சற்றுங்கூடக் கவனஞ் செலுத்தாமல் அவற்றில் மோசம்போய் விடுகிறார்கள்.



இவர்களில் வேறு சிலர் உணவு, உடை, உறைவிடம் இவற்றின் ஹலாலைப் பேணுவதிலேயே ஆழ்ந்துள்ளார்கள். இவர்களும் மற்ற அமல்களைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறை கொள்வதில்லை. அல்லாஹ், தன் அடியார்களில் எவரெவர் சம்பூர்ணத் தன்மையும், சர்வத்திலும் தனக்கு வழிபட்டு வணங்கும் தன்மையும் பெற்றிருக்கிறார்களோ அவர்களையே அங்கீகரித்து ஏற்றுக்கொள்வான் என்பதையும் இவர்கள் அறிய மாட்டார்கள். ஒரு சில வழிபாடுகளை அனுஷ்டித்தும் மற்றும் சிலவற்றை அனுஷ்டியாது விடுத்தும் அலட்சிய நோக்குட னிருப்பதும் மதிமயக்கமே.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர்: சற்குணமும், தாழ்மையும், பணிவும், கருணையும் தங்களிடம் குடி கொண்டி ருப்பதாக இவர்கள் தாவாச் செய்கிறார்கள். ஸூபிய்யாக் களுக்குப் பணிவிடை செய்வதையே இவர்கள் பிரதானமாக உவக்கிறார்கள். அத்துறையில் அளவிடற்கரிய கஷ்டமும், சிரமமும் மேற்கொண்டு தங்களைவிடப் பெரியோரான ஸூபிய்யாக்கள் சமூகத்தில் அதிகமான ஜனங்களைத் திரட்டு கிறார்கள். மகான்களான ஸூபிய்யாக்களுக்குப் பணிபுரிதலே தங்கள் கடன் என்று வாயால் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் அவ்வாறு இவர்கள் சிரமம் மேற்கொள்ளச் காரணம் அதைக்கொண்டு, பிரபலமான ஸூபிய்யாக்கள் பெயரைச் சொல்லித் தமக்குக் காசு, பணம், செல்வாக்கு முதலி யவற்றைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பை உண்டாக்கிக் கொள்வ தற்குத்தான். இவ்வாறான சுயநலந்தான் இவர்களின் அந்தரங்க நோக்கமாகும்.

இவ்வளவெல்லாம் செய்யும் உள்ளச்சத்துடன் ஸூபிய் யாக்களுக்குப் பணிவிடை செய்வதாக வெளிக்குக் காட்டிக் கொள்கிறார்கள். அவர்களின் அன்பையும் ஆசியையும் பெறவே அவர்களை அண்டி வாழ்வதாகவும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், அந்தரங்கத்தில் ஸூபிய்யாக்களின் பேரைச் சொல்லிப் பணந்திரட்டுவதோடு பலரின் சகவாசத்தையும், தொடர் பையும், ஒத்தாசையான பக்கபலத்தையும் பெருக்கிக் கொள்வ தற்காகவே இத்திட்டத்தை நிறைவேற்றிவருகிறார்கள்.

இத்தன்மையில் இவர்கள் ஜனங்களிடமிருந்து ஹராமான பொருள்களையும், ஷூப்ஹத்தான சந்தேகப் பொருள்களையும்

நிதியாக வசூலிக்கிறார்கள். அவற்றிலிருந்தே ஸூபிய்யாக்கள் பெயரால் மிகத் தாராளமாகச் செலவிடுகிறார்கள். அதன் மூலம் அதிக ஜனங்கள் இவர்களை ஆதரிக்கிறார்கள். இவர்களுடைய பிரக்கியாதியும், பேரும் மேலோங்குகிறது. இவர்களில் சிலர் ஆட்சியாளர்களிடமிருந்தும் திரவியங்களைப் பெற்று இத்துறையில் செலவிடுகிறார்கள்.

மற்றுஞ் சிலர் ஆட்சியாளர்களிடமிருந்து பெற்ற பணத்தையும், அநியாயம், அக்கிரமம் ஆகிய துறைகளில் திரட்டிய பணத்தையும் ஹஜ்ஜுக்குச் செல்வதற்காக என்று ஸூபிய்யாக்களுக்கு அளிப்பார்கள். இவ்வாறு தாங்கள் புரியும் செயல்களெல்லாம் பரோபகாரம், நன்றி, புண்ணிய கைங்கரியங்ளைச் செய்யத் தூண்டுவது என்றெல்லாம் காரணங் கூறுவார்கள். ஆனால், உண்மையில் இவர்கள் அச்செயற்களை யெல்லாம் புரியும் நோக்கம் முகஸ்துதி, புகழ், பிரக்கியாதி இவையன்றி வேறில்லை.

என்னே, இவர்களின் போக்கு! அல்லா(ஹ்)வின் ஏவல்களை இவ்வளவு தூரம் அலட்சியப்படுத்துகிறார்களே! ஹராமான பொருள்களை மனமாரத் தெரிந்தும் மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறார்களே! அதையே தமக்காகவும் பிறருக்காகவும் செலவு செய்துகொண்டிருக்கிறார்களே!

ஒரு புத்திசாலி, அல்லா(ஹ்)வை வணக்கும் பள்ளிவாசலை நிர்வாகம் செய்துவருகிறார். அவர் பள்ளிவாசல் தரையைப் பூச முனைகிறார். அவ்வாறு பூசும் போது மலஜலம், சாணி முதலிய நஜீஸுப் பொருள்களைக் கொண்டு கலந்து பிசைந்த களிமண்ணால் பூசுகிறார். பள்ளிவாசலைத்தானே பூசுகிறோம், எதைக் கலந்து பிசைந்தாலும் பாதகமில்லை என்று கருதிக்கொண்டு காரியம் செய்கிறார். நாம் மேலே குறிப்பிட்ட ஸூபிய்யாக்களிலுள்ள வகையினருடைய போக்கு இப்புத்தி சாலியின் போக்கையே ஒத்திருக்கிறது. இவர்கள் ஹராம் என்ற நஜீஸான பொருள்களை ஹஜ்ஜு என்ற புனித காரியத்துக்குப் பயன்படுத்துகின்றனர்.

ஸூபிய்யாக்களில் மற்றொரு வகையினர்: ஆத்மாவைப் பரிபக்குவப்படுத்துவதிலும், கேவல நிலையை விட்டுப் பரிசுத்தமாவதிலும், விருப்பு வெறுப்பை விட்டுப் பற்றற்றிருப்பதிலும், குணங்களைத் தூய்மையாக்குவதிலும் இவர்கள் மிகுந்த கஷ்டமெடுத்து முனைந்துள்ளனர். அவ்வகையிலே முற்றும் மூழ்கியுள்ளனர். சதாவும் ஞானம் சம்பந்தமாகவே பேசுகின்றனர்.



ஆத்மாக்களிலுள்ள குற்றங்குறை (ஐபு)களைப்பற்றியும் அதன் குபாடங்களைப்பற்றியும் வாதுசெய்து கொண்டேயிருக்கின்றனர். அவ்வாறாகச் செய்யும் வாதப் பிரதிவாதங்களையே தமக்குத் தொழிலாகவும் விளம்பரமாகவும் ஆக்கிக் கொள்கின்றனர்.

நுணுக்கமான விஷயங்களிலும் ஆத்மாவுக்கு மிகவும் பொல்லாத அபாயங்கள் உள்ளனவாதலால், நுண்ணிய ஆராய்ச்சி செய்தலே போதுமானது, அதனாலேயே தங்கள் ஆத்மாவைக் கெடுதல்களை விட்டும் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று இவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

"இஃது ஆத்மாவுக்கு இன்னல் உண்டாக்கும் இழிவான சுபாவம்'' என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால், அனுஷ்டானத்தில் அதைத் தவிர்த்து நடக்க மறந்துவிடுகிறாகள். இழிவான சுபாவம் இழிவானது என்பதை மறந்திருப்பதும் ஓர் இழிவான காரியமே.

இவர்களின் இத்தகைய போக்குப்பற்றிக் கேட்கப்பட்டால் சங்கிலித்தொடர் போன்ற வார்த்தைகளால் போலி சமாதானங் கூறுகிறார்கள். இவ்வாறாகத் தங்கள் ஆத்மாவைக் கவனிக்கும் தொடர்பை மட்டுமே சர்வ காலமும் கொண்டிருப்பார்களே தவிர தங்களைப் படைத்த சிரஷ்டிகர்த்தா (காலிகு)வை இதயத்தால் பற்றிப்பிடிக்க முற்படுவதில்லை.

ஹஜ்ஜுக்குப் போக ஏற்பாடுசெய்த ஒரு மனிதனை இத்தகையோருக்கு உவமானமாகக் குறிப்பிடலாம். அவன் ஹஜ்ஜுக்குப் போவதற்காக, ஹஜ்ஜு செய்வது எப்படி, எப்போது புறப்படவேண்டும், வழியில் என்னென்ன சங்கடங்கள் சம்பவிக்கும் என்று துருவித் துருவி அணுவணுவாக ஆராய்ந்துகொண்டிருந்தான். அதனால் அவன் முழு நேரத்தையும் அதிலேயே கழித்துவிட்டானேயன்றி, ஹஜ்ஜுடைய பிரயாணத்தை மேற்கொள்ளவோ, அதனுடைய முறைகளை அனுஷ்டித்துக் கஃபதுல்லாஹ் பக்கம் செல்லவோ இல்லை. தான் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு ஹஜ்ஜுடைய வகை

விபரங்களைப்பற்றி மலையளவு கூறிக்கொண்டிருப்பதால் மட்டும், மக்கமா நகர் சென்று கஃபத்துல்லா(ஹ்)வைத் தரிசித்து அரபாவில் தரிபட்டு ஹஜ்ஜை நிறைவேற்றியவனாக ஆக முடியுமா? இவனைப் போன்றே மேலே குறிப்பிட்ட வகையினரும் மதிமயங்கியுள்ளனர்.

ஸூபிய்யாக்களில் வேறொரு வகையினர்: இவர்கள் முன்பு குறிப்பிட்ட பதவிகளையெல்லாம் தாண்டி முன்னேறியுள்ளார்கள். தரீக்காவில், ஸுலூக்கு வழி நடந்து ஓரளவு பலாபலன் பெற்றுள்ளார்கள். ஞானதீபச் சுடர் சிறிதளவு இவர்களுக்குத் திறந்தருளப்பட்டுள்ளது. ஏனையோருக்குச் சித்திக்காத சில காட்சிகள், ஞானத் தோற்றங்கள் இவர்களுக்கு காட்டப்படுகின்றன. இக்காரணங்கள்பற்றி, ''நாம் சித்தி பெற்றுவிட்டோம்'' என்ற அகப்பெருமை இவர்களுக்கு உண்டாகிவிடுகிறது. ''மற்றவர்களுக்கு அடைபட்டிருக்கும் அகக்கண், ஞான வாயில்கள் நமக்குத் திறந்துவிட்டன'' என்ற பெருமிதம் உண்டாகிறது. தமக்குண்டாகும் அபூர்வ ஞானத் தோற்றங்களையும், விசேஷக் காட்சிகளையும் நினைத்துப் பெருமகிழ்வடைந்த தாங்களே பாக்கியசீலர்கள் என்று மருட்சியடைகிறார்கள்.

நிச்சயமாக, இவர்கள் மதிமயங்கியவர்கள்தாம். ஏனெனில், அல்லா(ஹ்)வை அறியும் மஃரிபா பாதையில் ஏற்படும் அதிசய அற்புதங்களுக்கும், காட்சிகளுக்கும் வரம்பே கிடையாது. என்றாலுங்கூட இவர்கள் அவற்றிற்கு ஒரு வரம்பெல்லை கற்பித்துக்கொண்டு, தாமனுபவிக்கும் காட்சிகளும், தோற்றங்களும் அவ்வரம்பின் எல்லையை எய்திவிட்டன, சர்வமும் தங்களுக்குச் சித்தியாகிவிட்டன என்று மகிழ்ந்து மயங்கியுள்ளார்கள். இவ்வண்ணம் ஞான முன்னேற்றப் பாதையில் தடையை உண்டாக்கிக்கொள்கிறார்கள். அதன்மூலம் மெய்ப்பொருள் ஹக்கை அண்டி வஸ்து பெறும் பேரானந்தப் பாக்கியத்தை இழந்தவர்களாகி விடுகிறார்கள்.

அரசனுடைய தரிசனத்தைப் பெறச் சென்ற ஒரு மனிதனை இவர்களுக்கு உவமானமாகக் குறிப்பிடலாம். அரசனின் அரண்மனை வாயிலை அண்டிய அவன், வாயிற்புறத்துக்குப் பக்கத்திலுள்ள அழகிய மைதானத்தில் இருந்த கவர்ச்சி மிக்க நந்தவனத்தையும், அற்புதப் புஷ்பங்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையையும் கண்டு சொக்கிவிட்டான். அவ்விதக் காட்சிகளை அவன் தன் ஆயுளில் கண்டதேயில்லை. எனவே, புதிதாகக் காண நேர்ந்த அவற்றின் கவர்ச்சியானந்தத்தில் லயித்துப் பிரமித்துவிட்டான். அவற்றிலேயே சொக்கி மயங்கிய அவன் அரச தரிசனம் பெறுவதை மறந்து அதற்குரிய சந்தர்ப்பத்தையும் இழந்துவிட்டான். நாடிச் சென்ற காரியத்தை. இழந்து ஏமாறிய இம்மனிதனுடைய நிலைமையிலேயே மேற்கூறியவர்களும் உள்ளனர்.



**ஸூபிய்யாக்களில் உள்ள கடைசி வகையினர்:** மேலே குறிப்பிட்ட வகையினரைப் போல இவர்கள் ஞானவழியில் காணும் காட்சிகளையும், அற்புதத் தோற்றங்களையும் கண்டு மதிமயங்கிவிடவில்லை. தங்களுக்குண்டாகும் அற்புதத் தோற்றங்கள், அருட்காட்சிகளைக் கண்டு சொக்கியிருந்துவிடவில்லை. எனவே, முந்தியவர்களைவிட இவர்கள் விசேஷமானவர்கள்தாம். என்றாலும், மேன்மேலும் முதிர்ச்சியும், பிரயாசையும், துணிவுங்கொண்டு ஞானப் பாட்டையில் உள்ள பல கணவாய்களையும் கடந்து உஸூல் மூலஸ்தானத்தின் சமீபம் நெருங்கிய இவர்கள், அந்தச் சமீப ஸ்தலமே மூலஸ்தானம் என்று நினைத்துத் தாங்கள் மூலஸ்தானமான உஸூலையடைந்துவிட்டதாக முடிவுசெய்து விடுகிறார்கள். இம்முடிவுடன் அந்த வெளியிடத்திலேயே நிற்கிறார்களேயன்றி அதைத் கடந்து யதார்த்த மூலஸ்தானத்திற்கேகவில்லை. இவ்விஷயத்தில் இவர்கள் பெருந் தவறிழைத்துவிட்டனர்.

# முடிவுரை

மாட்சிமையும், மகத்துவமும் மிக்க அல்லாஹ் ஜல்ல ஷஃனுஹூத தஆலாவை அறிந்து பேரின்பமுக்திபெறம் ஞான மார்க்கத்தில் இருள் கொண்டும், ஜோதி கொண்டும் ஆன எழுபது திரைகள் உள்ளன. ஞான பாட்டையில் செல்லும் ஸாலிக் தான் ஒவ்வொரு திரையைத் தாண்டியதும் நிச்சயமாக இறுதி மகாமை அடைந்துவிட்டதாகக் கருதுவான்; ஆனால், அங்கு அத்தகைய திரைகளிலொன்று இருக்கும். இவ்வாறா கவே, ஒவ்வொரு திரையை அண்டும்போதும், தான் பூரண நிலையை எய்திவிட்டதாக அவன் நினைக்கும் வண்ண மிருக்கும்.

''ஆகவே அவர் (நபி இப்ராஹீம்) மீது இரவு கவிந்தபோது அவர் ஒரு நட்சத்திரத்தைக் கண்டு, ''இது என் ரப்பு'' என்றார். பின்னர் அஃது அஸ்தமித்தபோது, ''அஸ்தமிப்பவைகளை நான் நேசிக்கவில்லை'' என்று கூறினார். பின்னர், சந்திரன் உதயமாவதைப் பார்த்தபோது, ''இஃது என் ரப்பு'' என்று கூறினார். அஃது அஸ்தமித்தபோது, ''(அஸ்தமிக்கும் இஃது என் ரப்பு அல்ல.) என் ரப்பு (அல்லாஹ்) எனக்கு நேர்வழி காட்டா விடில் நிச்சயமாக நான் வழிகெட்ட கூட்டத்தாரில் ஒருவனாகி விடுவேன்'' என்றார். (6:7778).... இப்ராஹீம் நபியவர்கள் தமது சமூகத்தாரது கொள்கையைச் சுட்டிக்காட்டி அவர்களின் விளக்கத்துக்குத் தக்க பதில் கூறியதைப் பிரஸ்தாபிக்கும் திருகுர் ஆன் வாக்கியங்கள் ஞான பாட்டையிலுண்டாகும் இத்தகைய திரைத் தடைகளையே சுட்டிக்காட்டுகின்றன இந்த முறையில் திரைகளும் தடைகளும் ஏராளமுண்டு.

அடியானுக்கும் ஆண்டவனுக்கும் இடையே உள்ள பிரதான முதல் திரை அவனுடைய ஆத்மாவேயாகும். ஏனெ னில், அஃது இறைவனின் சார்பு பெற்றுள்ள தனியம்சம் (அம்ரு ரப்பானீ); மகத்துவம் மிக்கது. அல்லா(ஹ்)வின் ஜோதிகளில் மேலான ஜோதி (நூருல்லாஹி) அதுவே. அதில்தான் ஹக்குத் தஆலாவின் இரகசிய உள்ளமை தஜல்லியாகிப் பிரதிபலிக் கிறது. அகில லோகமும் அதிலேயே அடங்கியுள்ளது. சர்வ காட்சிகளும் அதிலேயே உண்டாகின்றன. அதிலே தான் அல்லா(ஹ்)வின் ஞானச் சுடர் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்



கிறது. சர்வத்தின் யதார்த்தத் தோற்ற வுஜூதும் அதில்தான் வெளியாகிறது. ஆரம்பத்தில், அஃது ஒளிப்பிழம்பின் ஜோதிப் பெருக்கால் திரையிடப்பட்டிருந்தது. அப்பெரும் ஜோதியே அதை மூடியிருந்தது. அதன்மீது அல்லா(ஹ்)வின் ஒப்புவமை யற்ற நூர்சுடர் வீசியதும் இதயம் தன் யதார்த்த அம்சத்தைப் பெற்றுவிடுகிறது. தன் அகமியத்தின் சிறப்பு மிக்க ஜமாலிய் யத்தைக் கண்ட ஞானி சில சமயங்களில் பிரமிப்படைகிறான். சில சந்தர்ப்பங்களில் 'அனல் ஹக்' என்று சப்தமிடுகிறான். இவ்வாறான திரையைக் கடந்து மேலான யதார்த்த மகாமை அடையத் தவறிவிட்டவன் நிச்சயமாக மோசம்போய் விட்டவன்தான்.

இத்தகைய போக்கில் தான் கிறிஸ்துவர்கள் சென்றுவிட்டனர். அல்லா(ஹ்)வின் ஒளிப்பிழம்பு மஸீஹ் ஈஸா (அலை) இடம் இருக்கக் கண்டு அன்னாரையே இறைவன் என்று பாவித்துத் தவறிப்போய்விட்டார்கள். தெளிந்த நீரில் அல்லது கண்ணாடியில் சந்திரனுடைய பிரதிபிம்பத்தைக் காணும் ஒருவன் அதுவே சந்திரன் என்று தீர்மானித்து அதைப் பிடிப்பதற்காகக் கை நீட்டுவது போலவே மதிமயங்கி விட்டார்கள். நிச்சயமாக, இவர்கள் மதிமயக்கமுற்றே இவ்வாறு பிசகிவிட்டனர்.

அல்லா(ஹ்)வின் அளவில் சேர்ப்பிக்கும் ஞான பாட்டை யில் (ஸுலூக்கில்) ஏற்படக்கூடிய மதிமயக்க விபரங்கள் இன்னும் எவ்வளவோ உண்டு. அவற்றை இம்மட்டென்று ஏட்டில் எழுத இயலாது. நுணுக்கமான அவற்றையெல்லாம் விளக்கமாக எடுத்தியம்புவது சாமான்யமான கருமமுமன்று.

நுண்ணிய ஞானவிஷயமான பல அந்தரங்களைத் தீர்க்க மாக அலசி அலசிப் பார்த்து அனுபவித்த பின்புதான் ஓரளவு உணரமுடியும். அவைகளை அப்பட்டமாகக் கூறுவது இலகு வான விஷயமன்று. அவ்வாறு துலக்கிக் கூற அனுமதிக்கப் படவுமில்லை. ஆயினும், ஞான வாழி நடப்பவர்கள் மருட்சி, சிக்கல்களில் சிக்கியுழன்று விடலாகாதே என்பதற்காக உணர்ச்சியூட்டச் சில காரியங்களை எடுத்தியம்புவது ஆகுமான தாய் இருக்கிறது.

முன் கூறப்பட்ட மதிமயக்கம், மருட்சி, சிக்கல் முதலிய அபாயங்களிலிருந்து புத்திசாலியானவன் எச்சரிக்கையுடன் விலகிக் கவனமாக நடந்து சித்திபெறுவான்.

அல்லா(ஹ்)வைக் கொண்டே சர்வத்துக்கும் நல்லுதவி உள்ளது. அவனே நமக்குப் போதுமானவன். பொறுப்புச்சாட்ட நம்பிக்கையான பொறுப்புதாரி (வக்கீல்) அவனே. எல்லா விஷயங்களுக்கும் அல்லா(ஹ்)வையே நம்பி இருப்போமாக!

ஈடிணையில்லா மகத்துவமும், மாண்பும் மிக்க அவனன்றி ஓரணுவும் அசையாது; அவனைக் கொண்டல்லாமல் நமக்கு ஒருவித உசும்புதலோ சக்தியோ கிடையாது.

நமக்கு வழிகாட்டியான நாயகம் (ஸல்) மீதும், அவர்களின் அருமைக் கிளையார், உற்றார், உறவினர், சகாக்கள் அனைவரின் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும், ஸலாமும் அருள்வானாக! ஆமீன்

முற்றிற்று.